# இந்திய வரலாறு

## கி.பி 1206 வரை

தொகுப்பாளர்
முனைவர். **இரா.காஞ்சனாதேவி,**
உதவிப்பேராசிரியர்,
வரலாற்றுத் துறை,
பெரியார் கலைக் கல்லூரி,
கடலூர்.

# பொருளடக்கம்

1. இந்தியாவின் இயற்கை அமைப்பும் வரலாறும்

2. சிந்து சமவெளி நாகரீகம்

3. ஆரியர்கள்

4. சமணமும், பௌத்தமும்

5. ஆறாம் நூற்றாண்டில் இருந்த முடியரசுகளும், குடியரசுகளும்

6. அலெக்சாந்தரின் இந்தியப் படையெடுப்பு

7. மௌரிய வம்சம்

8. மௌரியப் பேரரசின் வீழ்ச்சி

9. மௌரியரின் ஆட்சி முறை – சமுதாய, பொருளாதார பண்பாட்டு அம்சங்கள்

10. சுங்கர்கள்

11. கன்வர்கள்

12. குஷாணர்கள்

13. குப்தர்கள்

14. கூணர்கள்

15. ஹர்ஷவர்த்தனர்

16. சாளுக்கியர்கள்

17. இராஷ்டிரகூடர்கள்

18. அரேபியர்களின் சிந்து படையெடுப்பு

19. கஜினிமுகமது

20. கோரிமுகமது

# 1. இந்தியாவின் இயற்கை அமைப்பும் வரலாறும்

**இந்தியா-பெயர்க்காரணம்**

ஆசியாவின் தென் கோடியில் அமைந்துள்ள தீபகற்பம் தான் இந்தியா ஆகும் ரிக் வேத காலத்தில் சிந்து சமவெளிப் பகுதி முக்கியத்துவம் பெற்று விளங்கியது. அங்கு ஏழு நதிகள் பாய்ந்தமையினால் அப்பகுதி 'ஸப்த (ஏழு) சிந்தவா' என அழைக்கப்பட்டது. இதுவே 'ஸப்த ஹிந்து' என்று மருவிற்று. இதனைப் பாரசீகர்கள் பண்டைக் காலத்தில் 'ஹிந்து' என்று அழைத்தனர் பின்னர் கிரேக்கர்கள் 'இந்தியா' என இதை அழைத்தனர். கிரேக்கர்கள் இந்நாட்டிற்கு சூட்டிய பெயராகிய 'இந்தியா' இன்றும் நிலைத்து நிற்கிறது.

**பாரத நாடு - பெயர்க்காரணம்:**

இந்நாட்டினை பழங்காலத்தில் பரதன் என்னும் அரசர் ஆண்டு வந்தார். அவரின் நினைவாக இந்நாட்டினை 'பரத வர்ஷம்' என அழைத்தனர். 'பரத வர்ஷம்' என்ற இந்நாடு காலப்போக்கில் பாரத நாடு எனப் பெயர் பெற்றது. இயற்கை அமைப்பை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவை பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றினை ஒன்றன் பின் ஒன்றாக விளக்கமாகக் காண்போம்.

**இமயமலைப் பகுதி**

இமயமலைத் தொடர்கள் இந்நாட்டின் வட எல்லையாக அமைந்துள்ளன. இவை இந்நாட்டை திபெத்திய பீடபூமியில் இருந்து பிரிக்கின்றன. இதன் நீளம் ஏறத்தாழ 2300 கிலோமீட்டர். அகலம் 200 முதல் 250 கிலோமீட்டர். உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரம் (29140 அடி) இம்மலைத் தொடரில் உள்ளது. இதன் மற்ற உயரமான சிகரங்கள் கஞ்சன் ஜங்கா, தவளகிரி, நங்கபர்வதம், நந்த தேவி ஆகியவை ஆகும்.

இமயமலையில் உள்ள மிக முக்கியமான பீடபூமி காஷ்மீர்ப் பீடபூமி ஆகும். இப்பீடபூமி கடல் மட்டத்துக்கு மேல் 6000 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இது 95 கிலோமீட்டர் நீளமும் 37 கிலோமீட்டர் அகலமும் உள்ளது. இங்கு ஜீலம் நதி பாய்ந்து வளப்படுத்துகிறது. இமயமலையின் கண் அமைந்துள்ள மற்ற பீடபூமிகள் நேபாளப் பீடபூமி, ஷில்லாங் பீடபூமி ஆகியவை ஆகும்.

இமயமலை இந்நாட்டிற்கு நன்மையாகவும் தீமையாகவும் இருந்திருக்கிறது. அன்னியர்கள் படையெடுப்புக்களிலிருந்து இந்தியாவை இது ஓரளவு காத்திருக்கிறது. அதே நேரத்தில் இந்தியர்களின் வெளி உலகத் தொடர்புக்கு இது தடையாகவும் இருந்திருக்கிறது. திபெத்திலிருந்து வீசும் பனிக்காற்று வட இந்தியச் சமவெளியை அணுகாதவாறு காத்திருக்கிறது. மேலும் இது பருவக் காற்றுக்களை தடுத்து நிறுத்தி வட இந்தியச் சமவெளியில் மழை பொழிய வழி செய்திருக்கிறது. கங்கை, யமுனை போன்ற ஆறுகள் இம்மலையிலிருந்து உற்பத்தியாகின்றன.

**இந்துஸ்தான் சமவெளி**

இதனை வட இந்தியச் சமவெளி என்றும் அழைப்பர். சுமார் 2500 கிலோமீட்டர் நீளமும் 200 முதல் 300 கிலோமீட்டர் அகலமும் கொண்ட இச்சமவெளி பஞ்சாப் முதல் அஸ்ஸாம் வரை

பரந்துள்ளது. சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா போன்ற பெருஆறுகளும் அவற்றின் கிளை ஆறுகளும் இச்சமவெளியை வளப்படுத்துகின்றன. இங்கு பேரரசுகள் பல தோன்றி தழைத்து ஓங்கி இருந்தன.

### மத்திய இந்திய பீடபூமி

இந்துஸ்தான் சமவெளியை அடுத்து மத்திய இந்திய பீடபூமி அமைந்துள்ளது. இப்பீடபூமியின் குறுக்கே விந்திய, சாத்பூரா மலைத் தொடர்கள் அமைந்துள்ளன. நர்மதை, தபதி என்ற ஆறுகள் இப்பீடபூமியின் நிலங்களை வளம் செய்கின்றன. இம்மலைகளும் ஆறுகளும் வட இந்தியாவைத் தென்னிந்தியாவிலிருந்து பிரிக்கின்றன.

### தக்காண பீடபூமி

இந்துஸ்தான் சமவெளிக்குத் தெற்கேயுள்ள நிலப்பகுதி தக்காண பீடபூமி எனப்படும். தக்காண பீடபூமி மேற்கே உயர்ந்தும் கிழக்கே தாழ்ந்தும் அமைந்துள்ளது. மேற்கே உயர்ந்த மேற்கு தொடர்ச்சி மலைகளும் கிழக்கே கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் கடற்கரையோரத்தே பரவி அமைந்துள்ளன. இந்த இரு மலைத் தொடர்களும் நீலகிரி மலைக்கருகே ஒன்று சேர்கின்றன. அதற்கப்பறம் ஆனை மலைகளும் கடுகு மலைகளும் உள்ளன. நீலகிரி மலைகளுக்கும் கடுகு மலைகளுக்குமிடையே பாலக்காட்டுக் கணவாய் அமைந்துள்ளது.

### தென்னிந்தியா:

கிருஷ்ணா ஆற்றுக்குத் தெற்கில் அமைந்துள்ள பகுதி தென்னிந்தியா அல்லது தென் மண்டலம் எனப்படுகிறது. இப்பகுதியில் ஆந்திரா, கர்னாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகியவை அடங்கியுள்ளன. கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரை, காவேரி, வைகை, தாமிரபரணி முதலிய ஆறுகள் மேற்கில் தொடங்கி கிழக்கில் வங்கக் கடலில் சங்கமமாகின்றன.

### வரலாற்றில் புவியியல் வகித்திடும் பங்கு அயல் நாடுகளில் குடியேற்றம் அமைக்காமை

நம் பாரத நாடு உலகின் மிகப் பரந்த நாடுகளில் ஒன்றாகும். இது ஏறக்குறைய 46,62,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது. கிழக்கிலிருந்து மேற்காக 3000 கிலோமீட்டர் நீளமும், வடக்கிலிருந்து தெற்காக 2500 கிலோமீட்டர் நீளமும் கொண்டது. இவ்வண்ணம் இந்தியா ஒரு பரந்த நாடாய் விளங்கி வருவதால் அதன் வரலாறு பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கிறது. மேலை நாடுகளை ஆண்ட மன்னர்கள், தங்களின் நாடுகள் அளவில் சிறியனவாய் இருந்தமையால் அயல் நாட்டில் குடியேற்றங்கள் நிறுவுவதில் ஆர்வம் காட்டினர். நம் மன்னர்கள் அயல் நாடுகளில் குடியேற்றம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளாததற்குக் காரணம் நம் நாட்டின் பரந்த நில அமைப்பேயாகும்.

### இந்திய மன்னர்கள் வெளிநாடுகளைப் பிடிக்க முயற்சி செய்யாமை

இந்தியா பரப்பளவில் மிகப் பெரிய நாடு. ஆகவே இந்திய மன்னர்கள் நாடு பிடிக்கும் வேட்கையைத் தணிக்கின்ற அளவுக்கு இந்தியாவிலேயே பல நாடுகள் இருந்தன. அவற்றை வெல்லுவதிலேயே அவர்களின் கவனம் முழுவதும் சென்றதேயன்றிப் பிறநாடுகளின் மேல் படையெடுக்க வேண்டுமென்ற விருப்பமே அவர்களிடம் ஏற்படாமல் போயிற்று.

### இந்தியா முழுமைக்கும் தனிப்பட்ட அரசு அமையாமை:

இந்தியா என்றைக்குமே ஒரு தனிப்பட்ட அரசின் கீழ் அமையாமல் இருந்ததற்கும் அதன் பரப்பே காரணமாகும். இயற்கையால் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட பகுதிகள் தனித்தனியாக இயங்க முற்பட்டன. அசோகர், சமுத்திர குப்தர், அக்பர் போன்ற பேரரசர்கள் இதனை ஒரு குடையின்கீழ் கொணர முயன்று ஓரளவு வெற்றி பெற்றனர். அவர்களால் இணைக்கப்பட்ட நாடு அவர்களுடைய மரணத்திற்குப்பின் பழையபடி பிரிந்து போய்விட்டதை நாம் காண்கிறோம்.

### அயல்நாட்டுத் தொடர்பின்மை:

இந்தியாவின் மிகப்பரந்த நிலையானது இந்திய மக்களையும் மன்னர்களையும் ஏனைய நாடுகளைப் பற்றி நன்கு அறியவொட்டாமல் தடுத்தது. அண்டை நாடுகளில் வளர்ந்து வந்த இராணுவச் சூழ்ச்சிகளையும் புதிய படைக் கருவிகளையும் அவர்கள் அறியாமல் போயினர்.

இவ்வாறு தனித்து இயங்கியமையால் பல இன்னல்களை எய்தினர். இமயமலை கொடுக்கும் பாதுகாப்பு போதுமானது என்ற எண்ணத்தில் இந்திய மன்னர்கள் வட திசை பாதுகாப்பு ஏற்பாடுகளை அலட்சியம் செய்தனர். ஆனால் இமயமலையின் வடமேற்குப் பகுதிகளில் உள்ள கணவாய்கள்-கைபர் போலன், டோக்கி ஆகியவை இந்நாட்டிற்குள் அன்னியர் வந்து புக வழி அமைத்துக் கொடுத்தது. இக்கால்வாய்கள் வழியாகத் தான் பாரசீகர், கிரேக்கர், கூனர், துருக்கியர், மங்கோலியர் மற்றும் மொகலாயர் நம் நாட்டின் மீது படையெடுத்து வந்தனர்.

**உள்நாட்டுத் தொடர்பு இன்மை:**

விந்திய மலை இந்தியாவை இரு பகுதிகளாகப் பிரித்தமையால் தென் இந்தியாவிற்கும் வட இந்தியாவிற்குமிடையே நெருங்கிய அரசியல் பண்பாட்டுத் தொடர்பு ஏற்படாமல் போயிற்று.

**நாகரிகத் தோற்றம்:**

சிந்து ஆறு நிலத்தை வளம் கொழிக்கச் செய்தமையால் தான் சிந்து சமவெளியில் ஒரு சிறந்த நாகரிகத்தை தோற்றுவித்தது. இவ்வாற்றின் ஓரத்திலேயே பழங்காலத்தில் பல பெரிய நகரங்கள் தோன்றின. அவற்றில் குறிப்பிடத் தக்கவை பெனாரஸ், பிரயாகை, மதுரா ஆகியவை ஆகும்.

**வேற்றுமையில் ஒற்றுமை:**

இந்தியா இயற்கையில் துண்டாடப்பட்டு கிடப்பதன் விளைவாகவே பண்டைக்காலத்தில் அந்தந்தப் பகுதி மக்கள் அவரவர்களுக்கேயுரிய பண்புகளையும் நாகரிகத்தையும் உண்டாக்கிக் கொண்டனர். இதனால் அரசியல் துறையில் ஒற்றுமை ஏற்பட வழியில்லாமல் போயிற்று. வேற்றுமை உணர்வு வேர் விட்டு வளரத் தொடங்கியது.

**கால நிலையில் வேற்றுமை:**

பனி பெய்யும் காஷ்மீரமும் வெயில் கொளுத்தும் இராசபுதனப் பாலைவனமும் வெவ்வேறு தட்ப வெப்ப நிலைகளை உடைய பகுதிகளாகும். உலகிலேயே அதிக மழை பெய்கின்ற அஸ்ஸாம் பிரதேசத்தையும் மிகக் குறைந்த மழை பெய்கின்ற இராசபுதனத்தையும் கொண்டது இந்தியா. இது கால நிலையில் உள்ள வேற்றுமையன்றோ!

**பிற வேற்றுமைகள்:**

இனம், மொழி, சமயம் சமுதாயப் பிரிவுகள் ஆகியவற்றின் அடிப்படையிலும் இந்தியா வேற்றுமைகள் நிரம்பி இருக்கிறது. திராவிடர், ஆரியர், சிந்தியர், சாகர் ஆகிய இனத்தவர்கள் இங்கு வாழ்கின்றனர். இங்கு வாழும் மக்கள் இந்தி, உருது, வங்காளி, தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற பல்வேறுபட்ட மொழிகளைப் பேசுகின்றனர். இங்கு பௌத்தம், சமணம், பார்ஸி, இந்து இஸ்லாம், கிருத்துவம் போன்ற பற்பல சமயங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றனர்.

**வேற்றுமையில் ஒற்றுமை:**

இவ்வாறு பல வேறுபாடுகள் இருந்தபோதும் இந்நாட்டில் ஒற்றுமை சிறந்து விளங்குகிறது. இதனையே பேராசிரியர் வின்சென்ட் ஸ்மித் “மேல் நோக்கில் வேறுபாடுகளே நிரம்பி இருப்பது போல் தோன்றும் மிகக் கவனத்தோடு இந்நாட்டினை உற்று நோக்கினால் நாம் இந்நாட்டில் வேற்றுமையில் ஒற்றுமையை தெளிவாகக் காணலாம் என்று கூறுகிறார்.

இந்நாட்டின் புவியியல் அமைப்பு இதற்கொரு தெளிவான இயற்கை எல்லைகளைக் கொடுத்து புவியியல் ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ளது. இந்து சமயம் ஒற்றுமையை வளர்க்க உதவி செய்கிறது. இந்துக்களின் புனித யாத்திரையில் தென்னிந்தியாவின் புனிதத் தலங்களும் வட இந்தியப் புனிதத் தலங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தியா முழுவதும் சில அரசியல், சமயத் தலைவர்கள் மதிக்கப்படுகின்றனர். இவையெல்லாம் வேற்றுமையில் ஒற்றுமையுணர்வை ஏற்படுத்தும் கூறுகள் ஆகும். பொதுவான கல்வி நிறுவனங்கள் சமஸ்கிருதமொழியும் பண்டைய காலத்தில் ஒற்றுமைக்கு உதவின. சந்திரகுப்தமௌரியர், சமுத்திரகுப்தர், அக்பர் போன்ற மன்னர்கள் அரசியல் ஒற்றுமைக்காகத் தென்னிந்தியாவில் போர் தொடுத்தமை குறிப்பிடதக்கது. மொகலாயரும், ஆங்கிலேயரும் ஒரே மாதிரியான முறையை உருவாக்கி இந்தியாவின்

ஒற்றுமைக்கு உதவியுள்ளார்கள். இமயம் முதல் குமரிவரை பல இனத்தவர் வாழ்ந்தாலும் அனைவரும் பொதுவான ஓர் வாழ்க்கை முறையைப் பின்பற்றுகின்றது. இந்தியர் அனைவரும் பாரத நாட்டைச் சார்ந்தவர்கள் என்ற நாட்டுப்பற்று மக்களிடையில் நிலவி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்திய வரலாற்று மூலங்கள்:

இந்திய வரலாற்று மூலம் பல உள்ளன. கல்வெட்டு உண்மைகள் முதல் பாணர் எழுதிய ஹர்ஷரது வாழக்கை வரலாறு வரையிலுமுள்ள மூலங்கள் இவ்வகையைச் சார்ந்தவைகளே.

மூலங்களின் துணை கொண்டு பழைய நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் காட்டுவதே வரலாறு ஆகும். ஆனால் பழையகால வரலாற்றை விளக்கும் நூல்கள் படைக்கப் பெறாமையால் அக்கால வரலாற்றைப் படிக்கும் மாணவர்கள் பெரிதும் குழப்பமான அரசுகளின் எழுச்சியும், வீழ்ச்சியும் பற்றிய நிகழ்ச்சி குறிப்புகள் நமக்குக் கிடைத்துள்ளன. பண்டை இலக்கியங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், செப்பேடுகள், புதையுண்ட நகரங்கள், அயல் நாட்டு யாத்திரிகளின் குறிப்புகள் முதலியவை மூலம் நமது பண்டைய வரலாற்றை அறிய இயலுகின்றது. அவற்றைப் பற்றி விளக்கமாகக் காண்போம்.

### வேதங்கள்

இலக்கிய மூலங்களுள் காலத்தால் முற்பட்டவை வேதங்கள். அவையாவன இருக்கு வேதம், சாம வேதம், யசுர் வேதம், அதர்வண வேதம். ஆரியர்கள் இந்தியாவினுள் பஞ்சாபில் குடி புகுந்தது முதல் கங்கைச் சமவெளியில் பெரிய அரசுகளை நிறுவியது வரையில் அவர்களின் வரலாறு, பண்பாடு, தொழில், சமயம் முதலிய பலவற்றையும் அறிந்துகொள்ள இந்நான்கு வேதங்களும் துணை புரிகின்றன.

### பிராமணங்கள்

வேதங்களுக்கு விளக்கங்கள் உரைநடையில் எழுதப்பட்டன. அவை பிராமணங்கள் ஆகும். இப்பிராமணங்கள் இந்தியாவின் பண்டையச் சமயக் கோட்பாடுகளை அறிவதற்கு இன்றிமையாத-வையாகத் திகழ்கின்றன.

### இதிகாசங்கள்

இராமாயணம், மகாபாரதம் என்ற இரண்டு காப்பியங்களும் இந்திய வரலாற்றை எழுதுவதற்கு மிகவும் பயன்படுகின்றன. அக்காலத்தின் அரசியலையும், சமுதாய வாழ்வையும் இக்காப்பியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. இவ்விரண்டு காப்பியங்களும் கி.மு. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னரே எழுதப்பட்டிருக்க வேண்டும்.

### புராணங்கள்

*பண்டைய மன்னர் குலங்களின் பட்டியல்களையும், மன்னர்களின் பெயர்களையும்,* அவர்கள் ஆட்சி புரிந்த ஆண்டுகளையும் புராணங்களின் மூலம் அறிகிறோம். புராணங்களின் எண்ணிக்கை பதினெட்டு. அவற்றினால் முக்கியமான புராணங்கள், பிரம்ம பிராணம், விஷ்ணு புராணம், வாயு புராணம், அக்னி புராணம், மார்க்கண்டேய புராணம் ஆகியவையாகும். காப்பிய காலத்திலிருந்து புத்தர் காலம் வரையிலான வட இந்திய அரசியல் வரலாற்றை இப்புராணங்கள் மூலமாகவே அறிந்து கொள்கிறோம். மௌரிய அரச குலத்தைப் பற்றிய நம்பத் தகுந்த தகவல்களை விஷ்ணு புராணம் நமக்கு அளிக்கிறது என்பது டாக்டர். வின்சென்ட் ஸ்மித்தின் கருத்து.

### ஜாதகக் கதைகள்

பௌத்த சமய இலக்கியங்களும் இந்திய வரலாற்றை எழுத பெரிதும் பயன்படுகின்றன. நம் நாட்டு பௌத்த இலக்கியங்களில் ஜாதகக் கதைகள் (Jatahas) குறிப்பிடத்தக்கவை. இதுவரை சுமார் 550 ஜாதகக் கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இக்கதைகள் புத்தரது பிறப்பைப் பற்றியும், புத்த சமயம் தோன்றிய வரலாற்றையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இக்கதைகள் கி.மு. 2 அல்லது 3 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம். அந்த கதைகள் பெரிதும் பயன்படுகின்றன.

**அரசியல் வரலாற்று நூல்கள்**

சாணக்கியரின் உதவியுடன் நந்தர்களைக் கவிழ்த்து விட்டு சந்திர குப்த மௌரிய ஆட்சிப் பீடம் ஏறிய விதத்தை நாடகமாக விளக்குகிறது. விசாகதத்தர் எழுதிய முத்ராராட்சசம் மௌரியர் காலத்து அரசியல் முறைகளையும் சமுதாய அமைப்பையும் விளக்குகிறது. சாணக்கியர் எழுதிய அர்த்த சாத்திரம், பாணினியின் அஷ்டாத்யாயியும், பதங்சலியின் மாபாட்டியமும் சமஸ்கிருத இலக்கண நூல்கள். இவ்விலக்கண நூல்களின் அன்றைய அரசியல் சமுதாய நிலைகளைப் பற்றிய குறிப்புகள் பல நிறையக் காணப்படுகின்றன. குப்தர்கள் காலத்தில் ஏராளமான நூல்கள் எழுதப்பட்டன. அவற்றுள் மிகவும் முக்கியமானவை காளிதாசரின் சாகுந்தலம், மேகதூதம், குமாரசம்பவம் ஆகியவை ஆகும். அக்காலத்திய சமுதாயம், கலை, சமயம், பொருளாதாரம் முதலியவற்றைப் பற்றி இந்நூல்கள் வழியாக அறிய முடிகிறது. பாணர் எழுதிய ஹர்ஷ சரிதம் நமக்கு ஹர்சரது ஆட்சியையும் அவருடைய தந்தை, தமயன் ஆட்சிகளையும், போர்களையும் பற்றி விரிவாகக் கூறுகிறது. ஹர்ஷரது வரலாற்றை எழுத இந்நூல்கள் பெரிதும் பயன்படுகிறது.

**கல்வெட்டுக்கள்**

பாறைகள், தூண்கள், கற்பலகைகள், செப்பேடுகள் ஆகியவற்றின் மீது பல்வேறு காலங்களில் பல்வேறு செய்திகளும் நிகழ்ச்சிகளும் பொறிக்கப்பட்டன. நூல்களைப் போல் இவற்றை எளிதில் அழிக்கவோ, திருத்தி எழுதவோ முடியாது. நமக்கு இதுவரையில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் மிகவும் பழமையானவை அசோகருடைய கல்வெட்டுக்கள், அசோகருடைய ஆணைகள், அவருடைய ஆட்சிமுறை, போர்கள், சமயக் கருத்து முதலிய பலவற்றைப் பற்றிய தகவல்கள் அக்கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. அவரது ஆட்சிக் காலத்தைப் பற்றி அறிவதற்கு அவை பெரிதும் பயன்படுகின்றன. இக்கல்வெட்டுக்கள் மூலமாக நம்முடைய பண்டைய எழுத்து வடிவங்களைப் பற்றியும் கூட நாம் அறிய முடிகிறது.

மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற சிந்து வெளி அகழ்வுகளில் கண்டெடுக்கப்பட்ட களிமண் முத்திரைகளின் மீது பல எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவை இன்னமும் படித்துணரப்படாமையால் அவற்றைப் பற்றி நம்மால் எதுவும் கூற இயலவில்லை.

சமுத்திர குப்தரின் வெற்றிகளை ஹரிசேனர் செய்யுள் வடிவில் பாடினார். அச் செய்யுள் அசோகரது கற்றூண் ஒன்றின் மீது பொறிக்கப்பட்டு உள்ளது. அத்தூண் இன்று அலகாபாத் கோட்டையில் உள்ளது. கலிங்கத்தை ஆண்ட காரவேலரைப் பற்றிய செய்திகளைக் கூறும் ஹதிகும்பாக் கல்வெட்டும், பிரதிகார மன்னரான போஜரைப் பற்றி குவாலியர் கல்வெட்டும், பிரதிகார வரலாற்றை எழுத பெரிதும் துணை புரிகின்றன. கல்வெட்டுக்கள் கிடைக்கும் இடங்களை வைத்து ஒரு மன்னரின் நாட்டு எல்லைகளைக் கணக்கிட முடிகிறது.

**நாணயங்கள்:**

கல்வெட்டுகளுக்கு அடுத்தபடியாக நாணயங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களால் செய்யப்பட்ட நாணயங்கள் ஆயிரக் கணக்கில் நமக்குக் கிடைத்துள்ளன. ஒரு அரசின் பொருளாதார நிலையை மதிப்பிடுவதற்கு நாணய ஆராய்ச்சி அவசியமானது. அலெக்சாந்தரது படையெடுப்புக்குப் பிறகு வெளியிட்ட நாணயங்களில் மன்னரின் பெயர்களும், உருவங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. பாக்டிரியாவை அலெக்சாந்தருக்குப் பின்னர் ஆண்ட மன்னர்கள் வெளியிட்ட சுமார் 30 நாணயங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றிலிருந்து சுமார் இரண்டு நூற்றாண்டுக் காலம் இந்தியாவின் பகுதிகளை ஆண்ட கிரேக்க மன்னர்களின் வரலாற்றை அறிந்து கொள்கிறோம்.

குஷாணர்களும் ஏராளமான நாணயங்களை வெளியிட்டனர். சாதவாகனங்கள் பல நாணயங்களை வெளியிட்டனர். இவர்களது நாணயங்கள் புராணங்களில் கூறும் செய்திகளை உறுதி செய்ய உதவுகின்றன. குப்தர் காலத்துக்குப் பிறகு நாணயங்களைக் கொண்டு அவ்வளவாக வரலாற்றை அறிய இயலவில்லை. சமுத்திர குப்தரின் காசு ஒன்றில் வீணையை மீட்டுவது போல அவர் உருவம் காணப்படுகிறது. இக்காசிலிருந்து நாம் அக்காலத்து வீணையின் அமைப்பை

அறிகிறோம். மேலும் அம்மன்னர் இசையில் விருப்பமுடையவரா-யிருந்தார் என்பதையும் தெரிந்து கொள்கிறோம். ஹீணரது படையெடுப்புக்குப் பின்னர் குப்தர்கள் தங்க நாணயங்களை அதிகம் வெளியிடவில்லை. இதிலிருந்து குப்த பேரரசின் பொருளாதார நிலை அக்கால கட்டத்தில் சீர்குலைந்தது என்பதை அறிந்து கொள்கிறோம். பல குப்த நாணயங்ளின் மீது இந்து சமயக் கடவுள்களின் உருவங்கள் காணப்படுகின்றன. குப்த மன்னர்கள் இந்து சமயத்தை சேர்ந்தவர்கள் என்பதை இது உணர்த்துகிறது. அத்தோடு மற்ற சமயங்களின் செல்வாக்கு குறைந்து வந்ததையும், இந்து சமயத்தின் செல்வாக்கு பெருகி வந்ததையும் இத்தகைய நாணயங்கள் காட்டுகின்றன.

***பண்டைக்காலத்துச் சின்னங்கள்:***

புதை பொருளாராய்ச்சியின் விளைவாக புதையுண்டு போன பண்டை நகரங்கள், கட்டிடங்கள், சிலைகள், பாண்டங்கள், அணிகலன்கள் முதலியன பற்றி பல செய்திகள் நமக்குத் தெரிய வருகின்றன. இவ்வாறு கண்டெடுக்கப்படும் பொருட்களைக் கொண்டு அன்றைய வரலாறு, கலை, பண்பாடு முதலிய பலவற்றை நாம் அறிய முடிகிறது.

இந்திய நாகரிகத்தின் தொடக்கமே வேத காலத்திலிருந்து தான் என்று சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு அனைவரும் உறுதியோடு நம்பினர். ஆனால் சிந்து வெளியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி இந்த முடிவுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற புதையுண்ட நகரங்களின் கண்டுபிடிப்பு இந்திய நாகரிகத்தின் துவக்கத்தை சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகத் தள்ளி வைத்தது. தட்சசீலம், சாரநாத், நாளந்தா போன்ற இடங்களில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டு பல பொருட்கள் கண்டுபிடிக்கப்-பட்டுள்ளன. இலக்கியங்கள் சொல்லப்பட்டிருப்பதை இந்த அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. நாளந்தாவில் அகழ்வாய்வு டாக்டர் ஸ்பூனர் தலைமையில் நடந்தது. இந்த ஆய்வின் மூலம் நமக்கு புத்த சமயச் சின்னங்களான ஸ்தூபிகள், ஆலயங்கள், மடங்கள் தெரியவந்துள்ளன.

***அயல் நாட்டாரின் நூல்கள்:***

வரலாற்றின் தந்தை என அழைக்கப்படும் ஹெரடோட்டஸ் (Herodotus) வரலாற்று ஆசிரியர் கிரேக்க பாரசீகப் போர்களின் வரலாற்றைத் தீட்டியுள்ளார். பாரசீகப் பேரரசைப் பற்றி அவர் எழுதுகின்றபோது அதன் இருபதாவது மாநிலமாக இருந்த வட மேற்கு இந்தியாவைப் பற்றியும் எழுதுகிறார். ஸ்டெசியாஸ் (Ctesias) என்ற மற்றொரு கிரேக்கர் இந்தியாவைப் பற்றிய ஏராளமான கட்டுக் கதைகளை எழுதியுள்ளார். அலெக்சாந்தரின் கடற்படை தலைவராக இந்தியாவுக்கு வந்தவர் நியார்க்கஸ் (Nearchos) இவர் தந்த செய்திகளை தொகுத்து அர்ரியன் (Arrian) வரலாற்று புத்தகம் ஒன்று வெளியிட்டார். இந்நூல் பஞ்சாப், சிந்து முதலிய பகுதிகளின் அரசியல், சமுதாய நிலையைப் பற்றியும், அலெக்சாந்தரது படையெடுப்பைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு துணை புரிகிறது.

செலுகஸ் நிகேட்டர் மெகஸ்தனிசை தனது தூதுவராக சந்திரகுப்த மௌரியரின் அரசவைக்கு அனுப்பினார். இந்த மெகஸ்தனிஸ் எ' திய 'இண்டிகா' என்ற நூல் இன்று கிடைக்கவில்லை. ஆயினும் அதிலிருந்து பல பகுதிகளை வேறு ஆசிரியர்கள் எடுத்தாண்டுள்ளனர். அப்பகுதி நமக்கு இந்திய வரலாற்றை எழுத பெரிதும் பயன்படுகின்றன.

கி.பி.முதலாம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் எழுதப்பட்ட பெரிப்புளூஸ் என்னும் நூல் ஒரு கிரேக்க அறிஞரால் எழுதப்பட்டது. அவர் பெயர் என்ன என்று நமக்கு தெரியவில்லை. அவர் எகிப்தில் அலெக்சாண்டிரியாவில் வாழ்ந்த கிரேக்கர் என்பது மட்டும் தெரிய வருகிறது. இந்தியத் துறைமுகங்களைப் பற்றியும், அங்கு ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பட்டியல்களும் பெரிப்புளூஸ் தெளிவாகக் கூறுகிறது. நம் நாட்டு மிருகங்கள், மரங்கள், செடிகள், கனிப் பொருள்கள், முதலியவற்றைப் பற்றி பிளினி (Pliny) என்ற மற்றொரு கிரேக்க புவியியல் அறிஞர் எழுதியுள்ளார். இவரும் கி.பி. முதல் நூற்றாண்டிலேயே வாழ்ந்திருக்க வேண்டும்.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டிலேயே வாழ்ந்திருக்க வேண்டும். இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தாலமி (ptolemy) என்ற மற்றொரு புவியியல் அறிஞர் நம் நாட்டைப் பற்றிய புவியியல் நூல் ஒன்றை எழுதிச் சென்றுள்ளார். கிரேக்க சான்றிதழுக்கு அடுத்தபடியாக *சீன* யாத்திரிகர்களின் நூல்கள் இந்திய வரலாற்றை எழுத பயன்படுகின்றன. கி. பி. 5 ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பாஹியான் (Fa-Hine), ஏழாம் நூற்றாண்டில் வந்த யுவான்சுவாங் (Hiuen-Tsang) ஆகியோருடைய நூல்கள் இந்திய புத்த சமயத்தைப் பற்றிய செய்திகளை நமக்குச் சொல்கின்றன. யுவான்சுவாங்கின் நூல் ஹர்ஷ வர்த்தனர் பற்றி நிறைய தகவல்களை நமக்கு தருகிறது. மேற்கூறிய வரலாற்று மூலங்களிலிருந்து வரலாற்று உண்மைகளை பிரித்தெடுப்பது ஆற்று மணற் படுகையில் தங்கத் துகள்களை பிரித்தெடுப்பது போலாகும் என பேராசிரியர் ஆக்டன் கருதுகிறார்.

நாம் மேற்கண்ட மூலங்களில் ‌௳_யச்சார்பற்ற இலக்கியங்கள் நம்பத்தகுந்த பல உண்மைகளைத் தருகின்றன. அதே நேரத்தில் சமயச்சார்புள்ள இலக்கியங்கள் பாரபட்சமற்றது என்று கூற இயலாது. ஏனெனில் அவை குறிப்பிட்ட சமயத்தை வியந்தும் கூறலாம். அயல்நாட்டுக்குறிப்புகள் வரலாற்றுக் கருவூலம் எனக் கூறினால் மிகையாகாது. புதைபொருள் மூலங்களில் கல்வெட்டுக்களும், நாணயங்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மேற்குறிப்பிட்டபடி மூலங்கள் கிடைக்கவில்லையெனின் பழைய கால இந்திய வரலாறு மறைபொருளாகவே இருந்திருக்கக்கூடும்.

---

# 2. சிந்து சமவெளி நாகரிகம்

நாகரிக வளர்ச்சியின் வரலாற்றில் ஆதிகுடிகளின் வாழ்க்கை முறை முக்கிய இடத்தை பெறுகிறது. அவர்களது படிப்படியான முன்னேற்றம் நாகரிக வளர்ச்சிக்கு மிகவும் உதவியுள்ளது. ஆதிகுடிகளின் வரலாற்றை அவர்கள் பயன்படுத்திய கருவிகளின் அடிப்படையில் 1) பழைய கற்காலம் 2) புதிய கற்காலம் 3) உலோக காலம் என மூன்றாகப் பகுக்கலாம்.

**பழங்கற்காலம்:**

கி.மு.10,000க்கு முற்பட்ட காலம் பழங்கற்காலம் (Palaeolithic period) என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் மனிதன் முதன் முதலில் வாழ்ந்த இடம் மேற்கு பஞ்சாப் மலையடிவாரமே ஆகும். அங்கு ஆதி மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள் காணக் கிடைக்கின்றன. பழங்கற்காலம் சுமார் 3 இலட்சம் ஆண்டுகள் நீடித்ததாகக் கொள்ளலாம். பழங்கற்கால மனிதர்கள் கரடு முரடான கல்லாயுதங்களைப் பயன்படுத்தினர். எலும்பு, மரம் ஆகியவற்றிலும் தங்களது கருவிகளைச் செய்து கொண்டனர். உலோகங்களைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. நிரந்தரமான வீடுகள் கட்டிக் கொள்ளாத அவர்கள் குகைகளிலும் மரக் கிளைகளிலும் வாழ்ந்தனர். மிருகங்களை வேட்டையாடி அதன் இறைச்சியை உண்டனர். விவசாயம் செய்யும் முறை அவர்களுக்குத் தெரியாது. தீயினை மூட்டுவதும் அதன் பயனும் அவர்களுக்குத் தெரியாது. முறையாக பேசக் கூடத் தெரியாத அவர்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தார்கள் எனச் சொல்வது சாலப் பொருந்தும்.

**இடைக்கற்காலம்:**

பழைய கற்காலத்துக்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் இடைக்கற்காலம் எனப்படுகிறது. இது கி.மு.10,000க்கும் கி.மு.6000க்கும் இடைப்பட்டது. இடைக் கற்கால மனிதர்கள் ஆற்றங்கரைகளில் வாழ்ந்தனர். கல், மரம், எலும்பு போன்றவற்றால் கருவிகளைச் செய்து பயன்படுத்தினர். ஆடு, மாடு, மீன், குதிரை, முதலை, எலி போன்றவற்றை உண்டனர். நாய்களை தங்கள் வளர்ப்பு மிருகமாக பழக்கப்படுத்தி வைத்திருந்தனர்.

**புதிய கற்காலம்:**

இந்தியாவில் கி.மு.6000-லிருந்து கி.மு.4000 வரையில் புதிய கற்காலம் நிலவியது. இப்புதிய கற்கால மனிதர்கள் மெருகேற்றப்பட்ட வழவழப்பான கற்களால் ஆன கருவிகளைப் பயன்படுத்தினர். இவர்கள் ஆடு, மாடுகள் மேய்க்கவும், விவசாயம் செய்யவும், கிராமங்கள் அமைக்கவும் அறிந்து கொண்டனர். ஆடு, மாடு, நாய், பன்றி, கோழி போன்றவற்றை இவர்கள் வீட்டு விலங்குகளாக பழக்கப்படுத்தி வைத்திருந்தனர். இவர்கள் கற்களை உரசி தீ உண்டாக்கத் தெரிந்து கொண்டனர். இவர்கள் தங்களது ஆடைகளை பருத்தியாலும், கம்பளியாலும் நெய்து கொண்டனர். படகுகள் கட்டவும் இவர்கள் அறிந்திருந்தனர். இவர்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக விளங்கி இருக்கக் கூடும்.

**உலோக காலம்:**

எகிப்து மெசபொடேமியா, சீனா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வெண்கலக் காலம் (Bronze Age) வந்தது. ஆனால் இந்தியாவில் வெண்கலம் அவ்வளவு கூடுதலாக பயன்படுத்தப்படவில்லை. வட இந்தியாவில் செம்பும், தென்னிந்தியாவில் இரும்பும் புதிய கற்காலத்திற்குப் பின் பயனுக்கு வந்தன. இது மிக முக்கியமான வேறுபாடு ஆகும். கி.மு.4000ம் ஆண்டு வாக்கில் வட இந்தியாவில் செம்பு உபயோகத்திற்கு வந்தது. அதன் விளைவுதான் சிந்து சமவெளி நாகரிகம் ஆகும். கி.மு.1000க்குப் பின்னரோ அல்லது சிறிது முன்னரோ தான் வட இந்தியாவில் பரவலாக குறிப்பாக குன்கிரியா, கான்பூர், மணிபுரி முதலிய இடங்களிலிருந்து கோடாரி, வாள், ஈட்டிமுனை, பிச்சுவா, குத்தூசி முதலிய கருவிகள் கிடைத்துள்ளன. இவைகள் அனைத்தும் தாமிரத்தால் செய்யப்பட்டவை. பல வெள்ளிப் பாத்திரங்களையும் தொல்பொருள் நிபுணர்கள் கண்டெடுத்துள்ளனர். தாமிரத்தை அடுத்து

அதைவிடவும் உறுதியான வெண்கலம் பயனிற்கு வந்தது. அதற்குப்பின்னர் இரும்பு பயன்படுத்தப்பட்டது விளைவாக நாகரிகம் உயர் நிலையை அடைந்தது. மக்கள் நிரந்தரமாக ஓரிடத்தில் வாழ்ந்து நகரங்களை அமைத்தனர். ஆறுகளின் மூலம் போக்குவரத்தும் வாணிபமும் பெருகின.

***சிந்து சமவெளி நாகரிகம்:***

வேத கால நாகரிகமே இந்தியாவின் முதல் நாகரிகம் என்று வெகுகாலம் கருதப்பட்டு வந்தது. 1922ல் சிந்து மாநிலத்தில் மொகஞ்சதாரோ என்ற இடத்தில் இடிந்து, புதைந்து கிடந்த புத்தமடாலயங்களை அகழ்ந்து பார்க்கும் பணியில் பானர்ஜி ஈடுபட்டார். சித்திர எழுத்துக்களைக் கொண்ட பல களிமண் முத்திரைகளை அவர் அப்பகுதியிலிருந்து கண்டெடுத்தார். ஏற்கனவே பஞ்சாபிலுள்ள ஹரப்பாவில் அத்தகைய முத்திரைகள் கிடைத்திருந்தன. இரண்டு இடங்களிலும் கிடைத்த முத்திரைகளை ஒப்பு நோக்கிப் பார்த்த சர் ஜான் மார்சல் அம்முத்திரைகள் வேதகாலத்திற்கு முந்தியவை என்று முடிவு செய்தார் கி.மு.2000-3000ல் சுமேரியாவில் நிலவிய நாகரிகத்திற்கும் சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் ஒற்றுமைகள் இருப்பதை கொண்டு வரலாற்று வல்லுனர்கள் இந் நாகரிகத்திற்கு இந்திய-சுமேரிய நாகரிகம் என முதலில் பெயரிட்டனர். பின்னர் இது தனிப்பட்டதொரு நாகரிகம் என்றும், இந்நாகரிகத்திற்கும் ஏனைய நாகரிகங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இல்லை என்றும் கருதிய வரலாற்ற அறிஞர்கள் இதற்கு சிந்து சமவெளி நாகரிகம் எனப் பெயரிட்டனர். ஹரப்பா பஞ்சாபில் இராவி நதியின் கரையில் மாண்ட்கோமரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. அதற்கு தெற்கில் சுமார் 600 கிலோமீட்டர் தொலைவில் சிந்து மாநிலத்தில் லர்க்கானா மாவட்டத்தில் சிந்து நதிக் கரையில் மொகஞ்சதாரோ அமைந்துள்ளது. மொஹஞ்சதாரோ என்ற சொல்லுக்கு பல பொருள்கள் உண்டு. 'இறந்தவர் மேடு', 'கொல்லப்பட்டவர் மேடு', 'ஆறுகள் கூடும் மேடு' என பலவாறாக அச்சொல்லுக்கு பொருள் கொள்கின்றனர்.

***மொகஞ்சதாரோவின் தெருக்களும், வீடுகளும்***

மொகஞ்சதாரோ ஒரு திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரம் ஆகும். தெருக்கள் எல்லாம் இங்கு நேர் நேராக, வளைவு, நெளிவுகள் இல்லாமல் செல்கின்றன. தெருவின் அகலம் 9 அடி முதல் 34 அடி வரை உள்ளது. தெருக்களில் வீடுகள் நெருக்கமாமக உள்ளன. ஒவ்வொரு தெருவிலும் ஒரு பொதுக் கிணறு உள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் கிணறும், குளியலறையும் உள்ளது. கழிவுநீர் தெருவில் உள்ள சாக்கடையில் சென்று ஓடுவதற்கு ஏற்ற வகைகளில் தெருவை ஒட்டியவாறு குளியலறைகள் அமைந்துள்ளன.

***ஹரப்பா நகரின் தானியக் களஞ்சியம்:***

மொகஞ்சதாரோவை விட ஹரப்பா சற்று பெரியதாக உள்ளது. நகர அமைப்பும், தெருக்களும், இரு நகரங்களிலும் ஏறக்குறைய ஒரே மாதிரியாகவே உள்ளன. ஹரப்பாவில் மிகப் பெரிய தானியக் களஞ்சியம் உள்ளது. இது 169 அடி நீளமும், 135 அடி அகலமும் கொண்டது. எலிகள் புகுந்து தானியத்தை சேதப்படுத்தா வண்ணம் இக்களஞ்சியம் கட்டப்பட்டுள்ளது.

***பயன்படுத்திய செங்கற்கள்:***

இரு நகரங்களிலும் சுட்ட செங்கற்களைப் பயன்படுத்தியே கட்டிடங்கள் கட்டியுள்ளனர். இச் செங்கற்கள் 11 அங்குலம் நீளமும், 5½ அங்குலம் அகலமும், 21½ அங்குலம் உயரம் கொண்டவை. கிணறுகளைக் கட்டுவதற்கு ஆப்பு வடிவிலான செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. கட்டிடங்கள், தெருக்கள், சாக்கடை ஆகியவை சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. கட்டிடங்களின் அடிக்கல் மட்டும் சுடப்படாத செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது.

***வீட்டின் அமைப்பு:***

ஒவ்வொரு வீட்டின் நடுவிலும் திறந்த முற்றம் இருந்தது. அதைச் சுற்றிலும் அறைகள் இருந்தன. அறையின் கதவுகளும், சன்னல்களும் முற்றத்தை நோக்கியவாறு அமைந்திருந்தன. தெருவோரச் சுவரில் சன்னல்கள் இல்லை. பாதுகாப்பின் பொருட்டு அச்சுவரில் சன்னல்கள்

வைக்கவில்லை போலும்! இரண்டு அல்லது மூன்றடுக்கு மாடி வீடுகளும் அங்கே இருந்தன. வீடுகளில் மலங்கழிக்கும் அறைகள் இருந்ததாகத் தெரியவில்லை.

**பாதாளச் சாக்கடை:**

பாதாளச் சாக்கடை இந்நாகரிகத்தின் சிறப்பு அம்சமாகும். பூமிக்கடியில் இரண்டடி ஆழத்தில் சாக்கடைக் குழாய்கள் பதிக்கப்பட்டிருந்தன. வீட்டிலிருந்து கழிவு நீர் சிறு குழாய்கள் மூலமாக தெருச் சாக்கடைக்கு வந்து சேர்ந்தது. வீட்டுச் சாக்கடையிலிருந்து குப்பை தெருச் சாக்கடையில் சென்று அடைத்துக் கொள்ளாமல் இருக்க சல்லடைக் கண் கொண்ட பலவகைகள் பயன்படுத்தப்பட்டன. தெருச்சாக்கடையை சுத்தம் செய்வதற்கு ஏற்ற வகையில் மனிதன் நுழையும் அளவில் துவாரங்கள் இருந்தன. அத்துவாரங்களுக்கு மூடிகள் போடப்பட்டிருந்தன.

**நீச்சல் குளம்:**

நீச்சல் குளம் 180 அடி நீளமும், 108 அடி அகலமும் உடைய ஒரு கட்டிடப் பகுதிக்குள் அமைந்துள்ளது. இக்குளம் 39 அடி நீளமும், 23 அடி அகலமும், 8 அடி ஆழமும் உடையது. இதைச் சுற்றிலும் தாழ்வாரங்கள் உள்ளன. தாழ்வாரத்தில் சிறு சிறு அறைகள் உள்ளன. அவ்வறைகள் குளித்த பின் உடைகளை மாற்றிக் கொள்ளப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இந்நீச்சல் குளத்திற்கு 6 நுழைவு வாயில்கள் உள்ளன. அருகிலிருக்கும் கிணற்றிலிருந்து இக்குளத்திற்கு தண்ணீர் கொணரப்பட்டது.

**தெருக்கள்**

இந்நகரங்களின் தெருக்களில் விளக்குக் கம்பங்கள் காணப்படுகின்றன. குப்பைகளை நகருக்கு வெளிப்புறத்தில் குழிகள் தோண்டி அதில் கொட்டினர்.

**உணவுப்பழக்கம்**

அவர்களின் முக்கியத் தொழில் விவசாயம் ஆகும். கோதுமை, பார்லி, நெல், பட்டாணி, காய்கறிகள் ஆகியவை. பால், மீன், இறைச்சி ஆகியவற்றை அம்மக்கள் விரும்பி உண்டனர். ஆடு, மாடு, கோழி, பன்றி, புறா, வாத்து, ஆமை, நண்டு ஆகியவற்றின் இறைச்சியை அவர்கள் உணவாகக் கொண்டனர். நெருப்பில் சுடப்பட்ட இவற்றின் எலும்புகள் நிறைய நமக்கு அவர்களின் வீடுகளிலிருந்து கிடைக்கின்றன. பேரிச்சம் பழத்தையும் அவர்கள் உண்டனர்.

**விலங்குகள்**

எருமை, ஆடு, பன்றி, ஒட்டகம், யானை ஆகியவற்றின் எலும்புக்கூடுகள் கண்டுபுடிக்கப்பட்டிருப்பதால் அவ்விலங்குகளை அவர்கள் அறிந்திருந்தனர் என முடிவுக்கு வருகிறோம். பசு, புலி, குரங்கு, காண்டா மிருகம், முதலை, நாய், கரடி, முயல் ஆகிய களிமண் பொம்மைகள் கிடைத்துள்ளன. ஆகவே அவ்விலங்குகளையும் அவர்கள் அறிந்திருந்தனர் எனக் கொள்ளலாம். குதிரைகளை அவர்கள் அறிந்திருந்தார்களா? இல்லையா என்பதைப் பற்றி கருத்து வேறுபாடு நிலவுகிறது. குதிரையினை அவர்கள் அறிந்திருக்கவில்லை என ஒரு சாரார் கருத்துத் தெரிவிக்கின்றனர். மற்றொரு சாரார் அவர்கள் குதிரையினை அறிந்திருந்தனர் என்றும் ஆனால் அதனை அவர்கள் வீட்டு விலங்காக மாற்றி அமைத்துக் கொள்ளவில்லை எனக் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

**ஆடைகள்**

அவர்கள் பயன்படுத்திய ஆடைகள் நமக்குக் கிடைக்கவில்லை. அவை காலத்தால் அழிந்து போய்விட்டன. இருப்பினும் அகழ்வுகளிலிருந்து கிடைத்த பொம்மைகள், முத்திரைகளின் மீதான உருவங்கள் ஆகியவற்றிலிருந்து அக்காலத்தில் உடைகளைப் பற்றி நம்மால் அறிய முடிகிறது. சால்வை போன்ற ஒரு நீண்ட துணியை ஆண்கள் இடத்தோள்- பட்டைக்கு மேலாகச் சுற்றி, வலத்தோல் பட்டைக்கு கீழாக அணிந்தனர். தற்போதைய வேட்டி போன்ற மற்றொரு துணியை இடுப்பைச் சுற்றி கீழ் ஆடையாக அணிந்தனர். பெண்களும் இதே மாதிரி கீழ் ஆடைகளையே அணிந்தனர். சிந்து சமவெளி மக்களின் ஆடைகள் பருத்தியாலும் கம்பளியாலும் நெய்யப்பட்டிருக்க வேண்டும். ஊசிகள் அகழ் வாய்வில் கண்டெடுக்கப்-பட்டுள்ளன. ஆகவே அவர்கள் ஆடைகளை தைக்கும் முறையை அறிந்திருந்தனர் எனக் கொள்ளலாம்.

**அணிகலன்கள்**

காதணி, கைவளையல், மோதிரம், காலில் காப்பு, கழுத்தில் அட்டிகை போன்ற பல அணிகளை பெண்கள் அணிந்தனர். இவ்வாபரணங்கள் தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம் ஆகிய உலோகங்களால் செய்யப்பட்டவை ஆகும். மூக்கு அணி அகழ்வாய்வில் ஏதும் கிடைக்காமையால் அவர்கள் மூக்கு அணி ஏதும் அணியவில்லை எனக் கொள்ளலாம்.

**சிகை அலங்காரம்:**

ஆண்கள் தலைமுடியை நீளமாக வளர்த்தனர். அம்முடியை சில ஆண்கள் சீவிவகிடு எடுத்து தலையின் பின்புறம் சிறிய நாடாவினால் கட்டி வைத்தனர். வேறு சிலர் முடியை தலையின் உச்சியிலும், பக்கத்திலும் முடிந்து வைத்தனர் அவை அவிழ்ந்து விழாமல் இருக்க கொண்டை ஊசிகளைப் பயன்படுத்தினர். பெண்கள் சடை பின்னிக் கொண்டனர் அல்லது கொண்டைப் போட்டுக் கொண்டனர். ஆண்களும் சடை பின்னியிருந்தனரென்று தெரிகிறது. கண்ணுக்கு அஞ்சனம், முகத்திற்கு வாசனைத் தூள், உதட்டுச் சாயம் ஆகிய அழகு சாதனங்களை அவர்கள் பயன்படுத்தினர். முட்டை வடிவில் வெங்கலத்தாலான முகம் பார்க்கும் கண்ணாடிகளை அவர்கள் பயன்படுத்தினர். அவர்கள் தங்களது சீப்புகளை தந்தத்தால் செய்து கொண்டனர். சவரம் செய்து கொள்ள ஆண்கள் வெண்கலத்தாலான கத்திகளை பயன்படுத்தினர்.

**வீட்டிற்குப் பயன்படும் பொருட்கள்:**

தட்டு, கோப்பை, கிண்ணம், அகப்பை, ஜாடி, அம்மி, குழவி போன்ற சமையலறைச் சாமான்களை அவர்கள் பயன்படுத்தினர். இவை களிமண், செம்பு, வெண்கலம் ஆகியவற்றால் செய்யப்பட்டன. கத்தி, உளி, மீன் பிடிக்கும் தூண்டில் முள், மரம் அறுக்கும் வாள், கோடரி, கத்தி முதலிய பல கருவிகளையும் அவர்கள் பயன்படுத்தினர். நாற்காலி, கட்டில், மேசை முதலியவற்றையும் வீடுகளில் அவர்கள் உபயோகப்படுத்தியதாகத் தெரிகிறது.

**பொழுது போக்குகள்:**

சிறுபிள்ளைகள் கோலி குண்டுகள், பந்துகள், பகடைக் காய்கள் போன்றவற்றை விளையாடி இருக்கிறார்கள். மேலும் அவர்கள் பல விதமான களிமண் பொம்மைகளை வைத்து விளையாடி இருக்கிறார்கள்.

**அளவைகள்:**

எடைக்கற்களை அவர்கள் பலவகைக் கற்களால் செய்திருக்கின்றனர். அங்கு கிடைப்பவற்றுள் பெரும்பாலான எடைக்கற்கள் 13, 64 கிராம் உள்ள எடைக்கற்களே. தராசையும் அவர்கள் பயன்படுத்தியிருக்கின்றனர். சிறிய தராசுகளும், பெரிய தராசுகளும் நமக்கு அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. நீளத்தை அளக்கும் வெண்கல அளவு கோல் ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது.

**சவ அடக்கம்:**

இறந்தவர்களின் உடலை அவர்கள் கீழ் காணும் மூன்று முறைகளில் அடக்கம் செய்தனர். (1) முழு உடலையும் அப்படியே புதைத்து விட்டனர். (2) உடலை பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் தின்னக் கொடுத்துப் பின் எஞ்சிய எலும்புகளை ஜாடியில் வைத்துப் புதைத்தனர். (3) உடலைக் கொளுத்திய பின் கிடைக்கும் சாம்பலை தாழிகளில் வைத்துப் புதைத்தனர்.

**சமயம்:**

அகழ்வாய்வில் ஆலயம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் கிடைக்கும் சிலைகள், முத்திரைகள் போன்றவற்றைக் கொண்டு அவர்களது சமயத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்கிறோம். இடுப்பில் மட்டும் ஒரு சிறிய ஆடையை அணிந்த ஒரு பெண் உருவச்சிலையும் தலையில் மகுடம் அணிந்த ஆண் உருவச்சிலையும் புகை படிந்த நிலையில் நமக்குக் கிடைத்துள்ளன. இவை அவர்கள் வணங்கிய கடவுள்களின் உருவங்களாக இருக்கக் கூடும். அவற்றின் முன்னால் ஏற்றி வைக்கப்பட்ட விளக்குகளின் புகை இவ்வுருவங்கள் மீது படிந்தமையால் அவை புகை படிந்து காணப்படுகின்றன எனலாம்.

ஒரு முத்திரையில் தரை மீது வணங்கிய நிலையில் ஒரு பெண்ணும் அவளின் முன் ஒரு ஆண் அவளைப்பலியிடுவது போல ஓங்கிக்கொண்டும் இருப்பது பொறிக்கப்பட்டுள்ளது. இதைக் கொண்டு நாம் அவர்கள் தங்கள் கடவுகளுக்கு மனிதர்களை பலியிட்டனர் எனக் கொள்ளலாம். கடவுளிற்கு ஆடுகளையும் அவர்கள் பலியிட்டனர் என்பது அவர்கள் வெளியிட்ட வேறு சில முத்திரைகளிலிருந்து தெரிய வருகிறது. பறவைகளில் புறாக்களையும் விலங்குகளில் புலி, காண்டாமிருகம், காளை போன்றவற்றையும் அவர்கள் வணங்கினர். மரம், நீர், நெருப்பு ஆகியவற்றையும் அவர்கள் வணங்கியதால் இயற்கை வழிபாடும் அவர்கள் மேற்கொண்டிருந்தனர் எனத் தெரிகிறது. 500க்கும் மேற்பட்ட முத்திரைகள், சவர்க்காரக்கல், இரத்தினம், படிகைக்கல், தாமிரம், களிமண் போன்றவற்றால் செய்யப்பட்டன. முத்திரையிட்ட களிமண் தகடுகளை, பொருட்கள் மாறாது இருக்க இடையிடையே பயன்படுத்தப்பட்டன.

**எழுத்துக்கள்:**

சுமார் 400 சிந்து சமவெளி எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை பட-எழுத்துக்களாகும். அவற்றுள் சில எழுத்துக்கள் பறவை, மீன், மனித உறுப்புக்கள் போன்ற பல வடிவங்களை பெற்றிருக்கின்றன. இந்த எழுத்துக்கள் எந்த மொழியைச் சார்ந்தவை என்பது பற்றி தற்சமயம் எந்த வித முடிவுக்கும் வர இயலவில்லை ஒவ்வொரு சித்திரமும் ஒரு கருத்தை அல்லது சொல்லைக் குறிப்பிட்டன. பெரும்பாலான ஏடுகள் இடப்புறத்திலிருந்து வலப்புறமாக எழுதப்பட்ட ஏடுகளும் கிடைத்துள்ளன.

**நாகரிகத்தின் காலம்:**

சர் ஜான் மார்ஷல் இந்நாகரிகம் கி.மு.3000 முதல் கி.மு.2000 வரையிலான காலத்தைச் சார்ந்தது எனக் கூறுகிறார்.

ரிக் வேதம் கி.மு.1500 ஆம் ஆண்டு அளவில் இயற்றப்பட்டதாகும். அதில் ஆரியர்கள் மதில் சூழ்ந்த நகரங்களில் வாழ்ந்தவர்களோடு போரிட்டதாக சொல்லப்பட்டுள்ளது. இந்த மதில் சூழ்ந்த நகரங்களில் வாழ்ந்தவர்கள் சிந்து சமவெளி மக்கள் என்று கொண்டால் சிந்து சமவெளி நாகரிகத்தின் காலம் கி.மு.1500க்கு முந்தியதாக இருக்க வேண்டும்.

**சிந்து வெளி நாகரிகம் மறைவு:**

கோட்டை கொத்தளங்களும், நாகரிக வீடுகளும், போக்குவரவு வசதிகளும் பெற்றிருந்த இவ்வளவு மேம்பட்ட நாகரிகம் எவ்வாறு அழிந்தது என்பது பற்றி ஆசிரியர்களிடையில் கருத்து வேறுபாடுகள் நிலவிவருகின்றன. அவைகளைச் சிறிது ஆய்ந்து அறிவது அறிவுடைமையாகும்.

**வறட்சி:**

இப்பகுதியில் மழையின் அளவு குறைய ஆரம்பித்தது. ஆகவே வறட்சி அதிகமாயிற்று. விவசாயம் பாதிக்கப்பட்டது. ஆகவே மக்கள் அங்கிருந்து வெளியேறத் தொடங்கினர் என சில வரலாற்று ஆசிரியர்கள் இதன் அழிவுக்கு காரணம் கூறுகின்றனர்.

**ஆரியர் படையெடுப்பு:**

ஆரியர்கள் படையெடுத்து வந்த இந்த நாகரிகத்தை அழித்தனர் என்று வேறு சில வரலாற்று வல்லுனர்கள் கருதுகின்றனர். மொகஞ்சதாரோவின் தெருக்களிலும், வீடுகளிலும் கும்பல் கும்பலாக பல மனிதர்களுடைய எலும்புக் கூடுகள் காணப்படுகின்றன. பகைவர்களால் வெட்டப்பட்டு அவர்கள் கொல்லப்பட்டிருத்தல் வேண்டும் என்பதை அறிவிக்கும் வகையில் வெட்டுக்காயங்கள் எலும்புகளின் மீதும் மண்டை ஓடுகளின் மீதும் காணப்படுகின்றன. பகைவரது தாக்குதலை இந்த எலும்புக் கூடுகள் நிரூபிக்கின்றன.

**வெள்ளம்:**

சிந்து ஆற்றில் பெருகிய வெள்ளம் இந்நாகரிகத்தை அழித்திருக்கக் கூடும் என சில வரலாற்று வல்லுநர்கள் கருதுகின்றனர்.

**சிந்து வெளி நாகரிகமும் வேதகால நாகரிகமும் ஒப்பீடு:**

சிந்து சமவெளி நாகரிகம் வேத காலத்துக்கு முற்பட்ட நாகரிகம் என்பது பெரும்பான்மை வரலாற்று அறிஞர்களின் கூற்றாகும். சிந்து சமவெளி மக்கள் வெண்கலம், செம்பு

ஆகியவற்றையே பயன்படுத்தினர் இரும்பின் பயன் அவர்களுக்குத் தெரியாது. ஆனால் ஆரியர்கள் இரும்பையே கூடுதலாகப் பயன்படுத்தினர்.

சிந்து சமவெளி நாகரிகம் நகர நாகரிகம் ஆகும், ஆரியரது நாகரிகம் கிராம நாகரிகம் ஆகும். சிந்து சமவெளி மக்களுக்கும் சமஸ்கிருத மொழிக்கும் தொடர்பு ஏதும் இல்லை. அவர்களது மொழி திராவிட மொழியாக இருக்கக் கூடும். ஆரியர்கள் சமஸ்கிருத மொழியைப் பயன்படுத்தினர்.

சிந்து சமவெளி மக்கள் வேளாண்மை மேற்கொண்டு நிலையான ஓரிடத்தில் வாழ்க்கை நடத்தினர். ஆரியர்கள் ஆடு மாடு மேய்த்து இடம் விட்டு இடம் பெயரும் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர்.

சிந்து சமவெளி மக்கள் குதிரையை வளர்ப்பு பிராணியாகக் கொள்ளவில்லை. ஆரியர்கள் குதிரையை வளர்ப்பு பிராணியாகக் கொண்டிருந்தனர்.

சிந்து சமவெளி மக்கள் அமைதியில் நாட்டம் மிக்கவர்கள். ஆரியர்கள் போர் செய்வதில் விருப்பம் மிக்கவர்கள். சிந்து வெளி மக்கள் எருதை வணங்கினர். ஆரியர்கள் பசுவைத் தெய்வமாகப் போற்றினர்.

சிந்து வெளி மக்கள் நீண்ட தலை, குட்டை உருவம், சுருட்டை முடி உடையவர்களாக இருந்தனர். ஆரியர்கள் நெடிய உருவமும், சிவந்த மேனியும் உடையவர்கள்.

சிந்துவெளி மக்கள் நேர்த்தியான வண்ணம் பூசப்பட்ட மட்பாண்டங்களை பயன்படுத்தினர். ஆரியர்கள் வேலைப்பாடற்ற சாதாரண மட்பாண்டங்களைப் பயன்படுத்தினர். மேற்குறிப்பிட்ட வேறுபாடுகள் சிந்து சமவெளி பண்பாடு ஆரிய பண்பாட்டிற்கு மாறுபட்டது என்றும் ஆரியர்களுக்கு முற்பட்டது மட்டுமின்றி மேம்பட்டது .

# 3. ஆரியர்கள்

***ஆரியர்கள் யார்?***

கி.பி.1786ல் வங்க ஆசியக் கழகத்தில் (Asiatic Society of Bengal) நிகழ்த்திய உரையில் சர் வில்லியம் ஜோன்ஸ் (Sir Willam Jones) ஒரு புதிய கருத்தை வெளியிட்டார். சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன், பாரசீக மொழி, காதிக் (Gothic) மொழிகள், கெல்டிக்(Celtic) மொழிகள் முதலியவற்றிற்கு இடையே பல ஒற்றுமைகள் இருப்பதாகவும், அம்மொழிகள் அனைத்தும் ஒரே மூல மொழியிலிருந்தே தோன்றி இருக்க வேண்டும் என்றும் அவர் கருத்து தெரிவித்தார். உதாரணம்:- தாய் தந்தையரைக் குறிக்கும் சொற்களான 'பித்ரு' 'மாத்ரு' என்ற சமஸ்கிருத சொற்களுக்கும், 'பிதா' 'மாதா' என்ற பாரசீகச் சொற்களுக்கும், 'ஃபாதர்' 'மதர்' என்ற ஆங்கிலச் சொற்களுக்கும், 'பாடர்' 'மாடர்' என்ற இலத்தீன் சொற்களுக்கும் ஒற்றுமை இருக்கிறது. ஆகவே இம்மொழிகள் அனைத்தையும் தற்போது பேசுபவர்கள் ஆதியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து தான் வந்திருக்க வேண்டும் என்றார் சர் வில்லியம் ஜோன்ஸ்.

ஜெர்மானிய அறிஞர் மாக்ஸ் முல்லரும் (Max Muller) ஆராய்ச்சிக்குப் பின் இக்கருத்தை ஏற்றுக் கொண்டனர். இக்கருத்தை பின்னர் மொழி நூல் அறிஞர்களும் ஏற்றுக் கொண்டு இம்மொழிகளை இந்திய ஐரோப்பிய மொழிகள் என்று அழைக்கலாயினர். இந்த இந்திய ஐரோப்பிய மொழிகளின் மூல மொழியைப் பேசிய பிரிவினரே இந்தியா வந்து குடியேறிய ஆரியர்கள் என்ற கருத்து பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

***ஆரியர்களின் பூர்வீக இடம் எது?***

**1. மாக்ஸ் முல்லர் கருத்து:**

(மத்திய ஆசியா) ஆரியர்கள் ஆதியில் மத்திய ஆசியாவில் வாழ்ந்தனர். தட்பவெப்ப நிலை மாறுபாட்டின் காரணமாக அவர்கள் அங்கிருந்து குடி பெயர்ந்து வெவ்வேறு திசைகளில் சென்றனர். அவர்களில் ஒரு பகுதியினர் ஆசியா மைனர் வழியாக சென்று கிரீஸ், இத்தாலி போன்ற பகுதிகளில் குடியேறினர். மற்றொரு பிரிவினர் ஈரான், இந்தியா ஆகிய நாடுகளுக்கு வந்து குடியேறினர். ஆகவே ஆரியர்களின் பூர்வீக உறைவிடம் மத்திய ஆசியா என்பது மாக்ஸ் முல்லரின் கருத்தாகும்.

**2. மக்டானல் (Macdonell) கருத்து:**

(ஐரோப்பா) ஒட்டகம், யானை, புலி, கழுதை போன்ற ஆசிய மிருகங்களைப் பற்றி ஆரியர்களுக்கு ஏதும் தெரியாமல் இருந்திருக்கிறது. ஆனால் அவர்களுக்கு ஐரோப்பாவில் காணப்படும் ஓக், வில்லோ, பீச் (beech) போன்ற மரங்களைப் பற்றி தெரிந்திருக்கிறது. இதனைக் கொண்டு மக்டானல் ஆரியர்கள் பூர்வீக இடம் ஆசியா இல்லை என்றும் அவர்களது பூர்வீக இடம் ஐரோப்பாவே ஆகும் எனக் கருதுகிறார்.

**3. டாக்டர் கைல்ஸ்(Dr.Giles) கருத்து:**

(தென் கிழக்கு ஐரோப்பா) ஆரியர்களுக்கு குதிரை, எருது போன்ற விலங்குகள் நன்கு தெரிந்திருந்தது. இவ்விலங்குகள் அக்காலத்தில் தென் கிழக்கு ஐரோப்பாவில் மட்டுமே காணப்பட்டன. இதனைக் கருத்தில் கொண்டு டாக்டர் கைல்ஸ் 'கேம் பிரிட்ஜ்' இந்திய வரலாற்றில் ஆரியர்களின் பூர்வீக இடம் தென் கிழக்கு ஐரோப்பா எனக் கூறுகிறார்.

**4. மெயர் (Meyer) கருத்து:**

(இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடைப்பட்ட பகுதி) இந்தியாவிற்கும் ஈரானுக்கும் இடைப்பட்ட ஒரு பகுதியே ஆரியர்களின் பூர்வீக உறைவிடமாக இருந்திருக்க வேண்டும் என்பது மெயரின் கருத்தாகும்.

**5. பாலகங்காதர திலகர் கருத்து:**

(ஆர்க்டிக் பகுதி) ஆரியர்களின் பூர்வீக உறையிடம் ஆர்க்டிக் பகுதியே என்பது பாலகங்காதர திலகரின் கருத்து. திலகர் ஆரியர்களின் ஆர்க்டிக் உறைவிடம் (The Arctic Home of the Aryans) என்ற தலைப்பில் தான் எழுதிய புத்தகத்தில் இக் கருத்தை வலியுறுத்தி கூறுகிறார். ஆர்க்டிக் பகுதி தற்போது பனி மிகுந்த பகுதியாக உள்ளது. ஆனால் ஒரு காலத்தில் அது செழிப்பான பகுதியாக இருந்தபோது ஆரியர்கள் அங்கு வாழ்ந்தார்கள் என்றும் பின்னர் அங்கு தட்ப வெப்ப நிலை மாறியதனால் அவர்கள் அங்கிருந்து வெளியேறி விட்டனர் என்றும் திலகர் கருதுகிறார்.

**6. சுவாமி தயானந்த சரஸ்வதி கருத்து:**

(திபெத் பீடபூமி) திபெத் பீடபூமியே ஆரியர்களின் ஆதி உறைவிடம் என்பது சுவாமி தயானந்த சரஸ்வதியின் கருத்தாகும்.

**7. ஏ. ஸி. தாஸின் கருத்து:**

(பஞ்சாப்) ரிக் வேதத்தில் சப்த சிந்து என்று கூறப்பட்டுள்ள பஞ்சாபே ஆரியர்களின் ஆதி இடம் என்பது ஏ.ஸி. தாஸின் கருத்து.

**8. ஷ்ரோதர் கருத்து(Schroder):**

(தென் ரஷ்யா) இரஷ்யாவின் தெற்குப் பகுதியே ஆரியர்களின் பூர்வீக இடம் என்ற கருத்தை ஷ்ரோதர் வலியுறுத்துகிறார்.

**மற்ற சிலரின் கருத்துக்கள்:**

ஆரியர்களின் பூர்வீக இடம் இந்தியாவே என ஜெர்மானிய ஆசிரியர்கள் சிலர் கூறுகின்றனர். சைபீரியாவிலிருந்து வந்தவர்கள் ஆரியர்கள் என்றும், மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்கள் ஆரியர்கள் என்றும் பற்பல கருத்துக்கள் நிலவுகின்றன. சமீபத்தில் வெளியிடப்பட்ட ஆக்ஸ்போர்டு இந்திய வரலாற்றில் ஆரியர்களின் பூர்வீக இடம் என்ற தலைப்பில் பாடமே இல்லை. இந்த விவாதத்தில் எந்த முடிவுக்கும் வருவது இயலாது என்பதாலேயே அத்தலைப்பு நீக்கப்பட்டு விட்டதாக அந்நூலில் சொல்லப்பட்டுள்ளது.

## முற்கால வேத நாகரிகம்
## அல்லது
## இருக்கு வேத கால ஆரிய நாகரிகம்

சிந்து வெளி நாகரிகத்திற்கு அடுத்தாற் போல் இந்தியாவில் சிறப்பு மிக்க நாகரிகமாகத் திகழ்ந்தது ஆரிய நாகரிகம் ஆகும்.ஆரிய நாகரிகத்தை முற்கால (இருக்கு) வேத நாகரிகம் என்றும், பிற்கால வேத நாகரிகம் என்றும் இரண்டு தலைப்புகளில் படிக்கலாம். இருக்கு வேத கால நாகரிகம் பற்றி இவண் ஆய்வோம்.

**வாழ்ந்த பகுதி:**

இருக்கு வேத கால ஆரியர்கள் ஆப்கானிஸ்தானத்திலிருந்து கங்கைச் சமவெளி வரை இருந்த நிலப் பகுதியில் வாழ்ந்து வந்தனர் எனலாம். ஆப்கானிஸ்தானத்தில் ஓடும் ஆறுகளும், கங்கைச் சமவெளியில் காணப்படும் ஆறுகளும் அவர்களுடைய இருக்கு வேதத்தில் குறிக்கப்பட்டுள்ளதால் நாம் இம் முடிவுக்கு வருகிறோம்.

**அரசியல் நிலை:**

ஆரியர்கள் வாழ்வதற்கு இடம் தேடி அலைந்தனர். அப்போது அவர்கள் பூர்வீக குடியினரோடு போரிட வேண்டியிருந்தது. அப்போரில் அவர்கள் தம் பகைவர்களைத் தோற்கடித்து வெற்றி வாகை சூடினர். அவர்கள் தம் பகைவர்களை இருக்கு வேதத்தில் தாசர்கள்

தாஸ்யூக்கள் என்று இழிவாகக் குறிப்பிடுகின்றன. தாஸ்யூக்கள் என்றால் இறைவனின் பகைவர்கள் என்று பொருள்.

மன்னராட்சியை அவர்கள் பெற்றிருந்தனர். அரசர் இறைவனின் சார்பாளர் என்றும் இறைவனின் மறு உரு என்றும் கருதப்பட்டார். மன்னர் பதவியின் தோற்றத்தைப் பற்றி இருக்கு வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, அதாவது தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் போர் ஏற்பட்டது. அப்போரில் தேவர்கள் தோற்றுப் போயினர். அவர்கள் தங்களின் தோல்விக்குப் காரணம் தங்களுக்குத் தலைவன் இல்லாமையே என்பதை உணர்ந்தனர். பின்னர் அவர்கள் இந்திரனை தலைவனாக தேர்ந்தெடுத்தனர். அத்தலைவன் பின்னர் மன்னர் ஆனார். மன்னர் மரபு வழியில் நியமிக்கப்பட்டார். சில நேரங்களில் தகுதி வாய்ந்த மன்னரை மக்கள் தேர்ந்தெடுத்தனர். மன்னரின் தலையாய பணி மக்களைக் காப்பதாகும். மக்களை வெளியிலிருந்து வரும் ஆபத்திலிருந்தும், உள்நாட்டு குழப்பங்கள், கலவரங்களில் இருந்தும் காப்பது மன்னரின் கடமையாக இருந்தது. மக்களின் சமய முன்னேற்றத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டியது மன்னரின் மற்றொரு கடமையாகும்.

இருக்கு வேத காலத்தில் ஆட்சித்துறையின் அடிப்படையான பிரிவு குடும்பம் ஆகும். குடும்பத்தின் தலைவன் தந்தையாகும். குடும்பத்தை கிருகம் என அழைத்தனர். கிருகத்தின் தலைவர் கிருஹபதி என அழைக்கப்பட்டார். பல கிருகங்கள் (குடும்பங்கள்) சேர்ந்தது ஒரு கிராமம் ஆயிற்று. கிராமத்தின் தலைவர் கிராமணி என அழைக்கப்பட்டார். பல கிராமங்கள் சேர்ந்த அமைப்பு விஸ் எனப்பட்டது. விஸ்ஸின் தலைவர் விஸ்பதி. பல விஸ்கள் சேர்ந்தது ஜனம் என அழைக்கப்பட்டது. ஜனத்தின் தலைவர் கோபர் என அழைக்கப்பட்டார். ஜனத்திற்கு மேலானது இராட்டிரம் ஆகும். இராட்டிரத்தின் தலைவர் மன்னராவார். மன்னர் பதவி ஒரு சில குறிப்பிட்ட குடும்பத்துக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டது. தந்தைக்குப் பின் தனயன் மன்னர் பதவி பெறுவது என்னும் முறை பின்பற்றப்பட்டது. மன்னன் போரில் வெற்றி பெற வேள்விகள் செய்தார். அவ்வேள்விகளைச் செய்ய புரோகிதர்கள் இருந்தனர். மன்னருக்கு செய்திகளைத் திரட்டிக் கொண்டு வர ஒற்றர்கள் பலர் இருந்தனர். மன்னர் போர் செய்ய குதிரை மீது ஏறிச் சென்றார் அல்லது தேரில் அமர்ந்து சென்று போரிட்டார். வில்லும், அம்பும், கோடாரியும் முக்கிய போர் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன. அம்பில் இரண்டு வகை இருந்தன. அவையாவன: (1) நஞ்சு தோய்க்கப்பட்ட அம்பு, (2) நஞ்சு தோய்க்கப்படாத அம்பு. மன்னருக்கு புரோகிதர், சேனானி, கிராமணி ஆகியோர் போரில் துணை புரிந்தனர். புரோகிதர் மன்னனின் நண்பராகவும், தத்துவ ஞானியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தார் (Friend, Philosopher & Guide). செயல்துறை (Executive), சட்டமன்றத்துறை (Legislative), நீதித்துறை (Judiciary) ஆகிய மூன்றிற்கும் மன்னரே தலைவராகத் திகழ்ந்தார். மன்னர் வழக்குகள், தண்டனைகள் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டவர் என்னும் பொருளில் மன்னரை அதண்டயா என்று அழைத்தனர். மன்னர் கொடுங்கோலராக மாறிய போது மக்கள் கிளர்ச்சி செய்து அம்மன்னரை பதவியில் இருந்து நீக்கி விட்டு தங்களுக்கு விருப்பமானவரை பதவியில் அமர்த்தினர்.

அரசருக்கு ஆலோசனை கூற இரு மன்றங்கள் இருந்தன. அவையாவன (1) சபா (Sabha), (2) சமிதி (Samiti).

***சபா:***

உயர் குடியில் பிறந்த செல்வர்கள் அல்லது பிரபுக்கள் இதன் உறுப்பினர்களாக இருந்தனர். இம்மன்றத்தின் அதிகாரங்கள் பற்றி ஏதும் தெளிவாகத் தெரியவில்லை. இதில் உறுப்பினராக என்னென்ன தகுதிகள் வேண்டும் என்பது பற்றியும் நமக்கு ஏதும் தெளிவாகத் தெரியவில்லை. இது நீதிமன்றமாகச் செயல்பட்டிருக்கக் கூடும்.

***சமிதி:***

மக்கள் அனைவரையுமோ அல்லது மக்கள் சார்பாளர்களை மட்டுமோ கொண்டது சமிதி. மன்னரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் இதனிடம் இருந்ததாக இருக்கு வேதம் கூறுகிறது. சபைக்கும் சமிதிக்கும் இடையிலான உறவுகள் பற்றி ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை.

**சமுதாய நிலை:**

தகப்பன் குடும்பத்தின் தலைவனாகத் திகழ்ந்தார். அவரை கிரகபதி என அழைத்தனர். கீழ்படியாத மகனைக் கொல்லவும், அடிமையாக விற்கவும் தகப்பனுக்கு உரிமை இருந்தது. கூட்டு குடும்பமே பரவலாக இருந்தது. குடும்பத்தின் சொத்துக்கள் அனைத்தும் தகப்பனின் நிர்வாகத்தின் கீழ் இருந்தது. தகப்பனுக்கு குடும்பத்தில் அனைவரும் கட்டுப்பட்டு நடந்தனர்.

**பெண்டிர் நிலை:**

பெண்கள் ஆடவரோடு சமமாக மதிக்கப் பெற்றனர். கல்வி கற்பதிலும், சமயச் சடங்குகள் செய்வதிலும் அவர்கள் ஆண்களோடு சம உரிமை பெற்றுத் திகழ்ந்தனர். குழந்தை பிறக்கும் முன் கணவன் இறந்து விட்டால், இறந்த கணவனின் சகோதரனை மணந்து கொள்ள பெண்கள் உரிமை பெற்றிருந்தனர். இத்தகைய திருமணத்தை நியோகம் என அழைத்தனர். சதியும், பால்ய விவாகமும் இருக்கு வேத காலத்தில் இல்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையே பரவலாகப் பின்பற்றப்பட்டது. பலதாரமணம் மன்னர் குடும்பங்களிலும், செல்வந்தர் குடும்பங்களிலும் காணப்பட்டது. ஆண் பல மனைவியரை மணந்து கொண்டதைப் போல, பெண் பல ஆண்களை மணந்து கொள்ளும் பழக்கம் இல்லை. பெண்களுக்கு சீதனம் வழங்கும் முறை இருந்தது. ஆனால் பரவலாக இல்லை. அக்னியை சாட்சியாக வைத்து பெண் வீட்டில் திருமணங்கள் நடைபெற்றன. பெண்கள் ஆண்களுக்கு கட்டுப்பட்டு இருந்த போதிலும் அவர்கள் தன்னிச்சையாக உலவவும் விருந்துகள், நடனங்கள் ஆகியவற்றில் கலந்து கொள்ளவும் அனுமதிக்கப்பட்டனர். ஆண் குழந்தைகளை மக்கள் அதிகம் விரும்பினர். ஏனெனில் ஆண் குழந்தைகள் பிற்கால வாரிசுகளாக விளங்குவதற்கும், இறுதிச் சடங்குகள் செய்வதற்கும் தேவைப்பட்டனர். விதவைகள் மறுமணம் செய்து கொண்டதைப் பற்றியோ, கணவனும் மனைவியும் மணவிலக்கு செய்து கொண்டதைப் பற்றியோ இருக்கு வேதத்தில் செய்திகள் ஏதுமில்லை.

**சாதிமுறை :**

பொதுவாக நோக்குமிடத்து இருக்கு வேத காலத்தில் சாதி முறை இல்லை எனலாம். தாஸ்யூக்கள் எனும் இந்தியப் பழங்குடி மக்கள் இருக்கு வேதத்தில் கேவலமாகப் பேசப்பட்ட போதும் அவர்களைத் தீண்டத்தகாதவர்களாக ஆசிரியர்கள் ஒதுக்கி வைக்கவில்லை. தாஸ்யூக்களோடு ஆசிரியர்கள் திருமண உறவு வைத்துக் கொண்டதாகத் தெரிய வருகிறது. பிராமணர்கள் என்ற சொல் இறைவனைப் பிராமணர்கள் என்னும் துதிப்பாடல்களால் மகிழ்விக்கின்றவர்கள் என்ற பொருளிலேயே வழங்கப்பட்டது. மக்களும், சோம பானத்தை உயர்குடி மக்களும் அருந்தி மகிழ்ந்தனர். பிற்காலத்தில் இப்பானங்கள் அருந்துவது பாவம் என்றே கருதப்பட்டது.

**உடை:**

ஆசிரியர்கள் மூன்று ஆடைகளை அணிந்தனர். இடுப்புக்குக் கீழாக ஒன்றும், மேலாக ஒன்றும், மேலாடை மீது போர்வையாக ஒன்றும் ஆக மூன்று ஆடைகளை அணிந்தனர். ஆண்களும் பெண்களும் தலைப்பாகை அணிந்தனர். பருத்தி, கம்பளி, ஆகியவற்றால் தங்களது ஆடைகளை தயார் செய்து கொண்டனர். செல்வர்கள் பொன் இழைகள் விரவிய ஆடைகளை உடுத்தினர். கழுத்து, காது, கால், கை, மணிக்கட்டு போன்றவற்றில் பல வகையான அணிகலன்களை அவர்கள் அணிந்தனர். செல்வந்தர்கள் தங்கள் அணிகலன்களை தங்கத்தால் செய்து கொண்டனர். தலைக்கு எண்ணையிட்டு, தலை முடியைச் சீவிப் பின்னுவது ஆடவர் பெண்டிர் ஆகிய இருவரிடையே காணப்பட்ட ஓர் பழக்கம். ஆண்களில் சிலர் தாடி வளர்த்துக் கொண்டனர். சிலர் முகமகிழ்த்தல் செய்து கொண்டனர்.

**சவ அடக்கம்**

இறந்தவர்களின் உடல்களை புதைத்தல், எரித்தல் ஆகிய இரு வழக்கங்களுமே அவர்களிடம் இருந்தது. கணவன் இறந்ததும் மனைவி உடன்கட்டை ஏறுவது என்ற வழக்கம் அவர்களிடம் இல்லை.

**நான்கு ஆசிரமங்கள்:**

வாழ்க்கையை ஆசிரியர்கள் நான்கு நிலைகளாகப் பிரித்தனர். இந்த நிலைகள்தான் ஆசிரமங்கள் எனப்பட்டன.

**பிரமச்சரியம் :**

வேதநூல்களைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொள்ளும் மாணவப் பருவம் பிரமச்சரியம் என அழைக்கப்பட்டது.

**கிருகஸ்தம்:**

திருமணம் செய்து கொண்டு மனைவி, மக்கள், சுற்றும் சுழ மகிழ்வுடன் வாழும் குடும்ப வாழ்க்கைக் காலம் கிருகஸ்தம் எனப்பட்டது.

**வானப்பிரஸ்தம்:**

குடும்பப் பொறுப்பை தம் வளர்ச்சியுற்ற குழந்தைகளிடம் ஒப்படைத்து விட்டு காட்டிற்கு சென்று அங்கு வாழ்வது வானப்பிரஸ்தம் ஆயிற்று.

**சன்னியாசம்:**

உலகப் பற்றுகள் அனைத்தையும் விட்டு விட்டு இறைவனைப் பற்றி துறவியாய் வாழ்வது சன்னியாசம் என்று வழங்கலாயிற்று.

இந்த ஆசிரம முறை பிற்காலத்தில் வகுக்கப்பட்டது. ஆயினும் இருக்கு வேத காலத்திலேயே அது காணப்படுகிறது. பிரமச்சாரி, கிருஸ்தன், வனப்பிரஸ்தன் ஆகிய மூன்று நிலைகள் இருக்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. பின்னர் சன்னியாச நிலையும் சேர்க்கப்பட்டு நால்வகை ஆசிரம முறை உருவாயிற்று எனலாம்.

**பொழுது போக்குகள்:**

இசையும், நாட்டியமும் அவர்களது பொழுது போக்குகள் ஆகும். சூதாடுதல், இரதப் பந்தயம், குதிரைப் பந்தயம் ஆகியவை அவர்களது மற்ற பொழுது போக்குகள் ஆகும். புல்லாங்குழல், முரசு, தாரை, யாழ், மத்தளம் ஆகிய இசைக்கருவிகளை அவர்கள் பயன்படுத்தினர். உணவுக்காகவும் பொழுது போக்குக்காகவும் யானை, சிங்கம், பன்றி, மான் போன்ற விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடினர். மற்போர், குத்துச் சண்டை ஆகிய பொழுது போக்குகளும் அவர்களுக்குத் தெரியும்.

**கல்வி நிலை:**

கவிதை புனைவதில் ஆரியர்கள் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதை இருக்கு வேதம் நமக்கு உணர்த்துகிறது. அவர்களது மொழியும் கவிதையும் மிகவும் வளர்ச்சியுற்றிருந்தன என்பதற்கு இருக்கு வேதமே சான்றாகும். இவ்வளவு சிறப்பாக இருக்கு வேத பாடல்கள் இயற்றிய அவர்களுக்கு எழுதும் முறை தெரியாது போலும். எனவே தான் இருக்கு வேதம் எழுதப்படாமலே வாய் மூலமாகவே பல நூற்றாண்டுகள் வழங்கி வந்தது. சிந்து வெளி மககள் எழுத்துக்களைப் பயன்படுத்தி இருக்கின்றனர். அவர்களுக்குப் பின்னர் வந்த ஆரியர்களுக்கு எழுதும் முறை தெரியாது போனது வியப்பாக இருக்கிறது.

**அறிவியல் அறிவு:**

அறிவியல் அறிவு ஆரம்ப நிலையிலேயே இருந்தது. விண் மீன்கள், கோள்கள் ஆகியவற்றின் நகர்வு பற்றி அவர்கள் ஓரளவு அறிந்திருந்தனர். மருத்துவத் துறையைப் பொறுத்த வரையில் அவர்கள் மிகுந்த முன்னேற்றம் அடையவில்லை. பச்சிலை மருந்துகளைத் கொடுத்த அக்கால மருத்துவர்கள் தாயத்து, மந்திரம், ஆகியவற்றையும் நோயைப் போக்கப் பயன்படுத்தினர். போரில் கால் இழந்த ஒருவருக்கு இரும்புக் கால் இணைக்கப்பட்டதாக இந்நூலிலிருந்து தெரியவருகிறது. ஏனெனில் அவர்கள் பேய், பிசாசு ஆகியவற்றாலேயே நோய்கள் ஏற்படுவதாக நம்பினர். கால்களை இழந்த ஒருவன் உலோகக் கால்களைப் பயன்படுத்தியதாக ஒரு குறிப்பு இருக்கு வேதத்தில் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வானசாஸ்த்திர அறிவையும் பெற்றிருந்தனர். கட்டிடக் கலையும் சிற்பக்கலையும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தன. ஆயிரம் தூண்களையும், ஆயிரம் கதவுகளையும் உடைய

மாளிகைகள் அக்காலத்தில் இருந்தன. கல்லால் கட்டப்பட்ட மாளிகைகளைப் பற்றி இருக்குவேதம் கூறுகின்றது. இந்திரனுடைய சிலைகளைப் பற்றிய தகவல்கள் சிற்பக்கலை வளர்ச்சிக்கு போதுமான மூலங்களாகும்.

**சமய நிலை:**

அவர்கள் எண்ணற்ற கடவுளர்களை வழிபட்டனர். அவர்களால் வணங்கப்பட்ட கடவுளர்களில் சில பின்னவருமாறு: அக்கினி, இந்திரன், வாயு, சூரியன், வருணன், சாவித்திரி. நெருப்பு அக்கினி என்ற கடவுளாயிற்று. இந்திரன் இடி, மின்னல் ஆகியவற்றின் தெய்வமாக அமைந்து போர்க்கடவுள் ஆனார். வானம் வருணனாக ஆக்கப்பட்டது. காற்று தெய்வமாக வாயு ஆயிற்று. சரஸ்வதி அன்று ஆற்றுக்கடவுளாக வணங்கப் பட்டது. உஷா காலைப் பொழுதின் தேவதையாகக் கருதப்பட்டாள். இவ்வுலகில் முதலில் இறந்தவன் காலன். ஆகவே காலனே இறந்தோரின் கடவுள் ஆயிற்று. கடவுளுக்கு பால், நெய், தானியம், இறைச்சி, சோமபானம் ஆகியவற்றைப் படைத்தனர். அவர்கள் தங்களது கடவுள்களை தேவர்கள் என்று அழைத்தனர். திவ் என்ற சமஸ்கிருத மூலச் சொல்லிலிருந்து பிறந்தது தேவர் என்னும் சொல். திவ் என்றால் பிரகாசமானது என்பது பொருள். கடவுள்கள் ஒளி வடிவமாக இருப்பதாக அவர்கள் நம்பினர். ஆகவே தான் அவர்கள் தங்களின் கடவுளை தேவர் என அழைத்தனர்.

சிந்து சமவெளி மக்கள் பெண் கடவுளுக்கு முதலிடம் கொடுத்தனர். ஆனால் இருக்கு வேத கால ஆரியர்கள் ஆண் கடவுளுக்கு முதலிடம் கொடுத்தனர். இருக்கு வேதத்தில் ஆலயங்களை பற்றிய குறிப்பே இல்லை. இலிங்க வழிபாட்டையும் மலர்களை அரிசித்து கடவுளை வழிபடும் முறையையும் ஆரியர்கள் வெறுத்தனர்.

**பொருளாதார நிலை:**

வேளாண்மையில் ஈடுபட்ட அவர்கள் நிலையான வாழ்க்கை வாழ்ந்தனர். நிலத்தை உழ எருதுகளைப் பயன்படுத்தினர். கால்வாய்கள் வெட்டி நிலங்களுக்கு நீர் பாய்ச்சினர். உரமிடும் முறையை அவர்கள் அறிந்திருந்தனர். விவசாயிகள் ஏராளமான கால்நடைகளை வைத்திருந்தனர். ஒருவர் வைத்திருக்கும் ஆடு, மாடுகளின் எண்ணிக்கையைக் கொண்டு ஒருவரது சொத்து மதிப்பிடப்பட்டது. இருக்கு வேதத்தில் ஆடு மாடு வளர்ப்பைப் பற்றி பல கருத்துகள் சொல்லப்பட்டுள்ளது. விவசாயத்தை விட ஆடு மாடு வளர்ப்பே அவர்களின் முக்கியத் தொழில் என்பதை இது காட்டுகிறது. காளைகள் உழுவதற்கும், வண்டிகள் இழுப்பதற்கும் பயன்பட்டன. தேர்கள் இழுப்பதற்கும் ஓட்டப்பந்தியத்திற்கும் குதிரைகள் பயன்படுத்தப்பட்டன. கழுதை, நாய் முதலிய மிருகங்களையும் வீடுகளில் வளர்த்தார்கள். ஆடு மாடுகளை கோபாலா என்பவர்கள் மேய்ச்சல் நிலத்தில் மேய்த்து வந்தார்கள். பலருக்கு சொந்தமான கால்நடைகளை அவர்கள் கண்காணித்ததால் அவற்றைப்பிரித்து அறிவதற்காகக் காதுகளில் முத்திரையிட்டு வந்தனர். உரங்களின் பயனை அவர்கள் அறிந்திருந்தனர் சாகன் என்ற உரத்தைப் பயிர்களுக்குப் போட்டனர். குளம், கிணறு கால்வாய் ஆகியவற்றிலிருந்து வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. நுண் கலைகளை வளர்க்கவல்ல வண்ணத்தில் சிறந்த கலைவல்லுநர்களும் வாழ்ந்து வந்தனர். வேட்டையாடுதலையும் அவர்கள் அறிந்திருந்தனர். பானை வனைதலும், உலோகங்களைக் கொண்டு ஆபரணங்களும், கருவிகளும் தோல்பதனிடுதல், ஆடை நெய்தல் அவர்களது மற்ற தொழில்களாகும். வாணிபத்திலும் ஆரியர்கள் குறைந்தவர் அல்லர். அயல்நாட்டு வாணிபமும் தழைத்திருந்தது. அவர்கள் பண்டம் மாற்றும் முறையில் வாணிபம் செய்தனர். பண்டங்களுக்கு மாற்றாக பசுக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இந்திரக் கடவுள் சிலையொன்றின் விலை பத்து பசுக்களாக நிருணயிக்கப்பட்டிருந்தது. நிஷ்கா என்று வழங்கப்பட்ட பொன்மணி ஒன்றும் கூட அவர்களால் நாணயமாகப் பயன்படுத்தப்பட்டது.

**பிற்கால வேத நாகரிகம்**

**பிற்கால வேத காலம் எது?**

பின் வேத காலம் என்பது இருக்கு வேத காலத்திற்கும் பின்னர் சாம, யசுர், அதர்வண வேதங்கள், பிராமணங்கள் ஆகியவை தோன்றிய காலமாகும்.

**அரசியல் நிலை:**

மன்னர் தெய்வத் தன்மை வாய்ந்தவராகக் கருதப்பட்டார். மன்னர்களின் அதிகாரங்கள் கூடிற்று. அவர்கள் ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டனர். தம்முடைய வலிமையைக் காட்டிக் கொள்ள பல யாகங்களைச் செய்தனர். அத்தகைய யாகங்களில் முக்கியமானவை இராஜசூயம், (குதிரை) அசுவமேதம் ஆகியவை. வாரிசு உரிமைப்படி மன்னர்கள் பதவி ஏறினர்.

இருக்கு வேத காலத்திலே தோன்றிய சபை, சமிதி ஆகிய அவைகள் பின் வேத காலத்திலும் தொடர்ந்து இருந்து வந்தன. ஆனால் அவற்றில் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன என்பதை அறிய இயலவில்லை. வரி வசூல் அதிகாரி, கருவூல அதிகாரி, அரண்மனை மேற்பார்வை அதிகாரி, சூதாட்ட மேற்பார்வை அதிகாரி, மன்னரோடு வேட்டைக்குச் செல்லும் அதிகாரி ஆகியோர் மன்னருக்கு நிருவாகத்தில் துணையாக இருந்தனர்.

மன்னரே தலைமை நீதிபதியாகச் செயல்பட்டார். பிராமணனைக் கொலை செய்தல், 'சுரா' என்னும் பானத்தினை அருந்துதல், தங்கத்தைத் திருடுதல், மன்னருக்கு வஞ்சகம் இழைத்தல் ஆகியவையே தலையாய குற்றங்களாகக் கருதப்பட்டன. ஒருவன் குற்றவாளியா? இல்லையா? என்பதைக் கண்டறிவதற்காகப் பழுக்கக் காய்ச்சிய இரும்பை ஏந்தும்படி செய்தல் அல்லது கொதி நீரில் அவன் கையை விடும்படி செய்தல் முதலிய முறைகள் பின்பற்றப்பட்டு வந்தன. தண்டனைகள் மிகவும் கொடுமையாகவே இருந்தன. அபராதம் வசூலிக்கும் முறை அமுலில் இருந்தது. சத்திரியனைக் கொலை செய்து விட்டால் ஆயிரம் பசுக்களையும், வைசியனை கொலை செய்துவிட்டால் நூறு பசுக்களையும், சூத்திரனைக் கொலை செய்து விட்டால் நூறு பசுக்களையும் அபராதமாகக் கொடுக்க வேண்டும் என்ற சட்டம் இருந்தது. மன்னர் கடமை உணர்ச்சி வழுவியபோது மக்கள் கிளர்ந்து எழுந்து மன்னரை பதவியில் இருந்து நீக்கி விட்டு புதிய மன்னரை தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

**சமுதாய நிலை:**

ஆரியர்பிரிவு ஆண்கள் சூத்திரப் பெண்களை மணந்து கொள்ளலாம் என்றும் ஆனால் சூத்திர வர்ணத்து ஆண்கள் ஆரியப் பெண்களை மணந்து கொள்ளக் கூடாது என்றும் தடைகள் விதிக்கப்பட்டன. பிராமணர்கள், வேதங்களை ஓதுதல், வேள்விகளை நடத்துதல் முதலிய சமயச் சடங்குகளிலும், கல்வியிலும் ஈடுபட்டனர். சத்திரியர்கள் ஆட்சி நடத்துதல், போர்களில் ஈடுபடுதல் முதலியவற்றைச் செய்தனர். வைசியர்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, கைத் தொழில்கள், வாணிபம் முதலியவற்றில் ஈடுபட்டனர். வைசியர்களுக்கு ஊழியம் செய்பவர்கள் சூத்திரர் ஆயினர். நான்கு வர்ணத்தாரும் சேர்ந்து உணவு கொள்வதில் சிறிது சிறிதாக தடைகள் இக்காலத்தில் தோன்றத் துவங்கின.

வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு சடங்கும் பிராமணர்களால் மந்திரங்கள் ஓதப்பட்டே நடத்தப்பெற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. தெய்வத்துக்கு அடுத்தபடியாக பிராமணர்கள் வைத்து எண்ணப்பட்டனர்.

தொழிலின் அடிப்படையில் சாதிப் பிரிவுகள் தோன்றின. வணிகர், இடையர், தச்சர், குயவர், கொல்லர், மீன் பிடிப்போர் முதலிய பல்வேறு தொழில் செய்வோரும் தனித்தனி சாதியினராகப் பிரிந்தனர். இவர்கள் அனைவரும் சமுதாயத்தில் தாழ்ந்தவர்கள் எனக் கருதப்பட்டனர். சடங்குகளின் போது தச்சரைத் தொடுவது கூடத் தீட்டாகும் என்று பிராமணம் ஒன்று கூறுகிறது.

உபநயனச் சடங்கிற்குப் பின்னர் மாணவனைக் குரு ஏற்றுக் கொண்டார். குரு சீடனை தம் வீட்டிலேயே வைத்துக் கொண்டு தான் கற்ற கலைகளை அவ்வப்போது சொல்லிக் கொடுத்தார் ஒழுக்கத்தையும் அவர் போதித்தார். ஏறக்குறைய 12 ஆண்டுகள் இத்தகைய குருகுலவாசம் நடைபெற்றது. மாணவர்கள் மிக எளிய உணவை உட்கொண்டு கடுமையான வாழ்க்கை முறையைப் பின்பற்றினர். பல விரதங்களை அவர்கள் கடைபிடித்தனர். பிரம்மச்சரிய விரதம் (பெண்களை மனதாலும் விரும்பாமை) அவற்றில் மிக முக்கியமானது. பிச்சை எடுத்தே அவர்கள் உண்டனர்.

வாய் மூலமாகவே பெரும்பாலும் கல்வி போதிக்கப்பட்டது. தூய உச்சரிப்பு பெரிதும் வலியுறுத்தப்பட்டது வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், இலக்கணம், அறநூல், அளவை நூல் முதலிய பல பாடங்கள் போதிக்கப்பட்டன. சமஸ்கிருதத்துடன் பிராகிருத மொழியும் வழக்கில் இருந்தது. மூலிகைகளைக் கொண்டு நோய்களை குணப்படுத்தினர். மந்திரங்களாலும் குணப்படுத்தினர். வானசாத்திர அறிவும் இருந்தது. சமுதாய அமைப்பில் மட்டுமின்றி பழக்க வழக்கங்களிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டு வந்தன. புலால் உண்பது பாவம் என்ற கருத்து பரவி வந்தது. இறைச்சிக்காகக் கொல்லப்படக் கூடிய உயிர்களில் தங்களின் உறவினர்களின் ஆன்மா குடியிருக்கக்கூடும் என்ற பயத்தால் சிலர் இறைச்சி உணவின் மீது வெறுப்புக் கொண்டனர். மரக்கறி உணவு உண்பவர்கள், மாமிச உணவு உண்பவர்களை விட உயர்வாக மதிக்கப் பெற்றனர். அதே போல் மதுவை அருந்தாதவர்களும் சமுதாயத்தில் மதிப்புடன் திகழ்ந்தனர்.

பெண்களுக்கு சொத்துரிமை கிடையாது. அரச குடும்பங்களையும், பணக்காரக் குடும்பங்களையும் சேர்ந்த ஆடவர்கள் பல மனைவியரைப் பெற்றிருந்தனர். பெண்கள் குடும்பச் சடங்குகளிலும் விழாக்களிலும் கலந்து கொள்ள அனுமதிக்கப் பட்டனர். சில பெண்கள் கல்வி கற்று மேதைகளாகத் திகழ்ந்தனர். பெண் குழந்தைகள் பிறப்பதை மக்கள் விரும்பவில்லை. குழந்தை மணங்கள் நடைபெறத் துவங்கி விட்டன. பெண்கள் வீட்டினுள் அடைபட்டு வாழவில்லை. பல தொழில்களில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

**பொருளாதார நிலை:**

விவசாயமே மக்களின் முக்கிய தொழிலாக இருந்து வந்தது. இரும்பால் கலப்பையை செய்து கொண்டனர். நிலங்கள் பெயரளவில் மன்னருக்கு சொந்தமாக இருந்த போதிலும் அவை உண்மையில் நிலப் பிரபுக்களிடமே இருந்தன. நிலங்களில் கிணறுகள் வெட்டப்பட்டு வயல்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டது. நிலத்தை உழுவதற்கு மாடுகள் பயன்படுத்தப்பட்டன. பெரும் புயற்காற்று மழையாலும், வெட்டுக்கிளிக் கூட்டங்களாலும் பயிர்கள் நாசமாயின. ஆகவே அடிக்கடி பஞ்சம் ஏற்பட்டு மக்கள் பெருந்துன்பத்திற்கு ஆளாயினர்.

பருத்தியாலும் கம்பளத்தாலும் ஆடைகள் நெய்யப்பட்டன. ஆண், பெண் ஆகிய இருவருமே நெசவுத் தொழிலில் ஈடுபட்டனர். பெண்கள் ஆடைநெய்தல், கூடைசெய்தல், வண்ணம் தீட்டுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்தனர்.

வணிகர்கள் ஒன்று சேர்ந்து சங்கங்கள் அமைத்திருந்தனர். மலைகளில் வாழ்ந்த கிராதர்கள் என்ற மக்களோடு சில வணிகர்கள் வியாபாரம் செய்தனர். மலைகளில் கிடைத்த மருந்துகளான வேர், கிழங்கு, மூலிகை, மிருகங்களின் கொம்பு முதலியவற்றை கிராதர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு ஆடை, தோல் முதலியவற்றை வணிகர்கள் அவர்களுக்குக் கொடுத்தனர். பண்டமாற்று முறையிலேயே இக்காலத்தில் வாணிபம் நடந்து வந்தது. பாபிலோனியாவுடன் வாணிபத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர் என்று ஒரு சிலர் கருதுகின்றனர். ஆனால் இக்கால மக்கள் கடலைப் பற்றி அறிந்திருந்தனர். ஆனால் இதற்கு ஆதாரமில்லை. குன்றிமணியானது எடையாகப் பயன்படுத்தப்பட்டது. நூறு குன்றி மணி எடையுள்ள சதமானம் என்ற பொன்மணி ஒன்றும் எடை நிஷ்கா, கிருஷ்ணலா முதலிய நாணயங்கள் பயன்படுத்தப்பட்டதாக நம்பபடுகிறது. தகரம், தாமிரம், தங்கம், வெள்ளி ஆகிய உலோகங்கள் பாத்திரங்கள் செய்யவும், ஆபரணங்கள் செய்யவும் பெருமளவில் பயன் படுத்தப்பட்டன.

வசதி படைத்தவர்களின் வீடுகள் மரத்தால் கட்டப் பட்டிருந்தன. ஏழைகளின் வீடுகள் நாணல், கோரைப் புல், களிமண் ஆகியவற்றால் கட்டப்பட்டன. வசதி படைத்தவர்களின் வீடுகளில் பல அறைகளும், கூடங்களும் இருந்தன. அக்கினி சாலை, ஆண்கள் வசிக்கும் பகுதி, பெண்கள் பகுதி என்று பல பகுதிகளை அவை கொண்டிருந்தன. ஏழைகளின் குடிசைகள் பெரும்பாலும் ஒரு அறையை மட்டுமே கொண்டிருந்தன. பெருஞ்செல்வர்களின் இல்லங்களில் செல்வத்தை வைப்பதற்கென்று தனி அறையொன்று பாதுகாப்பாகக் கட்டப்பட்டிருந்தது. பிரபுக்களின் மாளிகைகளிலும் அரண்மனைகளிலும் பெண்களுக்கென்று அந்தப்புரங்கள் இருந்தன.

ஒரு ஆண்டிற்கு பன்னிரண்டு மாதங்கள் எனப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆண்டொன்றுக்கு 360 நாட்கள் எனக் கணக்கிட்டனர். இதனால் ஏற்படக் கூடிய வேறுபாட்டை சரிக்கட்டுவதற்காக ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பதின் மூன்றாவது மாதம் ஒன்று சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஏழு கிரகங்களைப் பற்றி அவர்கள் அறிந்திருந்தனர்.

அவையாவன: சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், மங்களம், பிரகஸ்பதி, சனி. ஒரு மாதம் என்பது 30 நாட்களைக் கொண்டதாகவும், இரண்டு பட்சங்களைக் கொண்டதாகவும் இருந்தது. இரண்டு மாதங்களைச் சேர்த்து ஒரு பருவத்தை அமைத்தனர்.

***சமய நிலை:***

சமயத்துறையில் பல விதமான மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. சடங்குகள், யாகங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவம் பெருகியது. ஆண்டு முழுவதும் நடைபெறும் யாகங்கள் சிலவற்றையும் அவர்கள் செய்தனர். இருக்கு வேத காலத்தில் தானியம், இறைச்சி, பால், சோமபானம் ஆகியவையே தெய்வங்களுக்குப் படைக்கப்பட்டன. ஆனால் பிந்திய வேத காலத்தில் மிருகங்களைப் பலியிடுதலும் முக்கியமான சடங்காயிற்று. அசுவமேதயாகம் நாளாவட்டத்தில் மிகவும் ஆடம்பரமானதொன்றாக ஆயிற்று.

சிவன், விஷ்ணு ஆகியோர் முதன்மையான கடவுள்களாக இப்பொழுது ஆயினர். மகாதேவன் என்று சிவன் அழைக்கப்பட்டார். இருக்கு வேத காலத்திலேயே விஷ்ணுவினுடைய நீண்ட மூன்று அடிகள் புகழ்ந்து பாடப்பட்டன. இப்பொழுது உலகமும் பிரபஞ்சமும் நியதிப்படி இயங்குவதற்கு விஷ்ணுவே காரணமாகக் கருதப்பட்டார். பூர்வ கர்ம வினைகள் பற்றிய கொள்கையும், அவற்றின் விளைவாக மறுபிறப்பு பற்றி கொள்கையும் இக்காலத்தில் தான் உருவாயின.

மோட்சம், நரகம் பற்றி கொள்கைகள் சமுதாயத்தில் தலையெடுத்தன. முற்பிறவியில் செய்த பயன்களை இப்பிறவியில் ஒவ்வொருவரும் அனுபவிக்கிறார் என்ற நம்பிக்கை பரவலாயிற்று. ஒருவன் உயர்ந்த குலத்திலோ, தாழ்ந்த குலத்திலோ பிறப்பது அவனது முன் வினைப் பயன் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அதனால் சமுதாயத்தில் அவரவர் தங்களுடைய நிலைகளில் திருப்தி அடைந்தனர். 'எல்லாம் தலை விதி' என்று வாளாவிருக்கக் கற்றுக் கொண்டனர். இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து காட்டிற்குச் சென்று தவமிருந்து இறைவனடி சேர முயன்று கொண்டிருந்த துறவிகள் பலர் இருந்தனர். துறவறவாழ்க்கையை மேற்கொள்ளுவோரைப் பிறரும் ஆதரித்தனர்.

**காவியங்களின் காலம்**

இந்திய மக்களின் வாழ்க்கையோடு ஐக்கியமாகிவட்ட இரு காவியங்கள் இராமாயணமும் மகாபாரதமும் ஆகும். இக் காவியங்களைத் துணையாகக் கொண்டு இக் காவியங்கள் தோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்களின் சமுதாய, அரசியல், பொருளாதார நிலைகளை நாம் அறிந்து கொள்ளலாம்.

***அரசியல் நிலை:***

மன்னர் தெய்வத் தன்மை பொருந்தியவராகக் கருதப்பட்டார். இவர் இறைவனின் வழித் தோன்றலாகவும் போற்றப்பட்டார். நோயுடையவர்களும், உடல் குறைபாடு உடையவர்களும் மன்னர் பதவிக்கு தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டனர். திருதராட்டிரன் குருடனாக இருந்தமையால் மன்னர் பதவி அவருக்குக் கொடுக்கப் படவில்லை. இவரது தம்பி பாண்டு மன்னரானார்.

காவியங்களின் காலத்தில் பெண்கள் ஆட்சி செய்ய அனுமதிக்கப்பட்டனர். இராமாயணத்தில் காட்டுக்கு இராமன் அனுப்பப்பட்டார். இராமாயணத்தில் காட்டுக்கு இராமன் அனுப்பப்பட்ட பின்னர் தசரதன் தன்னால் இராமனைப் பிரிந்து வாழ இயலாது எனப் புலம்புகிறார். அவர் மேலும் தான் இறந்ததும் கைகேயி விதவையாகி இந் நாட்டை ஆளலாம் என்று கோபத்தில் உரைப்பதாக அறிகிறோம். இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனின் தேவை ஏற்படின் பெண்களும் ஆட்சி நடத்த அனுமதிக்கப்பட்டனர் என்பதே.

மன்னர் இராஜன், போஜன், சாம்ராட், சத்திரியன் ஆகிய பட்டப் பெயர்களைப் பெற்றுத்திகழ்ந்தார். மன்னருக்கு நிருவாகத்தில் பலர் துணைபுரிந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் புரோகிதர் ஆவார். யானைக்கு பாகன் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் மன்னருக்கு புரோகிதன் என்ற கருத்து அக்காலத்தில் நிலவியது.

தசரதன் இராமனை மன்னனாக நியமிக்க முடிவு செய்தபோது வசிட்டரும் எட்டு அமைச்சர்களும் இருந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. இதிலிருந்து மன்னர் அமைச்சர்களைக் கலந்தே முக்கிய முடிவுகள் எடுத்தார் என அறிகிறோம். அறிவாற்றல் அடக்கம், அன்பு, பொறுமை, வீரம், உறுதி, கடமை தவறாமை ஆகியவற்றை பண்புகளாகக் கொண்டவர்களே அமைச்சர் பதவிக்கு தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டனர். ஐம்பது வயதை அடைந்தவர்களே அமைச்சர் பொறுப்புக்கு தகுதியுடையவர்கள் என்ற நிலை இருந்தது. நல்லதோர் அமைச்சர் இன்றி மன்னர் மூன்று நாட்கள் கூட ஆட்சி செலுத்த இயலாது என அக்கால மக்கள் கருதினர்.

ஒற்றர்கள் பகை அரசரின் படையில் வீரராய் சேர்ந்து அங்கு நடக்கும் செயல்களை அறிந்து தம் மன்னருக்குத் தெரியப்படுத்தினார். காவியங்களிலிருந்து தூதுவர்களைப் பற்றியும் நாம் பல செய்திகளை அறிகிறோம். தூதுவர்களை கொலை செய்யும் வழக்கம் இல்லை. தூதுவனை கொலை செய்வது பாவம் என்றே கருதப்பட்டது.

குற்றங்களுக்கு ஏற்ப தண்டனை வழங்கப்பட்டது. செல்வந்தர்கள் அபராதமாகப் பணம் செலுத்தி விட்டு தண்டனைகளில் இருந்து தப்பித்தனர். ஏழைகள் அபராதத் தொகை செலுத்த இயலாமையால் சிறைத் தண்டனை பெற்றனர்.திருடியவனை கண்டு பிடிக்க இயலாத பட்சத்தில் மன்னர் பொருளை இழந்தவனுக்கு தன் கருவூலத்திலிருந்து பொருள் கொடுத்து ஈடு செய்தார்.

போரில் ஒரு வீரர் தான் வைத்திருக்கும் ஆயுதத்தைப் போல் (எதிரணி வீரர்) எவர் ஆயுதம் வைத்திருக்கிறாரோ அவரோடு தான் போர் செய்ய வேண்டும் என்ற நியதி இருந்தது. போருக்குத்தயாராக இல்லாத வீரர்களோடும், தோற்ற நிலையில் பின்வாங்குவோரோடும் போர் செய்வது அக்கால வழக்கமில்லை. விலங்குகளையும், இசைவாணர்களையும், பிராணர்களையும், பெண்களையும், குழந்தைகளையும், வயதானவர்களையும் போரில் தாக்குவது இல்லை என்ற விதி இருந்தது. ஆனால் இவ்விதி அவ்வப்போது மீறப்பட்டதாக அறிகிறோம்.

தோல்வியுற்ற மன்னர் வெற்றி பெற்ற அரசருக்கு அடிமை எனக் கருதப்பட்டார். ஆகவே அவர் வென்ற மன்னருக்கு திறை செலுத்தினார்.

மன்னர் மக்களைக் காக்க வேண்டியது கடமை என்றும் ஆகவே அவர் மக்களிடமிருந்து வரி வசூல் செய்து கொள்ள உரிமை பெற்றவர் என்றும் கருதப்பட்டது. வரியை வாங்கிக் கொண்டு மக்களைக் காக்காத மன்னர் அதர்மம் புரிபவராகக் கருதப்பட்டார். மலர்களை அழிவுக்கு உள்ளாக்காமல் தேனீ எப்படித் தேனை எடுக்கிறதோ அது போல அரசர் மக்களுக்கு துன்பம் ஏற்படாமல் வரி வசூலிக்க வேண்டும் என்ற கருத்து அக்காலத்தில் நிலவியது பெண்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்காத மன்னர் இறந்தவராகக் கருதப்பட்டார். வாக்குறுதிகளை மீறும் மன்னரைப் பைத்தியம் பிடித்த நாயைக் கொல்லுவது போல கொன்றாலும் பாவமில்லை என மக்கள் கருதினர். மக்களைப் பாதுகாக்காத மன்னர் மரயானைக்கும், மேகமில்லா வானத்திற்கும், விளையாத நிலத்திற்கும் ஒப்பிடப்பட்டார். கிராமமே அடிப்படையான ஆட்சிப் பிரிவாக இருந்தது. கிராமத்தின் தலைவர் கிராமணி என அழைக்கப்பட்டார். கிராமணிக்கு மேற்பட்ட அதிகாரிகள் தசகிராமணி, பிம்சதிபா, தச கிராமணி என அழைக்கப்பட்டனர். பத்து கிராமங்களுக்கு தலைவராக தசகிராமணியும், இருபது கிராமங்களுக்கு தலைவராக பீம் சதீபரும், நூறு கிராமங்களுக்கு தலைவராக சத கிராமணியும் திகழ்ந்தனர். அதிபதி என்பவர் ஆயிரம் கிராமங்களுக்கு தலைவராக இருந்தார்.

படை வீரர்களுக்கு பணமாகவும் பொருளாகவும் ஊதியம் கொடுக்கப்பட்டது. காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்ற நால்வகைப் படைகள் அக்காலத்தில் இருந்தன.

**சமுதாய நிலை**

பழமையான நால் வகைச் சாதியோடு புதிய சாதிகள் பல தோன்றின. பெண்கள் சமுதாயத்தில் மதிப்பு இழந்தனர். ஒரு ஆண் பல பெண்களை மணப்பதும், ஒரு பெண் பல ஆடவர்க்கு மனைவி ஆவதும் அனுமதிக்கப்பட்டது உயர்குடிப் பெண்கள் சுயம்வரம் மூலம் தங்கள் கணவன்மார்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். தாழ்ந்த குடியில் பிறந்த பெண்கள் தாங்கள் விரும்பும் ஆடவரை மணக்க அனுமதிக்கப்படவில்லை. பெண்கள் முகத்தை திறையிட்டு மறைக்கும் பழக்கம் இக்காலத்தில் தான் வழக்கத்திற்கு வந்தது. குழந்தைகள் திருமணங்கள் நிகழத் தொடங்கின. உடன்கட்டை ஏறும் பழக்கம் இருந்தது. சத்திரியர்கள் நீண்ட முடி வளர்த்தனர். பிராமணர்கள் தலை முடியை மழித்து உச்சியில் குடுமி மட்டும் வைத்துக் கொண்டனர்.

பெரும்பாலோர் புலால் உண்ணாமையைக் கடைப்பிடித்தனர். வாலிபர்கள், பருவப் பெண்கள், சுமங்கலிகள் ஆகியோர் பலப்பல வண்ண நிற ஆடைகள் அணிந்தனர். வயதான ஆண்களும், விதவைகளும் வெள்ளை நிற ஆடைகளை அணிந்தனர். இக்கால மக்கள் பொதுவாக பருத்தி ஆடைகளையும், விழாக் காலங்களில் பட்டாடைகளையும் அணிந்தனர். அவர்கள் தங்கம், வெள்ளி, ஆகியவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தனர். பன்னிரண்டு ராசிகளையும், இருபத்தேழு நட்சத்திரங்களையும் அவர்கள் அறிந்திருந்தனர். செல்வர்கள் சூதாட்டத்திலும் குடி பழக்கத்திலும் அதிகம் ஈடுபட்டனர்.

அவர்களின் முக்கியத் தொழில்கள் வேளாண்மையும், கால்நடை வளர்ப்புமாகும். தொழில்கள் பல சேர்ந்து கூட்டுறவாக இயங்கியது. பருத்தி, பட்டு, கம்பளம் ஆகியவற்றில் ஆடைகள் நெய்யப்பட்டன. துணிகளில் பூ வேலைப்பாடுகள் செய்தல், வண்ணம் தீட்டுதல் ஆகியவற்றை நன்கு அறிந்திருந்தனர். சுரங்கங்கள் தோண்டி தங்கம், வைரம் முதலியவற்றை எடுத்தனர். பணப் பழக்கம் இருந்ததெனினும் பண்டம் மாற்றும் முறையே பரவலாகக் காணப்பட்டது.

**பொருளாதார நிலை:**

ஆடு மாடுகளை மேய்ப்பதையும் வேளாண்மை செய்வதையும் தொழிலாகக் கொண்ட இக்கால மக்களது பொருளாதாரம் சிறந்து காணப்பட்டது. இத்தொழில்களில் அவர்கள் கூடுதல் கவனம் செலுத்தினர். வணிகர்களும், கலைஞர்களும் ஏற்படுத்தியிருந்த கழகங்கள் அவர்களது நலனைப் பேணிக்காத்து வந்தன. ஒவ்வொரு நகரத்திலும் பல கழகங்கள் அமைக்கப்-பட்டிருந்தன. அச்சிடப்பட்ட நாணயங்கள் பயன்படுத்தப்பட்டாலும், பண்டமாற்று முறையும் நடைமுறையில் இருந்தது. மன்னர்கள் மக்களிடமிருந்து வரி வசூலித்தார்கள். வரிபொருளாக வழங்கப்பட்டது.

**சமயத்துறை:**

பிரமன், சிவன், விஷ்ணு ஆகிய மூன்று கடவுள்களும் மும்மூர்த்திகளாக முழு முதற்கடவுளராக ஆயினர். இந்திரன், சூரியன், வருணன் ஆகிய கடவுளர்கள் பின்னால் தள்ளப்பட்டனர். கணேசர், பார்வதி ஆகிய கடவுளர்கள் பிரமலமாயினர். திருமாலை மக்கள் பல்வேறு அவதாரங்களில் வணங்க ஆரம்பித்தனர். இராமனும், கிருஷ்ணனும் விஷ்ணுவின் அவதாரங்கள் என்ற கருத்து நிலவியது. இந்துக்கள் தங்களின் சமய நூலான பகவத் கீதையை மதித்துப் போற்றினர். பகவத் கீதையை பாராயணம் செய்தால் மோட்சத்தை அடையாளம் என மக்கள் நம்பினர். விஷ்ணு அநீதியை ஒழித்து நேர்மையை நிலை நாட்டுவதற்காக அவதாரம் செய்துள்ளார் என்னும் கருத்து மக்களிடையே பரவியது. முன்வினைப்பயன், மறுபிறவி போன்ற கொள்கைகளில் அவர்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து வீடுபேறடைவதற்காகக் கடும்தவம் புரிந்து கொண்டிருந்தனர் பலர். இக்காலத்தில் சமயநிலை அதன் உச்சக்கட்டத்தை அடைந்தது எனலாம்.

# 4. சமணமும், பௌத்தமும்

இந்திய வரலாற்றில் கி.மு. ஆறாம் நூற்றாண்டு மிக முக்கியமான காலமாகும். ஏனெனில் இக்காலத்தில் தான் இந்தியாவில் மகாவீரர், புத்தர் ஆகியோர் தோன்றி தங்களது சமயக் கருத்துகளை மக்களிடையே பரப்பினர். அவர்கள் ஏற்படுத்திய சமயங்கள் முறையே சமணமதம், பௌத்த மதம் ஆகும். இப்புதிய சமயங்கள் இங்கு தோன்றக் காரணங்கள் யாவை என்பது பற்றி இவண் ஆய்வோம்.

### கி. மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியா:

(1) இந்து சமயம் பாமர மக்களால் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு ஓர் சிக்கலான சமயமாக இருந்தது. அதன் தத்துவங்கள் பிராமணர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடிய அளவில் அமைந்திருந்தன. புரியாத அச்சமயத்தை கண்மூடித்தனமாகப் பின்பற்றிச் செல்ல சமுதாயத்தின் ஏனைய பிரிவினர் விரும்பவில்லை.

(2) ஆட்சிப் பொறுப்பில் இருந்த சத்திரியர்களுக்கும் பிராமணர்களுக்குமிடையே பல நூற்றாண்டுகள் நடந்து கொண்டிருந்த ஆதிக்கப் போட்டி கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தீவிரமடைந்தது.

(3) இந்து சமயத்தின் குறைபாடுகளை சுட்டிக்காட்டி விளக்கக் கூடிய பெரியார்கள் (மகாவீரர், புத்தர்) இந்த ஆறாம் நூற்றாண்டில் தோன்றினர்.

(4) மூடப்பழக்கங்கள், ஆடம்பரச் சடங்குகள் பல இந்து சமயத்தில் தோன்ற ஆரம்பித்தன. கடவுளின் பெயரால் உயிர்ப்பலியிடும் கொடிய வழக்கம் இந்து சமயத்தில் வேரூன்ற ஆரம்பித்தது. பிராமணர்கள் மூடநம்பிக்கைகளை வளர்த்து சடங்குகளின் எண்ணிக்கையை அதிகரித்து அக்கால மக்களிடமிருந்து ஏராளமான பொருள் பெற்றனர்.

(5) மந்திரத்தினால் எதனையும் சாதிக்க முடியும் என மக்கள் நம்பினர். மந்திரத்தினால் நோயைப் போக்கவும், உண்டாக்கவும் முடியும் என்றும், வெற்றி தோல்விகளை உருவாக்கிட முடியம் என்றும் நம்பினர் வேதங்களை மறந்து மக்கள் மந்திரங்களுக்கு அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தனர்.

(6) ஆரியர்கள் உயிர்ப்பலியிட்டனர். அறிவை மழுங்கச் செய்யும் போதை யூட்டும் சோம பானத்தை அருந்தினர். மக்களிடமிருந்து ஏராளமான தொகையை வரதட்சணையாகப் பெற்று ஆடம்பரமாக ஒழுக்கக்கேடான வாழ்க்கை வாழ்ந்தனர். ஆரியர் பால் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. அவ் வெறுப்பு காலப் போக்கில் அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த இந்து சமயத்தின் பால் திரும்பியது.

(7) சாதிக் கொடுமை இந்து சமயத்தில் தலை விரித்தாடியது. சூத்திரர்கள் மட்டுமின்றி சத்திரியர்களும், வைசியர்களும் பிராமணர்களால் தரக் குறைவாக மதிக்கப்பட்டனர். இந்தச் சூழ்நிலை சமணம், பௌத்தம் ஆகிய இரண்டு சமயங்களும் தோன்றக் காரணமாய் அமைந்தது.

### சமண சமயம்:

சமண சமயத்தை தோற்றுவித்தவர் வர்த்தமான மகா வீரர் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். வேறு சிலரோ வர்த்தமான மகா வீரருக்கு முன்னரே இருபத்து மூன்று சமண தீர்த்தங்கரர்கள் இருந்தார்கள் என்றும் வர்த்தமான மாக வீரர் இருபத்து நான்காவது தீர்த்தங்கரர் என்றும் கருதுகின்றனர். வாழ்க்கை என்னும் ஆற்றைக் கடப்பதற்கு பாதை அமைப்பவர் என்பது 'தீர்த்தங்கரர்' என்ற சொல்லுக்கு பொருளாகும். இந்த இருபத்து நான்கு தீர்த்தங்கரருள் முதல் இருபத்திரண்டு பேர்களைப் பற்றி சமண சமயப் புராணங்களில் மட்டுமே செய்திகள் உள்ளன. அவர்களைப் பற்றி வரலாற்றுச் செய்திகள் ஏதுமில்லை. ஆகவே அவர்கள் கற்பனை மனிதர்களே என்ற கருத்து பரவலாக உள்ளது.

**பார்சவ நாதர்:**

இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரர் பார்சவநாதர் ஆவார். இவர் மகாவீரருக்கு 250 ஆண்டுகள் முன்னர் வாழ்ந்தார். இவரது தகப்பனார் காசியின் மன்னர் அசுவசேனர் ஆவார். இவரது தாயார் வாமதேவி ஆவார். இவர் பிரபாவதி என்ற பெண்ணை மணந்து மிகுந்த ஆடம்பரமாக வாழ்ந்தார். தமது 30 ஆவது வயதில் இல்வாழ்க்கையை வெறுத்துத் துறவியானார். 83 நாட்கள் கடுமையான தவம் செய்து ஞானம் பெற்றார். தாம் பெற்ற ஞானத்தை மக்களுக்கு சுமார் 70 ஆண்டுகள் போதித்து விட்டு தமது நூறாவது வயதில் காலமானார். பத்ரபாகு எழுதிய கல்ப சூத்திரம் இவரைப் பற்றிய பல செய்திகளைத் தருகிறது. சுமார் ஐந்து லட்சம் ஆண்களும் பெண்களும் இவரது வழியைப் பின்பற்றினர். மகாவீரரின் பெற்றோர்கள் இவரது வழியைப் பின்பற்றினர் எனக் கூறப்படுகிறது. பார்சவநாதர் போதித்த நான்கு விரதங்கள்:

1) எவ்வுயிருக்கும் இன்னல் செய்யாமை
2) உண்மை பேசுதல்
3) திருடாமை
4) சொத்துகள் வைத்துக் கொள்ளாமை. இந்த நான்கு விரதங்களோடு இல் வாழ்க்கை விட்டு துறவு மேற்கொள்ளல் என்ற ஐந்தாவது விரதத்தைச் சேர்ந்தவர் மகாவீரர் ஆவார்.

**மகாவீரர்:**

இவரே சமண சமயத்தின் கடைசி தீர்த்தங்கரர். இவர் வைசாலிக்கு அருகில் அமைந்திருந்த குண்ட கிராமத்தில் பிறந்தார். இவ்வூர் தற்போது பசுகுந்தா என வழங்கப்படுகிறது. இவரது தந்தையார் சித்தார்த்தர் என்ற செல்வப் பிரபு ஆவார். இவரது தாயார் திரிசலா ஆவார்.

வர்த்தமானர் என்பது இவரது இயற்பெயராகும். இவரது பிறப்பை கொண்டாடும் வகையில் வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் கல்பசூத்திரம் கூறுகிறது. மகாவீரர் பிறந்த ஆண்டையும் இறந்த ஆண்டையும் பற்றிப் பல வேறுப்பட்ட கருத்துகள் நிலவுகின்றன. இவர் கி.மு. 467 ஆம்ஆண்டில் இறந்தார் என்பதே பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

வர்த்தமானர் யசோதை என்ற பெண்ணை மணந்தார். இவ்விருவருக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. இவர் தம் பெற்றோர் இறந்த பின் தனது தமையனாரின் அனுமதியைப் பெற்று தனது 30 ஆவது வயதில் துறவு வாழ்க்கை மேற்கொண்டார். தமது ஆடைகளையும் துறந்து நிருவாணமாக 12 ஆண்டுகள் அவர் அலைந்து திரிந்தார். பின்னர் பதின்மூன்றாவது ஆண்டு சால் என்னும் மரத்தினடியில் நிருவாணம் எனப்படும் உயர்ஞானத்தை அடைந்தார்.

**மகாவீரர் போதனைகள்:**

இறைவன் உண்டு என்பதை நம்பக்கூடாது. இந்த உலகை இறைவன் படைத்தான் என்பது பொய். மந்திரங்கள் ஓதுவதும், வேள்விகள் நிகழ்த்துவதும், உயிர்களைப் பலியிடுதலும் பயனற்றவை. உண்மையை உணரும் பொருட்டு உடலை வருத்திக் கொள்வதும், பட்டினி கிடந்து உயிர் துறப்பதும், தற்கொலை செய்து கொள்வதும் பாராட்டத் தக்கது. அஹிம்சையை கடைப்பிடிப்பது மிக அவசியம். மனித உயிர்களை மட்டுமின்றி விலங்குகள், பறவைகள், செடி கொடிகள் ஆகியவனவும் உயிருள்ளவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பாவம் செய்யும் மனிதன் மறுபிறவி எடுக்க வேண்டும். மனிதன் இப்பிறவியில் பெற வேண்டிய சிறப்பு மோட்ச நிலையே ஆகும்.

**சமண சமய தத்துவம்:**

உயிர்களை கடவுள் படைக்கவில்லை. மக்களாகப் பிறந்து துறவு பூண்டவர்களே வீடுபேறு (மோட்சம்) அடைய முடியும். சமண தத்துவக் குறி இதுவேயாகும். ஸ்வஸ்திக் அடையாளம் பிறவிச் சக்கரத்தை குறிக்கிறது. பிறவிச் சக்கரத்தின் மேலே உள்ள மூன்று புள்ளிகள் நல்ஞானம், நல் நோக்கு, நல்லொழுக்கம் எனப்படும் மூன்று இரத்தினங்களைக் குறிக்கின்றன. இம் மூன்று கொள்கைகளைக் கடைப்பிடிப்பவரின் ஆத்மா மோட்ச நிலையை அடையும். இத்தத்துவக்

குறியில் அரை வட்டத்துக்கு மேலே உள்ள புள்ளி மோட்ச நிலையை அடையும் ஆத்மாவைக் குறிக்கிறது.

**சமணத்துறவிகள் வாழ்க்கை முறை:**

துறவறம் மேற்கொள்ளும் சமணர்கள் அஹிம்சை, வாய்மை, கள்ளுண்ணாமை, துறவு, அவா நீக்குதல் ஆகிய ஐந்தையும் பின்பற்ற வேண்டும். திசைகளையே ஆடையாகக் கருதி அவர்கள் ஆடையின்றி நிருவாணமாகத் திரிதல் வேண்டும். நீராடல் கூடாது. தரையிலேயே படுத்து உறங்குதல் வேண்டும். பல்தேய்த்தல் கூடாது. நின்ற படியே உண்ணல் வேண்டும். நடக்கும்போது தரையை உற்றுப்பார்த்து புழு பூச்சிகள் இருந்தால் அவற்றை மிதிக்காமல் நடக்க வேண்டும். உணவை யாசித்து உண்ண வேண்டும். அதுவும் அதிகமாக உண்ணாமல் அளவாகவே உண்ண வேண்டும். தமக்குரிய மயிற்பீலி, கமண்டலம் முதலியவற்றை கையிலெடுக்கும் போதும், வைக்கும் போதும் எறும்பு முதலிய சிற்றுயிர்கள் இறந்து போகாமல் பார்த்து வைக்க வேண்டும். தலைமயிரை கத்தியினால் மழிக்காமல் கையினால் பிடுங்கிக் களைய வேண்டும். எறும்பு, கொசு முதலியவை கடித்தால் அத்துன்பங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும். அவற்றை கொல்லக் கூடாது.

**இல்லறத்தை மேற்கொள்ளும் சமணர் வாழ்க்கை முறை:**

இல்லறத்தை மேற்கொள்ளும் சமணர் கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறன்மனை விரும்பாமை, பொருள் விரும்பாமை ஆகியவற்றைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். ஊன், தேன், கள் ஆகியவற்றை உண்ணக் கூடாது. சூரியன் மறைவுக்குப் பின்னர் விளக்கு வெளிச்சத்தில் உணவு உண்ணும் போது விளக்கின் ஒளியில் விழுந்து சிறிய பூச்சிகள் இறக்க நேரிடும். ஆகவே சூரியன் மறையும் முன் உணவு அருந்திவிட்டு படுக்கைக்குச் செல்ல வேண்டும்.

**சமண சமயத்தின் பிளவு:**

மகாவீரர் இறப்புக்குப் பின் சமண சமயத்தின் வரலாறு தெளிவாகத் தெரியவில்லை. அவரது இறப்புக்குப் பின் அவரது சீடர் சுதர்மன் சமண சமயத் தலைவரானார். நந்த வம்ச மன்னர்களில் சிலர் சமண சமயத்தை சார்ந்தவர்களாக இருந்தனர்.

சந்திர குப்த மௌரியரின் ஆட்சியில் மகதப் பேரரசில் கொடிய பஞ்சம் நிலவியது. ஆகவே சமணர்களில் பாதிப்பேர் வட இந்தியாவிலிருந்து மைசூர் மாநிலத்தில் உள்ள சிரவண பெல்கொலா என்ற இடத்திற்குச் சென்று குடியேரினர். அப்பஞ்சத்தை நீக்க தவம் மேற்கொள்ள வேண்டும் என்று கருதி சில சமணர்கள் தவம் இருந்து உயிர் நீத்தனர். அப்படி தவம் மேற்கொண்டு உயிர் நீத்தவர்களில் சந்திர குப்த மௌரியரும் ஒருவர். 12 ஆண்டுகளுக்குப் பிறகு பஞ்சம் நீங்கியது. மைசூர் சென்றிருந்த சமணர்கள் திரும்பி வந்தனர். தம்மோடு மைசூருக்கு வராது இருந்தவர்களோடு கருத்து வேறுபாடு கொண்டனர். மைசூர் சென்று திரும்பி வந்த சமணர்களுக்கு பத்திரபாகு தலைவராக இருந்தார். மைசூர் செல்லாது வட இந்தியாவிலேயே வாழ்ந்த சமணர்களுக்கு ஸ்தூலபத்திரர் தலைவராக இருந்தார். இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் தூற்றிக் கொண்டனர். இந்த இரு தரப்பினருக்கும் சமாதானம் செய்து வைக்க முதல் சமண மாநாடு பாடலிபுத்திரத்தில் கூட்டப்பட்டது. பத்திரபாகுவின் தலைமையிலான சமணர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்து விட்டனர். இப்பூசலின் விளைவாக சமண சமயத்தில் பிளவு ஏற்பட்டது. பத்திரபாகுவின் கட்சியினர் திகம்பரர்கள் என அழைக்கப்பட்டனா. ஸ்தூல பத்திரரின் தலைமையிலான சமணர்கள் சுவேதம்பரர்கள் என அழைக்கப்பட்டனர். திகம்பரர்கள் ஆடை அணியாது வாழ்ந்தனர் சுவேதம்பரர்கள் வெள்ளை நிற ஆடையை அணிந்து வாழ்ந்தனர்.

**சமண சமய வீழ்ச்சி:**

சமண சமயத்தின் கொள்கைகள் பின்பற்ற கடினமாக இருந்தமையால் இச்சமயம் காலப்போக்கில் ஆதரவு இழந்து அழியத் தொடங்கியது. அலாவுதீன் கில்ஜி குஜராத்தில் சமண ஆலயங்கள் பலவற்றை அழித்தார் என சமண நூல்கள் கூறுகின்றன. தற்போது சமண மதம் குஜராத்தில் சிற்சில பகுதிகளில் பின்பற்றப் படுகிறது.

# புத்த சமயம்

## முன்னுரை:

நெடுங்காலமாக புத்த சமயமும், சமண சமயமும் ஒரே சமயம் என்ற தவறான கருத்து நிலவி வந்தது. பின்னர் இவ்விரு சமயங்களும் வெவ்வேறு சமயங்கள் என வரலாற்று வல்லுநர்கள் உணர்ந்தனர். புத்த சமயத்தை தோற்றுவித்தவர் புத்தர் ஆவார். இவர் அரச குடும்பத்தில் பிறந்தவர். இவரது தகப்பனார் இமயமலை அடிவாரத்தை ஆண்டு வந்த சாக்கிய குலத்து அரசர் சுத்தோதனர் ஆவார். புத்தரின் தாயார் மாயா தேவி என்பவர். புத்தருக்கு யசோதை என்ற மனைவியும் இராகுலன் என்ற மகனும் இருந்தனர்.

## புத்தரின் பிறப்பும், இளமைக்காலமும் பற்றிய சில செய்திகள்:

மாயா தேவி யானை ஒன்று தன் உடலினுள் நுழைவதாகக் கனவு கண்டார். இந்தக் கனவுக்கு பலன் சொன்ன நிமித்திகர் மாயாதேவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என்றும், அக்குழந்தை வாலிபப் பருவம் அடைந்ததும் துறவு வாழ்க்கை மேற்கொள்ளும் என்றும் சொன்னார். அந்நிமித்திகர் சொன்னபடி ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை துறவு பூணும் எண்ணம் தோன்றாமலிருக்கும் பொருட்டு அதனை ஆடம்பர வாழ்க்கை வாழச் செய்தார் அதன் தந்தை சுத்தோதனர். அக்குழந்தை வளர்ந்து வாலிபப் பருவம் எய்தியது. நாட்டில் பசியும், பிணியும், மூப்பும், மரணமும் மக்களை வாட்டி வதைப்பதைக் கண்ட அந்த இருபத்தொன்பது வயது இளைஞர் மனித உலகின் நன்மையைக் கருதி துறவு வாழ்க்கை மேற்கொண்டார். நள்ளிரவில் தனது மனைவியையும் மகனையும் துறந்து அரண்மனையை விட்டு வெளியேறினார். அந்த இளைஞரே பின்னர் ஒரு புதிய தோற்றுவித்த புத்தர் ஆவார்.

## புத்தரின் துறவு வாழ்க்கை:

துறவறம் மேற்கொண்ட புத்தர் தலையை மொட்டை அடித்துக் கொண்டார். நல்லறிஞர்களிடம் உபதேசம் கேட்டார். யோகம் பயின்றார். புலன்களை அடக்கினார். இருப்பினும் அவருக்கு அமைதி கிடைக்கவில்லை. பின்னர் 'உருவேல்' என்ற காட்டிற்குச் சென்று ஐந்து துறவிகளுடன் உறக்கம் இன்றி கடுந்தவம் புரிந்தார். அப்படியும் அவருக்கு அமைதி கிடைக்கவில்லை. அளவுக்கு அதிகமாக உடலை வருத்திக் கொள்வதால் பயனில்லை என்பதை உணர்ந்தார். எனவே சுஜாதா என்னும் இடையர் குலப்பெண் அளித்த பால் உணவை உண்டார். இதனைக் கண்ட ஐந்து துறவிகளும் தவத்தின் இடையே உணவு உட்கொண்ட புத்தர் மீது கோபம் கொண்டு அவரை அவ்விடத்திலேயே விட்டு விட்டு வேறிடம் சென்று விட்டனர்.

## புத்தர் மெய்ஞ்ஞானம் பெறல்:

உலகின் துன்பத்திற்குக் காரணம் என்ன என்பதை அறிந்து கொள்ளாமல் இவ்விடத்தை விட்டு எழுந்திருப்பதில்லை என்ற மன உறுதியுடன் ஒரு நாள் போதி மரத்தினடியில் புத்தர் அமர்ந்தார். அம்மரத்தினடியில் அவர் அன்றே மெய்ஞ்ஞானம் பெற்றார். அவர் மெய்ஞ்ஞானம் பெற்றபோது அவருக்கு வயது முப்பத்தைந்து. ஆசையற்ற நிலையில் பேரின்பத்தைப் பெறலாம் என உணர்ந்து கொண்டார். பின்னர் அவர் தாம் கண்ட மெய்ஞ்ஞானத்தை தம்மை விட்டு விலகிச் சென்ற ஐந்து துறவிகளுக்கும் போதித்தார். அவர்கள் ஐவரும் இவரது சீடர்கள் ஆயினர். மேலும் ஆயிரக் கணக்கான துறவிகள் இவரது சீடர்கள் ஆயினர். புத்தர் தனது முதல் சமயச் சொற்பொழிவை காசியிலிருந்து மான் பூங்காவில் நிகழ்த்தினார். 42 ஆண்டுகள் தொண்டு புரிந்து விட்டு தனது எண்பதாவது வயதில் குசி நகரம் என்ற இடத்தில் புத்தர் இறந்தார். பன்றியின் இறைச்சியை உண்ட போது அது தொண்டையில் சிக்கி இறந்தார் புத்தர் என்பது தவறான கருத்து. அஹிம்சைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஒரு மதத்தை ஏற்படுத்திய அவர் ஊன் உணவு உண்டார் என்பதை ஒப்புக் கொள்ள முடியவில்லை. அவரைப் பிடிக்காத சிலர் அவர் பெயரைக் கெடுக்க இப்படி வதந்தியைப் பரப்பி இருக்கலாம். அவர் நச்சு காளானை உண்டு இறந்தார் என்பதே சரியான கருத்து.

## புத்த சமய கொள்கைகள்:

புத்த சமயக் கொள்கைகளை பண்டிதரும், பாமரரும் எளிதாகப் பின்பற்றலாம். இச்சமயத்தில் சாதிப் பாகுபாடுகள் இல்லை. அர்த்தமற்ற சடங்குகள் இல்லை. கடவுளைப் பற்றி இச்சமயத்தில் ஏதும் குறிப்பிட வில்லை. அதிகம் உண்பவனும், உண்ணாமல் பட்டினி கிடப்போனும், அதிகம் உறங்குவோனும் உறங்காமல் இருப்போனும் ஞானம் பெற முடியாது என்கிறது புத்த மதம்.

**நான்கு உண்மைகள்:**

புத்தர் நான்கு உண்மைகளைப் போதித்தார். அவை நான்கு உயர் உண்மைகள் எனப்படும். அவையாவன.

1) மனித வாழ்க்கை துன்பம் நிறைந்தது.

2) ஆசையே துன்பத்திற்கு காரணம்.

3) ஆசையை நீக்கினால் துன்பத்திலிருந்து மீளலாம்.

4) துன்பத்தை நீக்க எட்டு நன்னெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**எட்டு நன்னெறிகள்:**

**1) நல்ல நம்பிக்கை:**

நான்கு உயர் உண்மைகள் மூலம் மெய்ஞ்ஞானம் பெற முடியும் என்ற நம்பிக்கையோடு திகழ வேண்டும். இதுவே நல்ல நம்பிக்கை ஆகும்.

**2) நல்ல எண்ணம்:**

மனதாலும் ஒருவருக்கும் தீங்கு செய்யக்கூடாது. இதுவே நல்ல எண்ணம் எனப்படும்.

**3) நல்ல பேச்சு:**

பொய் பேசக் கூடாது. இன்சொல்லே பேசல் வேண்டும். இதுவே நல்ல பேச்சு.

**4) நல்ல செயல்:**

அஹிம்சையைப் பின்பற்ற வேண்டும். திருட்டு, தீயொழுக்கம் கூடாது. இஃதே நல்ல செயல்.

**5) நல்ல வாழ்க்கை:**

நல்ல வழியில் பொருள் ஈட்ட வேண்டும். அப்பொருள் பிறருக்கும், தனக்கும் பயன்படுமாறு வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாழ்க்கையே நல்வாழ்க்கை.

**6) நல்ல முயற்சி:**

தீய பழக்க வழக்கங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஓயாது முயற்சி மேற்கொள்ள வேண்டும். அம் முயற்சியே நல் முயற்சி.

**7) நல்ல மனம்:**

காமமும் குரோமும் அற்ற நல்ல மனதைப் பெற வேண்டும். அம்மனமே நல்லமனம்.

**8) நல்ல தியானம்:**

உலக உயிர்கள் உய்யும் பொருட்டு தியானம் மேற்கொள்ள வேண்டும். அத்தியானமே நல்ல தியானம்.

**புத்த சமயத்துத் துறவிகள் பின்பற்ற வேண்டிய ஐந்து கட்டளைகள்:**

1) ஆடல், பாடல்களில் பங்கு கொள்ளக் கூடாது.

2) பூ, வாசனைத் திரவியம் ஆகியவற்றைப் பயன்படுத்தக் கூடாது.

3) அளவாகவே உண்ண வேண்டும்.

4) மிருதுவான படுக்கைகளில் உறங்கக் கூடாது.

5) பணம் வைத்துக் கொள்ளக் கூடாது.

**புத்த சமயத்து இல்லறத்தார் பின்பற்ற வேண்டிய ஐந்து கட்டளைகள்:**

1) பிறர் பொருளை விரும்பக் கூடாது.

2) கொல்லாமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

3) பொய் பேசுதல் கூடாது.

4) பிறன் மனை விழைதல் கூடாது.

5) கள்ளுண்ணக் கூடாது.

**புத்த சமயம் உலகம் முழுவதும் பரவியதற்கான காரணங்கள்:**

1) புத்தரின் போதனைகள் எளிமையானவை, பாமரரும் அதனைப் புரிந்து கொள்ள இயலும்.

2) புத்தர் தமது கொள்கைகளை அனைவருக்கும் தெரிந்த பாலி மொழியில் விளக்கிச் சொன்னார்.

3) இச்சமயத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு இல்லை. ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வு இல்லை.

4) இந்து மதச்சடங்குகள் செய்ய பணச் செலவு அதிகமாயிற்று. புத்த சமயச் சடங்குகள் தேவையில்லை என்றது. ஆகவே ஏழைகள் இச்சமயத்தின் பால் ஈர்க்கப் பட்டனர்.

5) மக்களைக் கவர்ந்து இழுக்கும் வசீகர சக்தி புத்தரிடம் அமைந்திருந்தது.

6) தம் வாழ்க்கையையே அர்ப்பணித்து புத்த சமயப் பிரசாரம் செய்ய பல பிட்சுகள் முன் வந்து புத்த சங்கங்களில் சேர்ந்தனர்.

7) அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர் முதலிய பேரரசர்கள் இம்மதத்தைப் பரப்ப பெரும் முயற்சி எடுத்துக் கொண்டனர்.

8) கிருத்துவ சமயமும், இசுலாமிய சமயமும் இந்தியர்களுக்கு அறிமுகம் ஆகாத காலத்தில் இச்சமயம் தோன்றியது ஆகவே இச்சமய வளர்ச்சிக்கு தடையோ, எதிர்ப்போ இல்லாமல் இருந்தது.

### புத்த மதம் இந்தியாவில் வீழ்ச்சி அடையக் காரணங்கள்:

புத்தசமய சங்கங்கள் காலப்போக்கில் ஊழல் நிரம்பியதாயிற்று. குப்தப் பேரரசு இந்து சமயத்தை புத்துயிர் பெறச் செய்தது. ஆகவே இந்துக்கள் புத்த சமயத்தில் சேர முன்வரவில்லை. ஆகவே புத்த சமயத்திற்கு ஆதரவு குறைந்தது. புத்த சமயத்தின் கோட்பாடுகளை இந்து சமயம் ஏற்றுக் கொண்டது. புத்தர் திருமாலின் அவதாரமே என்ற கருத்து பரப்பப்பட்டது. ஆகவே புத்த மதம் இந்து மதத்தின் ஒரு பிரிவு என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட்டது. ஆகவே இந்துக்கள் புத்த சமயத்தை தழுவுவதை நிறுத்திக் கொண்டனர். தென்னிந்தியாவில் தோன்றிய பக்தி இயக்கம் புத்தசமயத்தை செல்வாக்கு இழக்கச் செய்தது. ராசபுத்திரர்களும், முசுலீம்களும் ஹீணர்களும் புத்த சமயத்தை அழிவுக்கு உள்ளாக்கினர். புத்த மடாலயங்கள் அவர்கள் இடித்தனர். தங்கத்திலான புத்தர் சிலைகளை கொள்ளையிட்டனர். பௌத்தசமய உட்பூசல்களும் அது மறையக் காரணமாயிருந்தன. மடங்கள் சூழ்ச்சிகளின் இருப்பிடமாக மாறின. ஊழல்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஆண் பெண் துறவிகள் இன்ப வேட்கையில் ஈடுபடத்-துவங்கினர். புத்தர் இறந்ததிலிருந்து இரண்டு நூற்றாண்டுகளில் பதினெட்டு வகைப்பட்ட பிரிவுகள் தோன்றிற்று. பௌத்தத் துறவிகளுக்கிடையே சமயப்பூசல்கள் தலைவிரித்தாடின.

பௌத்த மடங்களில் செல்வங்கள் குவிந்தன. ஆனால் ஹீணர்கள் முசுலீம்களின் படையெடுப்பினால் அவை குறைந்தன. மன்னர்கள் ஆதரவையும் புத்த சமயம் இழந்தது. நாளடைவில் பௌத்தத்திற்கும் இந்து சமயத்திற்கும் வேறுபாடு இல்லாமல் போயிற்று. இந்துக்களுடைய பழக்கவழக்கங்களையும் கொள்கைகளையும் மகாயான பௌத்தம் சேர்த்துக் கொண்டது. பலகோயில்களில் புத்தருடைய சிலைகள் வைக்கப்பட்டு இந்து சிலைகள் என்று கருதப்பட்டன. சமய மேதைகள் பற்றாக்குறையும் இதன் அழிவிற்குக் காரணமாக அமைந்தது. எனவே பௌத்த சமயம் கி.பி.1200ல் இந்தியாவிலிருந்து, முற்றிலும் மறைந்தது. ஆனால் இலங்கை, பர்மா, சியாம் போன்ற இடங்களில் மிகவும் செல்வாக்குடன் திகழ்கிறது.

### பௌத்தம், சமணம் ஆகியவற்றின் ஒற்றுமை, வேற்றுமைகள்:

இவை இரண்டும் பிராமணர்களின் சமய வழிபாட்டில் காணப்பட்ட சடங்குகளையும், வேள்விகளையும் எதிர்த்தன. அவர்களின் மேலாண்மையையும், சாதி முறையையும் கண்டித்தன. சமய வாழ்க்கையில் வெளிப்படையான செயல்களைக் கடிந்து கொண்டன. நற்செயல்களையும், அகிம்சைக் கொள்கைகளையும் வற்புறுத்தின. இரு சமயத்தையும் தோற்றுவித்தவர்கள் உலக வாழ்க்கையில் வெறுப்புற்று உண்மையைக் கண்டறிய விழைந்த சத்திரிய இளவரசர்கள் ஆவர்.

ஆயினும் இவைகளிடையே சில வேற்றுமைகளும் உள்ளன. பௌத்தர்கள் தவ வாழ்க்கை வாழ்வதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. ஆனால் சமணர்கள் இதற்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்கினர். மாறாக பௌத்தர்கள் நற்பண்பால் நம்பிக்கை கொண்டிருந்தனர். அகிம்சைக் கொள்கைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தார்கள் சமணர்கள். பௌத்தர்கள் அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கவில்லை. சமணர் ஆரிய பழக்கவழக்கங்களை மாற்றியமைக்க சாதி முறையைப் பின்பற்றினர். ஆனால் பௌத்தர் இதற்கு முக்கியத்துவம் வழங்கவில்லை.

பௌத்தம் இந்தியாவிலிருந்து முற்றிலும் மறைந்து விட்ட போதிலும் சமணம் இன்றும் அழியாமல் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# 5. ஆறாம் நூற்றாண்டில் இருந்த முடியரசுகளும், குடியரசுகளும்

**முடியரசுகள்:**

புத்த சமயத்தின் ஜாதக இலக்கியங்களும் (Jatakas), சமண சமய நூலான பகவதி சூத்திரமும் கி.மு.ஆறாம் நூற்றாண்டில் இருந்த பதினாறு முடியரசுகளைப் பற்றிக் கூறுகின்றன. பாணினியும் தனது நூலில் இப்பதினாறு முடியரசுகளைப் பற்றி குறிப்பிடுகிறார். அந்த பதினாறு முடி அரசுகள் கீழ் வருமாறு:

1) அங்க நாடு
2) மகத நாடு
3) காசி
4) கோசலம்
5) வஜ்ஜி நாடு
6) மல்ல நாடு
7) சேதி நாடு
8) வத்ச நாடு
9) குரு நாடு
10) பாஞ்சால நாடு
11) மச்ச நாடு
12) சூரசேன நாடு
13) அஸ்மகா நாடு
14) அவந்தி நாடு
15) காந்தாரம்
16) காம்போஜம்

இவை 'மகா ஜன பதங்கள்' எனவும் அழைக்கப்பட்டன. இவற்றில் சில முடியரசுகள் பற்றி கருத்துக்களைப் பார்ப்போம்.

**காசி:**

காசியானது வாரணாசி என்றும் வழங்கப்பட்டது. அங்கு வருணா, அசி என்ற இரண்டு நதிகள் ஓடியது. ஆகவே தான் அப்பகுதி வாரணாசி எனப்பெயர் பெற்றது. இந்த வாரணாசி என்ற காசி அரசு, கோசலத்தை எதிர்த்துப் போர் புரிந்து தோற்றுப்போனது. ஆகவே இது கோசல நாட்டுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

**கோசல நாடு:**

ஸ்ராவஸ்தி (Sravasti) என்ற நகரமே கோசல நாட்டின் தலைநகரம். இந்நாட்டில் அயோத்தி, சாகேதா (Saketa) போன்ற வேறு சில பெரிய நகரங்களும் இருந்தன. சரயூ நதி இந்நாட்டின் மத்தியப் பகுதியில் ஓடியது. மகத நாட்டிற்கும் கோசலத்திற்கும் கடுமையான போர்கள் நடந்தன. மகதத்தை ஆண்டு வந்த அஜாத சத்ரு, கோசல அரசர் பிரசினாசித்தைத் தோற்கடித்தார். பின்னர் மகதம் கோசலத்தை வென்று இணைத்துக் கொண்டது.

**அங்க அரசு:**

சம்பா நதியும், கங்கை நதியும் அந்நாட்டை வளம் கொழிக்கச் செய்தன. இந்த அரசின் தலை நகரமும் "சம்பா" என அழைக்கப்பட்டது. சம்பா நகரத்து வணிகர்கள் தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தனர். அங்க நாட்டிற்கும், மகதத்திற்கும் இடையே போர் மூண்டது. இறுதியில் அப்போதைய மகத மன்னரான பிம்பிசாரர் அங்க நாட்டு அரசர் பிரம்ம தத்தனைக் கொன்று விட்டு அந்நாட்டை தன்னாட்டுடன் இணைத்துக் கொண்டார்.

**வத்ச அரசு:**

இன்றைய அலகாபாத்தை சுற்றியுள்ள பகுதி அக்காலத்தில் "வத்சம்" என அழைக்கப்பட்டது. இதன் தலை நகரம் கௌசாம்பி, நேர்த்தியான பருத்தி ஆடைகள் வத்ச நாட்டில் நெய்யப்பட்டன. கி.மு.ஆறாம் நூற்றாண்டில் இந் நாட்டை உதயணன் என்ற மன்னர் ஆண்டு வந்தார். இவர் மகதத்துடனும், அவந்தியுடனும் போரில் ஈடுபட்டு பின்னர் அவ்விரு நாட்டு இளவரசிகளையும் மணந்து கொண்டார். இறுதியில் இவர் புத்த சமயத்தை தழுவினார்.

**அவந்தி நாடு:**

இன்றைய மத்தியப் பிரதேசத்தையும், மாளவம் பகுதியையும் கொண்டு திகழ்ந்தது அவந்தி நாடு உஜ்ஜெயின் இதன் தலை நகரம். மகதத்திற்கும், அவந்திக்கும் இடையே பகைமை இருந்தது. இறுதியில் மகதம் அவந்தி நாட்டை வென்று தன்னோடு இணைத்துக் கொண்டது.

**மகத நாடு:**

இன்றைய பாட்னா மாவட்டத்தையும், கயா மாவட்டத்தின் ஒரு பகுதியையும் கொண்டிருந்தது மகத நாடு. இங்கு கங்கை ஆறு பாய்ந்தது. கிரி விரஜம் (Girivraja) இதன் தலை நகரமாகும். சிசுநாக வம்சம் இதனை ஆண்டதாகப் புராணங்கள் கூறுகின்றன.

மேலே சொல்லப்பட்டுள்ள முடியரசுகளுள் கோசலம், அவந்தி, மகதம் ஆகிய மூன்று மட்டுமே முக்கியமானவை.

**குடியரசு நாடுகள்:**

சாக்கியகுடியரசு கோசல நாட்டுக்குக் கிழக்கில் இமய மலைக்கும், கங்கை ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் குடியரசு குலங்கள் வாழ்ந்து வந்தன. கபிலவஸ்துவைத் தலைநகராகக் கொண்ட சாக்கிய குடியரசில் 80,000 குடும்பங்கள் இருந்தன. அதாவது சுமார் 5 லட்சம் மக்கள் இங்கு வாழ்ந்தனர். இவர்கள் கிராமங்களிலும், சிறிய நகரங்களிலும் வசித்து வந்தனர். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தொழிலைச் செய்வோர் மட்டுமே இருந்தனர். ஒவ்வொரு கிராம மக்களும் பொது விவகாரங்களைப் பேசி முடிவெடுப்பதற்கு மரத்தடியில் கூடினர். சாக்கிய அரசின் தலைவர் இராஜன என அழைக்கப்பட்டார். கி.மு.ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சாக்கியக் குடியரசைக் கோசலம் வென்று தன்னோடு இணைத்துக் கொண்டது. சாக்கிய குடியரசும் அக்காலத்தில் மற்றைய குடியரசுகளும் உண்மையில் குடியரசுகளே இல்லை. ஏனெனில் அக்குடியரசுகள் சில பணக்காரர்களின் கட்டுப்பாட்டிலேயே இயங்கி வந்தன. அப்பணக்காரர்கள் ஏராளமான அடிமைகளை வைத்துக் கொண்டு ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். எனவே இவற்றை பணக்காரர்களால் ஆளப்பட்ட குடியரசுகள் (Oligarchic Republics) என அழைப்பதே பொருத்தமாகும்.

**விரிஜ்ஜிய குடியரசு:**

இக்குடியரசில் எட்டு குலங்கள் இருந்தன. இந்த எட்டுக் குலங்களில் இரண்டு குலங்கள் மிக முக்கியமானவை அவையாவன:

1) லிச்சாவிகள்
2) விதேகர்கள்

லிச்சாவிகளின் தலை நகரம் வைசாலி. விதேகர்களின் தலைநகரம் மிதிலை. லிச்சாவிகளைப் பற்றிப் பௌத்த, சமண நூல்கள் சில கருத்துக்களைத் தெரிவிக்கின்றன. மகாவீரருடைய தாய் மாமனான சேடகர் லிச்சாவிகளின் தலைவராய் இருந்தார். இவரது மகள்

மகத மன்னர் பிம்பிசாரரை மணந்தார். காலப்போக்கில் விரிஜ்ஜிய குடியரசுக்கு, மகத நாட்டிற்கும் பகைமை மூண்டது. இறுதியில் விரிஜ்ஜிய குடியரசு தோற்கடிக்கப்பட்டு மகதத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

சாக்கிய குடியரசு, விரிஜ்ஜிய குடியரசு ஆகியவற்றைத் தவிர வேறு பல குடியரசுகளும் இருந்தன. கங்கைச் சமவெளியில் இருந்த முடியரசுகள் இக் குடியரசுகளை தம் அரசுகளோடு இணைத்துக் கொண்டன. மகத அரசின் எழுச்சி இக்குடியரசுகளை முடிவுக்குக் கொணர்ந்தது.

**பிம்பிசாரர்:**

மகதத்தின் ஆதார பூர்வமான வரலாறு பிம்பிசாரருடைய ஆட்சியிலிருந்தே துவங்குகிறது. பிம்பிசாரருடைய தந்தையின் பெயரைப் புராணங்களும், புத்த நூல்களும் பலவற்றைக் கூறுகின்றன. பிம்பிசாரர் அரியணை ஏறிய போது மகதம் ஒரு சிறிய அரசாகவே இருந்தது. சோனை ஆறும் கங்கை ஆறும் பாய்ந்து இவ்வரசை செழிப்படையச் செய்தன. மேலும் தரை வாணிபமும் செழித்தோங்கியது. இவ்வாறு விவசாயமும், வாணிபமும் தழைத்து ஓங்கியதால் மகத நாடு செல்வ செழிப்பு மிக்க நாடாயிற்று. இதன் தலை நகரான கிரிவிரஜம் (Girivraja) ஐந்து மலைகளுக்கு நடுவே அமைந்திருந்தது. கருங்கல்லால் ஆன மதிற்சுவர் இத்தலை நகரினை பகைவர்களின் தாக்குதலிலிருந்து பாதுகாத்தது.

**எல்லை அதிகரிப்பும், மண உறவுகளும்:**

தனது அரசின் எல்லையை விரிவுபடுத்த எண்ணம் கொண்டார் பிம்பிசாரர். அங்க நாட்டை வென்று தன்னாட்டோடு சேர்த்துக் கொண்டார். அவந்தியுடனும், தட்ச சீலத்துடனும் நல்லுறவு கொண்டிருந்தார். அவருக்கு பல மனைவியர் இருந்தனர். அவர்களில் ஒருவர் கோசல நாட்டு இளவரசி ஆவார். இளவரசியை மணந்த போது இவருக்கு ஒரு பெரிய கிராமம் சீதனமாகக் கொடுக்கப்பட்டது. வைசாலி நாட்டுடன் இவர் கொண்ட மன உறவு பிற்காலத்தில் வடக்கு நோக்கி மகதம் விரிவடைவதற்கு உதவியது. மகத நாட்டு இளவரசியையும் இவர் மணந்திருந்தார். பிம்பிசாரருக்கு பல ஆண் குழந்தைகள் இருந்தனர். அவர்களுள் மூத்தவரான அஜாதசத்ரு செல்லனாவுக்குப் பிறந்தவர் எனத் தெரிகிறது.

**சமயம்:**

பிம்பிசாரர் சமண மதத்தைச் சார்ந்தவர் என சமண நூல்கள் கூறுகின்றன. இவர் புத்த சமயத்தைச் சார்ந்தவர் என புத்த சமய நூல்கள் கூறுகின்றன. இவர் அந்தணர் என இந்து சமய நூல்கள் கூறுகின்றன. ஆகவே அவர் எச்சமயத்தைச் சார்ந்தவர் என்று உறுதியாகச் சொல்ல இயலவில்லை. இவர் தம் மனைவி குழந்தைகளுடன் வென்று மகாவீரரைக் கண்டு வந்ததாகச் சமண நூல்கள் பகர்கின்றன. அவர் புத்தரை இரண்டு முறை சந்தித்ததாகப் புத்த நூல்கள் கூறுகின்றன. மேலும் அவர் ஏராளமான பொருளும், நிலமும் புத்த சங்கங்களுக்கு நன்கொடையாக அளித்ததாகவும், புத்த சமய நூல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

**இறுதிக் காலம்:**

இவர் 28 ஆண்டுகள் ஆட்சி செய்தார் என புராணங்கள் சொல்கின்றன. இவர் 52 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாக மகாவம்சம் கூறுகிறது. இவரது மூத்த மகன் அஜாத சத்ரு இவரை கொலை செய்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றி கொண்டார். இக்கொலையைச் செய்து விட்டு அஜாதசத்ரு புத்தரிடம் சென்று அழுது மன்னிப்புக் கேட்டதாக புத்த நூல்கள் சொல்கின்றன.

**அஜாத சத்ரு:**

அஜாத சத்ரு, தந்தையைக் கொலை செய்து விட்டு அரியணை ஏறினார். இவர் திறமை மிக்க மன்னராக விளங்கினார். இவரது காலத்தில் மகதத்திற்கும், கோசலத்திற்கும் போர் மூண்டது. இப்போரில் அஜாதசத்ரு துவக்கத்தில் வெற்றி பெற்றார். பின்னர் இவர், கோசல நாட்டு மன்னர் பிரசினாசித்துடன் சமாதானம் செய்து கொண்டார். பிரசினாசித் தனது மகளை அஜாத சத்ருவுக்கு மணம் முடித்துக் கொடுத்தார். பிரசினாசித்தின் மகனான விதூதபன் தனது தந்தையை விட்டு துறத்தி விட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். பிரசினாசித் தன்னுடைய மருமகனான

அஜாதசத்ருவிடம் உதவி கேட்டு மகத நாடு சென்றார். அங்கு அவர் மருமகனை சந்திக்கும் முன் இறந்து போனார். அஜாதசத்ரு தன் மாமனாராகிய பிரசினாசித்தின் உடலத்தை எடுத்து மிகுந்த மரியாதையோடு அடக்கம் செய்தார்.

**பாடலிபுத்திரம் நகரம் உருவாக்குதல்:**

வைசாலியைச் சேர்ந்த லிச்சாவிகள், குசி நகரத்தைச் சேர்ந்த மல்லர்கள், பாலா அரசைச் சேர்ந்த மல்லர்கள் போன்ற பலர் ஒன்று சேர்ந்து அஜாதசத்ருவை எதிர்த்தனர். இவர்களின் தாக்குதலை சமாளிக்க கங்கை நதியும், சோனை நதியும் கூடுகிற இடத்துக்கு அருகில் பாடலி கிராமத்தில் கோட்டை ஒன்றை அஜாதசத்ரு கட்டினார். இதுவே படிப்படியாக வளர்ந்து பெரிய நகரமாகி மகதத்தின் தலைநகரமான பாடலிபுரம் ஆயிற்று. பாடலி கோட்டையைக் கட்டிய உயர் அதிகாரி வஸ்ஸகாரன். இவரை அஜாதசத்ரு வைசாலிக்கு ஒர தந்திரம் செய்து ஒற்றனாக அனுப்பினார். தன் மன்னரோடு சண்டை போட்டுக் கொண்டு வைசாலிக்கு வந்திருப்பதாக வஸ்ஸகாரன் வைசாலி மன்னரிடம் தந்திரமாமக பொய் சொல்லச் செய்தார். அதை நம்பிய வைசாலி மன்னர் வஸ்ஸகாரனை தம் அரண்மனையிலேயே உயர் பதவி கொடுத்து தங்க வைத்தார். வஸ்ஸகாரன் பின்னர் வைசாலி அரசின் மீது அஜாதசத்ரு போரைத் தொடங்கினார். இப்போர் பதினாறு ஆண்டுகள் நடைபெற்றது. இதனை நிறுத்த புத்தர் எடுத்த முயற்சிகள் தோல்வியுற்றன. இறுதியில் வைசாலியைத் தோற்கடித்து மகதத்துடன் இணைத்துக் கொண்டார், அஜாதசத்ரு. இவரது சமயம் எது என்று உறுதியாக ஏதும் சொல்ல இயலவில்லை. இவர் புத்த சமயத்தைச் சார்ந்தவர் என்று சில வரலாற்று ஆசிரியர்களும் இவர் சமணச் சமயத்தைச் சார்ந்தவர் என வேறு சில வரலாற்று ஆசிரியர்களும் கருதுகின்றனர். இவர் புத்தரையும் மகா வீரரையும் சந்தித்தாக அந்தந்த சமய இலக்கியங்கள் கூறுகின்றன. இவரது ஆட்சியில் தான் புத்தரும், மகாவீரரும் இறந்தனர். இவரது ஆட்சி காலத்தில் தான் முதலாவது புத்த மாநாடு இராஜக்கிரகத்தில் கூடியது. இவர் 27 ஆண்டுகள் ஆண்டதாகப் புராணங்களும், 32 ஆண்டுகள் ஆட்சி செய்ததாக மகாவம்சமும் கூறுகின்றன.

**நந்தவம்சம்:**

நந்த மரபினரின் துவக்கம் பற்றி தெளிவாக ஏதும் தெரியவில்லை. நந்த மரபின் முதல் மன்னர் மகாபத்ம நந்தர், சிசுநாக மரபின் இறுதி மன்னரான மகா நந்தருக்கும் ஒரு சூத்திரப் பெண்ணுக்கும் பிறந்தவர் எனப் புராணங்கள் கூறுகின்றன.

**மகாபத்ம நந்தர்:**

இவரே நந்த மரபின் முதல் மன்னராவார். சத்திரியர்கள் அனைவரையும் ஒழித்துக் கட்டிய இரண்டாவது பரசுராமர் என்று புராணங்கள் இவரைப் புகழ்கின்றன. பியாஸ் ஆற்றுக்குக் கிழக்கில் பெரிய பேரரசு ஒன்றை ஆண்டவர்கள் நந்தர்கள் என கிரேக்க இலக்கியங்கள் கூறுகின்றன. கலிங்கத்தையும் நந்தர்கள் ஆண்டதாக காரவேலரின் ஹதிகும்பாக் கல்வெட்டு கூறுகிறது.

**தன நந்தர்:**

மகாபத்ம நந்தரின் எட்டுப் பிள்ளைகளுள் இறுதியாக ஆண்டவர் தன நந்தர் ஆவார். இவர் ஓர் வலிமை பொருந்திய படையும் பெருஞ் செல்வமும் வைத்திருந்தார். தம் செல்வத்தின் ஒரு பகுதியை இவர் கங்கை ஆற்றில் ஒளித்து வைத்திருந்தார் என மாமூலர் தனது புறநானூற்றுப் (பாடல் எண் 265) பாடலில் குறிப்பிடுகிறார். இவரது படையில் 20,000 வீரர்களும் 3000 யானைகளும் 2000 தேர்களும் இருந்தன. பொருளாசை பிடித்த இவர் மிக அதிக வரிவிதித்தார். ஆகவே மக்கள் இவரை வெறுத்தனர். மக்கள் ஆதரவு அற்ற இவரை எளிதாக தோற்கடித்து ஆட்சியைக் கைப்பிடிக்கலாம் என சந்திர குப்த மௌரியர் அலெக்சாந்தரிடம் கூறியதாக கிரேக்க நூல்களில் இருந்து தெரிய வருகிறது. சமணர்களையே நந்த மன்னர்கள் அமைச்சர்களாக வைத்திருந்தனர். இதிலிருந்து அவர்கள் சமண சமயத்தை ஆதரித்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. நந்தர்கள் மொத்தம் 100 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். சந்திரகுப்த மௌரியர் சாணக்கியருடைய உறுதுணையும் தனநந்தரை வென்று மௌரியப் பேரரசை நிறுவியதுடன் நந்தர்கள் ஆட்சி முடிவுற்றது.

# 6. அலெக்சாந்தரின் இந்தியப் படையெடுப்பு

வரலாறு கண்ட வெற்றி வீரர்களுள் அலெக்சாண்டரும் ஒருவர் என்று கூறினால் மிகையில்லை.

அலெக்சாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார் என்பதற்கு இந்திய மூவங்கள் ஏதுமில்லை. கிரேக்க நாட்டவரின் குறிப்புக்களில் அவர் இந்தியா மீது படையெடுத்த செய்தி கூறப்பட்டிருக்கிறது.

அலெக்சாந்தர் மாசிடோனிய ஆட்சியாளரான இரண்டாம் பிலிப் என்பவரின் மைந்தனாக கி.மு.356ல் பிறந்தார். கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டில் இவரது ஆசிரியராய் இருந்தார். அலெக்சாந்தர் உலகம் அனைத்தையும் வென்று அதனை தான் ஆள வேண்டும் என்ற பேரவாக் கொண்டிருந்தார். கி.மு.336வது ஆண்டு பிலிப் கொலை செய்யப்பட்டதை அடுத்த அலெக்சாண்டர் பல எதிர்ப்புக்களை வென்று அரியணையேறினார். அப்போது அவருக்கு வயது இருபது.

அலெக்சாண்டர் ஓர் விளையாட்டு வீரர். வேட்டையாடுவதில் வல்லவர்; அயராத உழைப்பாளி, அசகாய சூரர், தீரர்; கல்வி கேள்விகளில் சிறந்தவர்; குறிகேட்பதில் நம்பிக்கையுடையவர்; இரக்க பண்புடையவர். பேரவாவுடையவர்; ஒப்பற்ற நிருவாகி; ஆயினும் அவரிடம் சில குறைபாடுகளும் இருந்தன.

**படையெடுப்பிற்கான காரணங்கள்:**

1) பாரசீகர்களுக்கும், கிரேக்கர்களுக்கும் போர் நடந்தது. அப்போரில் இந்தியர்கள் பாரசீகர்களை ஆதரித்தனர். இதனால் அலெக்சாந்தர் இந்தியர்கள் மீது வெகுண்டார். தனக்கு எதிராகப் போரில் பங்கு ஆற்றிய இந்தியர்களைத் தண்டிக்கவே அவர் இந்தியாவின் மீது படையெடுத்தார்.

2) இந்தியாவின் செல்வச் செழிப்பை அறிந்த அலெக்சாந்தர் அதனைக் கவர்ந்து செல்ல எண்ணம் கொண்டு இந்தியாவின் மீது படையெடுத்தார்.

3) அலெக்சாந்தரின் படை மிகப் பெரியதாக இருந்தது. இந்தப் படை வீரர்களுக்கு ஊதியம் கொடுக்க அலெக்சாந்தர் வசம் பணம் இல்லை. ஆகவே அவர் இந்திய நாட்டினை வென்று அதன் செல்வத்தை கவர்ந்து செல்ல இந்தியா மீது படையெடுத்து வந்தார்.

4) கிரேக்க நாகரிகத்தை உலகம் முழுதும் பரப்ப வேண்டுமென எண்ணினார் அலெக்சாந்தர். அந்நாகரிகத்தை இந்தியாவில் பரப்பவே அவர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்.

5) ஆசியா முழுவதையும் வெல்ல எண்ணம் கொண்டிருந்த அலெக்சாந்தர் அதன் ஒரு பகுதியாகிய இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்.

6) தட்ச சீலத்தின் மன்னர் அம்பி இந்தியாவின் மீது படையெடுத்து வரும்படி அலெக்சாந்தருக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஆகவேதான் அலெக்சாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்தார்.

**அலெக்சாந்தர் படையெடுப்பின் போது வட இந்தியாவின் நிலை:**

அலெக்சாந்தர் இந்தியா மீது படையெடுத்து வந்த போது இந்தியா வலிமையற்ற நிலையில் காட்சியளித்தது. வட இந்தியாவில் வலிமை பொருந்திய பேரரசு ஏதும் இல்லை. சிற்றரசுகளே ஏராளமாக இருந்தனஅவை தங்களுக்குள் சிறு சிறு பூசல்களில் ஈடுபட்டிருந்தன. மேலும் அக்கால இந்தியர்களுக்கு நாட்டுப் பற்றும், தேசிய உணர்வும் இல்லை. நாட்டின் அரசியலில் ஏற்படும் மாற்றங்கள் அனைத்தும் விதிப்படியே நடப்பதாக நம்பிய அம்மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி அற்றுத் திகழ்ந்தனர்.

**படையெடுப்பு:**

அலெக்சாந்தர் பாக்டிரியாவிலிருந்து தமது படையுடன் பத்து நாட்கள் பயணம் மேற்கொண்டு இந்து குஷ்மலையைக் கடந்தது காபூல் பள்ளத்தாக்கை வந்தடைந்தார். தட்ச சீலத்தின் மன்னர் அம்பி அனுப்பிய 25 யானைகளைப் பரிசாகப் பெற்றுக் கொண்டார். பின்னர் அலெக்சாந்தர் தம் படையை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்தார். ஒரு பிரிவுக்கு பெரிடிக்காஸ் என்ற தமது படைத் தளபதியை தலைவராக நியமித்தார். மற்றொரு பிரிவிற்கு அலெக்சாந்தர் தாமே தலைமை தாங்கினார். முதன் முதலில் அலெக்சாந்தர் தம்மை எதிர்த்த மலை சாதி மக்களைத் தோற்கடித்தார். பின்னர் அவரது படை சிந்து நதியைக் கடக்க அம்பி பேருதவி செய்தார். மேலும் அம்பி அலெக்சாந்தரின் படைக்கு ஒரு பெரிய விருந்தையும் கொடுத்தார். அலெக்சாந்தரின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ள மறுத்தார் போரஸ் என்னும் மன்னர். இவர் ஜீலம் நதிக்கும் ஜீனாப் நதிக்கும் இடைப்பட்ட நிலப் பகுதியை ஆட்சி செய்து வந்தார். அலெக்சாந்தர் ஆற்றைக் கடந்து தம்மை தாக்க வருவார் என எண்ணிபிருந்தார் போரஸ். ஆனால் அவரோ ஆற்றைச் சுற்றி தரை மார்க்கமாக தனது படையை 26 கிலோ மீட்டர்கள் நடத்திச் சென்று போரஸின் படையைத் திடீரெனத் தாக்கினார். இதனைச் சற்றும் எதிர்பாராத போரஸ் நிலை குலைந்தார். இத்தாக்குதலின் போது இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் தரை வழுக்கல் நிரம்பியதாயிற்று. வழுக்கிய தரையில் வில்லை ஊன்றி நாணை ஏற்றி பகைவர்களைத் தாக்குவது மிகக் கடினமாக போயிற்று. மேலும் போரஸின் தேர்களின் சக்கரங்கள் சேற்றில் புதையுண்டு நகர முடியவில்லை. ஆகவே தான் போரஸ் தோல்வியைத் தழுவ நேரிட்டது.

போரஸின் யானைப் படையின் வலிமையைக் குறைக்க எண்ணிய கிரேக்கப் படையினர் அந்த யானைகளின் முன் நெருப்புத் துண்டுகளை வீசினர். இதனால் பாதிக்கப்பட்டு சீற்றமுற்ற யானைகள் போர்க்களத்தில் போரஸின் படை வீரர்களையே தாக்க ஆரம்பித்தது இப்போரில் போரஸ் தம் நினைவு இழக்கும் வரை போரிட்டார். இறுதியில் அவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட அவர் அலெக்சாந்தர் முன் கொணரப்பட்டார். போரஸிடம் அலெக்சாந்தர் "வெற்றி பெற்ற மன்னராகிய நான், தோற்ற மன்னராகிய தங்களை எப்படி நடத்த வேண்டும்" என நீங்கள் விரும்புகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு போரஸ், "மன்னரைப் போல நடத்துங்கள்" என துணிந்து சொன்னர். அலெக்சாந்தர் அவரது வீரத்தையும் தன்மானத்தையும் உணர்ந்து அவரை மதித்துப் போற்றினார். அவரிடமே அவரது அரசை அளித்து ஆளச் செய்தார்.

அலெக்சாந்தர் இவ்வெற்றிக்குப் பின் எஞ்சிய மற்ற இந்தியப் பகுதிகளையும் கைப்பற்ற ஆவல் மிக்கவராய் இருந்தார். ஆனால் அவரது திட்டத்துக்கு அவரது படைவீரர்கள் ஒத்துழைப்புக் கொடுக்க மறுத்துவிட்டனர். அவர்கள் தங்கள் தாய் நாடான கிரேக்க நாட்டிற்கு செல்ல வேண்டும் என்ற ஆவல் மிக்கவராய் இருந்தனர். அப்படி அவர்கள் எண்ணம் கொண்டதற்கான காரணங்களாவன:

1) கிரேக்கப் படைவீரர்கள் தம்முடைய மனைவி, மக்கள், நண்பர் ஆகியோரைப் பிரிந்து வந்து வெகு நாட்கள் ஆகிவிட்டன. ஆகவே அவர்கள் தம் தாய் நாடு செல்ல விரும்பினர்.
2) இந்தியாவின் தட்ப வெப்ப நிலை அவர்களுக்கு ஒத்துவரவில்லை. அதனால் அவர்கள் நோய்வாய்ப்பட்டனர். ஆகவே அவர்கள் உடனடியாக தாய் நாடு திரும்ப எண்ணினர்.
3) போரஸ் மன்னருடன் கடுமையான போர் செய்த கிரேக்க வீரர்கள் சோர்வும் அயர்வும் உற்றனர். மீண்டும் போர் செய்ய அவர்கள் ஆர்வம் குன்றியவர்களாகக் காணப்பட்டனர்.

**அலெக்சாந்தரின் இறப்பு:**

தம் வீரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அலெக்சாந்தர் தாய் நாடு செல்லத் தீர்மானித்தார். அவர் திரும்பிச் செல்லும் போது கி.மு.323-ல் ஜூன் மாதம் பாபிலோனியாவில் கடுமையான காய்ச்சலுக்கு உள்ளாகி இறந்து போனார். அப்போது அவருக்கு வயது 33.

**அலெக்சாந்தர் படையெடுப்பின் விளைவுகள்:**

1) அலெக்சாந்தர் வருகையால் இந்தியாவில் கிரேக்க நாகரிகம் பரவிற்று.

2) கிரேக்கப் பாணி நாணயங்கள் வெளியிடும்முறை இந்தியாவில் பரவியது. எடுத்துக்காட்டாக தட்ச சீலத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள இந்தோ-கிரேக்க நாணயங்கள் மிகவும் பண்பட்டவனவாக உள்ளன. பழைய வடிவில் அமைந்த இந்திய நாணயங்கள் வழக்கொழிந்தன.

3) இந்திய அரசியல் ஒற்றுமைக்கு அவரது வருகை வழி வகுத்தது. சிறிய நாடுகள் எல்லாம் தனித்தனியாக இருந்தால் அயல் நாட்டினர் படையெடுப்பினால் ஆபத்து விளையக் கூடுமெனக்கருதி பெரிய நாடுகளுடன் இணைந்தன.

4) அலெக்சாந்தரது படைகள் தங்கி இருந்த இடங்கள் எல்லாம் நகரங்களாக உருவாயின.

5) இந்தியர்கள் கிரேக்கர்களிடமிருந்து வானநூல் அறிவு பெற இப்படையெடுப்பு காரணமாக அமைந்தது.

6) மேற்குத்திசை நாடுகளுடன் இந்தியாவுக்கு உறவுகள் ஏற்பட இப்படையெடுப்பு வழி வகுத்தது.

7) மேலை நாட்டினர் இந்தியாவைப் பற்றி மேலும் அதிகமாமக அறிவதற்கு இப்படையெடுப்பு உதவியது.

8) அலெக்சாந்தரின் படைத் தளபதிகளும் அலுவலர்களும் இந்தியாவைப் பற்றி பல குறிப்புகளைச் சேகரித்து நூற்கள் எழுதி வெளியிட்டனர். அந்நூற்கள் இந்தியாவின் அன்றைய அரசியல், சமுதாய, பொருளாதார நிலைகளை எடுத்துக் கூறுகின்றன. அவை இந்திய வரலாற்றை எழுத பெரிதும் துணைபுரிகின்றன.

9) கிரேக்க மொழி இந்தியாவில் பரவியது.

சுமார் இரண்டு ஆண்டுகள் தான் அலெக்சாந்தர் இந்தியாவில் தங்கி இருந்தார். மேலும் அவர் இளம் வயதிலேயே இறந்து விட்டார். அவர் இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் பற்பல விளைவுகள் அவராலே இந்தியாவில் ஏற்பட்டிருக்கும்.

இவரது இந்திய படையெடுப்பு முன்கூட்டியே திட்டமிட்ட ஒன்று. படையெடுத்து வரும்போது வரலாற்றறிஞர்கள், பொறியியல் வல்லுநர்கள், அறிவியல் மேதைகள் ஆகியவர்களுடன் வந்துள்ளார். தான் வென்ற பிறபகுதிகள் குறிப்பாக எகிப்து, பாரசீகம் ஆகிய நாடுகள் கிரேக்கமயமான போது இந்தியாவும் சிறிதளவாவது பாதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலும் இந்தியர்கள் நறுமணப் பொருட்களையும் பிற ஆடம்பரப் பொருட்களையும் தயாரிக்க கிரேக்கர்களிடமிருந்து கற்றுக்கொண்டனர். இந்திய வாணிபம் பெருக அலெக்சாந்தர் மறைமுகக் காரணமாக இருந்தார் என்பதை இவண் குறிப்பிடாமல் இருக்க இயலாது. பிற்காலத்தில் இந்தியக்கலையும் கிரேக்கக்கலையும் இணைந்து புதியதொரு கலையான காந்தாரக்கலை தோன்றிற்று.

சிந்துநதி இரண்டாகப் பிரிகின்ற பட்டாலா (Patala) என்ற இடத்தில் அலெக்சாந்தர் துறைமுகம் ஒன்றை அமைத்தார். தனது பெயரின் நினைவாக அலெக்சாண்டிரியா என்ற நகரங்களைக் கிரேக்க நகரங்களின் அமைப்பில் இந்தியா, பலுசிஸ்தானம், ஆப்கானிஸ்தானம் போன்ற இடங்களில் நிறுவினார்.

அலெக்சாந்தரின் படையெடுப்பினால் மேற்கூறிய விளைவுகள் ஏற்பட்ட போதிலும், அவரது படையெடுப்பை மிகைப்படுத்திக் கூறத் தேவையில்லை. அலெக்சாந்தர் இந்தியாவில் 19 மாதங்களே தங்கியுள்ளார். இக்காலத்திலும் கூட அவர் அயரா போர்களில் ஈடுபட்டுள்ளார். எனவே நகரங்களை அமைத்து கிரேக்க பண்பாட்டை நிறுவி வேரூன்றச் செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. எடுத்துக்கொண்ட முயற்சியும் முற்றிலுமாகப் பயன் தரவில்லை. எனவே இவரது வெற்றியை பயனில்லா வெற்றி என்று ஓர் வரலாற்றறிஞர் கருதுகிறார்.

அலெக்சாந்தரின் வெற்றிக்கும் இந்தியர்களின் தோல்விக்கும் பல காரணங்கள் உள்ளன.

1) வலிமையும் ஆற்றலுமுள்ளவர் அலெக்சாண்டர். இராணுவத்தை இயக்குவதில் அவருக்கு நிகர் அவரே; போரில் பல யுக்திகளைக் கையாண்டார்.

2) இவரது இராணுவம் திறமையிலும் பயிற்சியிலும் ஒழுங்கிலும் மிகவும் சிறந்திருந்தன.

3) இந்திய மன்னர்களிடையே ஒற்றுமையில்லை. அம்பிக்கும் பேரரசிற்கும் இடையில் ஏற்பட்டிருந்த பகைமையால் அலெக்சாண்டருக்கு உதவியளிக்க முன்வந்தார் அம்பி; அவர்கள் குறுநில மன்னர்கள்; வலிமை குன்றியவர்கள்.

# 7. மௌரிய வம்சம்

**மௌரியர் வரலாற்று மூலங்கள்:**

பண்டைய இந்திய வரலாற்றில் நமக்கு ஏராளமான மூலங்கள் கிடைக்கின்ற காலம் மௌரியர்களின் ஆட்சிக் காலமேயாகும். மௌரியர் வரலாற்று மூலங்களைப் பற்றி இவண் ஆய்வோம்.

**புராணங்கள்:**

சமய தொடர்பான கதைகளைக் கூறுவது புராணமாகும். சந்திர குப்த மௌரியர் என்ற முதல் மௌரிய மன்னர், சாணக்கியரின் உதவியோடு அரசைக் கைப்பற்றிய செய்தி இப்புராணங்களில் சொல்லப்பட்டுள்ளது. மௌரியர்காலத்துக்கு முன்பு ஆண்ட நந்த மன்னர்கள் பற்றிய செய்திகளும் இப்புராணங்களில் நிறைய உள்ளன.

**திபெத்திய வரலாறு:**

கி.பி.ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்த தாரநாதர் என்னும் திபெத்திய வரலாற்று ஆசிரியர் தமது "திபெத்திய வரலாறு" என்னும் நூலில் மௌரியர்களைப் பற்றிய பல செய்திகளைக் கூறுகிறார்.

**தீபவம்சம் - மகாவம்சம்:**

இலங்கையைச் சேர்ந்த தீபவம்சம், மகாவம்சம் போன்ற பௌத்த இலக்கியங்கள் அசோகர் எவ்வாறு பௌத்த சமயத்தை இலங்கையில் பரப்பினார் என்பதை விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

**ஜாதகக் கதைகள்:**

புத்தரது பிறப்பை வருணிக்கும் ஜாதகக் கதைகளில் மௌரியர் காலத்தில் வட இந்தியாவில் நிலவிய பொருளாதார நிலை சமுதாய நிலை சிறப்பாக வருணிக்கப்பட்டுள்ளது.

**பரிசிஷ்ட்ட பர்வன்:**

பரிசிஷ்ட்ட பர்வன் என்ற சமண நூலில் சந்திர குப்த மௌரியர் தமது இறுதிக் காலத்தில் முடி துறந்தது பற்றியும் சமண சமயத்தைச் சார்ந்தது பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

**முத்திராராட்சகம்:**

விசாகதத்தர் என்ற ஆசிரியரால் முத்திராராட்சம் என்னும் நாடகம் குப்தர் காலத்தில் எழுதப்பட்டது. இந்நாடகத்தில் கௌடில்யரின் உதவியோடு சந்திர குப்த மௌரியர் எவ்வாறு நந்தர்களை வென்றார் என்பது விவரிக்கப்பட்டுள்ளத. சந்திர குப்த மௌரியர் நந்த மரபினைச் சார்ந்தவர் என்றும் ஆனால் கோத்திரம் தான் வேறென்றும் இந்நாடகம் நமக்குக் கூறுகிறது.

**இராஜதரங்கிணி:**

கல்ஹணர் என்ற காஷ்மீர ஆசிரியரால் கி.பி.1150ல் எழுதப் பெற்ற ராஜதரங்கிணியிலிருந்து அசோகர் ஆரம்பத்தில் சைவ சமயத்தை பின்பற்றி வந்தார் என்பது தெரிகிறது.

**அர்த்த சாஸ்திரம்:**

அர்த்த சாஸ்திரத்தை கௌடில்யர் எழுதினார். மௌரியர்களைப் பற்றியும், அவர்களது ஆட்சி முறையைப் பற்றியும் அறிந்து கொள்ள இந்நூல் உதவி புரிகிறது. இந்நூலுக்கு தண்ட நீதி என்ற பெயரும் வழங்குகிறது.

இதில் 180 அத்தியாயங்கள் உள்ளன. இவற்றை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதியில் மன்னர் அவரது அமைச்சரவை, நிருவாகம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது பிரிவில் சிவில், கிரிமினல் சட்டங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. மூன்றாவது பிரிவில் அரசியல் சூழ்ச்சி, போர் முறை ஆகியவற்றைப்பற்றிப் பேசப்படுகின்றன.

அர்த்த சாஸ்திரத்தில் பகைவரின் நாட்டை வென்று பிடிப்பது எவ்வாறு என்பது பற்றியும், வென்ற நாட்டை இழந்துபோகாமல் காப்பது எவ்வாறு என்பது பற்றியும் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

**இண்டிகா:**

அலெக்சாந்தர் இறப்புக்குப் பின் பாரசீகம், பாபிலோன் ஆகிய நாடுகளை ஆண்டவர் செலூகஸ் நிகேடர். இவர் சந்திர குப்த மௌரியரின் அரண்மனைக்கு அனுப்பி தூதுவரே மெகஸ்தனிஸ் (Megasthenes). இந்த மெகஸ்தனிஸ் எழுதியதே 'இண்டிகா' என்ற வரலாற்று நூலாகும். இந்நூல் தற்போது முழுமையும் கிடைக்கவில்லை. இதன் ஒரு சில பகுதிகள் மட்டுமே கிடைத்துள்ளன. அவையும் வேறு சில ஆசிரியர்கள் தங்களது நூல்களில் மேற்கோள்களாக கொடுத்தவையே ஆகும். கி.மு.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்டிராபோ, (Strabo) டயடோரஸ் (Diodorus) என்பவர்ளும், கி.பி.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிளினி (Plini) என்ற ஆசிரியரும், கி.பி.இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த அர்ரியன் (Arrian) என்ற ஆசிரியரும் மெகஸ்தனிஸின் கூற்றுகளை மேற்கோள்களாகக் காட்டியுள்ளனர். அம்மேற்-கோள்களிலிருந்து மௌரியர்களின் நகர ஆட்சி முறையைப் பற்றியும், மௌரியர் கால சமுதாய, பொருளாதார நிலைமைகள் பற்றியும் அறிந்து கொள்கிறோம்.

மெகஸ்தனிஸ் அன்னியராதலால் செவி வழிக் கேட்ட சில நம்பத் தகாத செய்திகளையும் அவர் ஆங்காங்கே கூறுகிறார். அவற்றை நாம் உண்மை என்று எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. கையும், வாயும் இல்லாத மனிதர், கொம்புள்ள குதிரைகள், இறகு முளைத்த பாம்புகள், ஏழு வயதிலேயே தாயான பெண்கள் பற்றித் தம் நூலில் குறிப்பிடுகிறார். இச் செய்திகள் நம்பத் தகுந்தவையாக இல்லை.

மெகஸ்தனிஸ் இந்தியாவில் தங்கி இருந்த காலம் மிகக் குறைவு. அவர் மௌரிய அரசின் தலை நகரமாகிய பாடலிபுத்திரத்திலேயே தங்கி இருந்தார். வேறு இடங்களை சுற்றிப் பார்க்கவில்லை. அவர் செவி வழிக்கேட்ட கட்டுக் கதைகளை அப்படியே எழுதி வைத்துள்ளார். அவரது குறிப்புகள் முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆகவே இப்புத்தகத்தை வரலாற்று ஆதார நூலாக எடுத்துக் கொள்வது தவறு என்பர் சிலர். ஏனைய மூலங்களில் இருந்து கிடைக்கும் செய்திகளை உறுதிப்படுத்த இந்நூல் துணை புரிவதால் இதனை நாம் வரலாற்று ஆதார நூலாகக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை.

**மிலிந்த பன்ஹா:**

மெணன்டர் (Menander) என்ற கிரேக்க மன்னர் எழுதியுள்ள 'மிலிந்தபன்ஹா' (Milinda Panha) என்ற நூலில் மௌரியர் - நந்தர் போராட்டம் பற்றிச் சில செய்திகள் உள்ளன. நந்தர் படை பக்தசாலா (Baddasala) என்பவர் தலைமையில் இயங்கியது என்பதை நாம் இந்நூலில் இருந்து அறிகிறோம்.

**ஜஸ்டின், புளூடார்க் குறிப்புகள்:**

ஜஸ்டின் (Justin), புளூடார்க் (Plutarch) போன்ற கிரேக்க ஆசிரியர்கள் சந்திரகுப்தர், அலெக்சாந்தரைச் சந்தித்தது பற்றிக் கூறுகின்றனர். அலெக்சாந்தர் சந்திரகுப்த மௌரியரை சிறையிலிட ஆணையிட்டார் என்றும், உடனே சந்திரகுப்த மௌரியர் தப்பி ஓடினார் என்றும் இவர்கள் தங்களது நூலில் எழுதி வைத்துள்ளனர்.

**பாஹியான் பயணக்குறிப்பு:**

கி.பி.4ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்தார் சீனப் பயணி பாஹியான் (Fahien). இவர் தனது பயண நூலில் பாடலிபுத்திரத்தில் இருந்த அசோகரின் அரண்மனையை பிரம்மாண்டமானது

எனப் பாராட்டுகிறார். அவரது வருணனையிலிருந்து அசோகர் காலத்துக் கட்டிடக் கலையின் சிறப்பை அறிந்து கொள்கிறோம். அசோகரின் இளமைப் பருவம் பற்றிய கதைகளையும் போதி மரத்தின் கிளை ஒன்று இலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டதையும் அவர் தமது நூலில் குறிப்பிடுகிறார்.

**யுவான் சுவாங் பயணக்குறிப்பு:**

ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த யுவான் சுவாங் என்ற *சீனப்* பயணியும் மௌரியர்களைப் பற்றிப் பல தகவல்களைத் தருகிறார். மகேந்திரர் என்பவர் அசோகரின் சகோதரர் என்ற புதிய கருத்தை அவர் தெரிவிக்கிறார். அசோகர் புத்த மதத்தை தழுவின விதம் பற்றியும் அவர் குறிப்பிடுகிறார். 84,000 கற்றூண்களை அசோகர் நட்டதாகவும் இவர் குறிப்பிடுகிறார்.

***அகழ்வாராய்ச்சி சின்னங்கள்:***

தட்ச *சீலம்,* பாட்னா, கங்கை சமவெளி ஆகிய பகுதிகளில் அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றன இவ்வாராய்ச்சி மூலமாக மௌரியர்கள் காலத்தில் பயன்படுத்தப்பட்ட மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. இம்மட்பாண்டங்கள் கிடைக்கின்ற இடங்களைக் கொண்டு மௌரியப் பேரரசு எங்கெங்கு பரவி இருந்தது என்பதை நாம் ஊகிக்க முடிகிறது.

**நாணயங்கள்:**

கங்கை சமவெளி, தக்காண பீடபூமிகள் வட பகுதி போன்ற இடங்களில் மௌரியர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. அந்நாணயங்கள் செம்பாலும், வெள்ளியாலும் ஆனவை. இவற்றிலிருந்து பேரரசின் பொருளாதார நிலைமையையும், அக்காலத் தட்டார்களின் நாணயம் செய்யும் திறமையையும் அறிந்து கொள்கிறோம்.

**கல்வெட்டுகள்:**

கற்றூண்களிலும், பாறைகளிலும் அசோகர் காலத்தே பொறிக்கப் பெற்ற ஏராளமான கல்வெட்டுக்கள் இன்று கிடைத்துள்ளன. அவை இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன அவற்றில் முக்கியமானவை பதினான்கு பெரும் பாறைக் கல்வெட்டுக்களாகும் (Major Rock Edicts); சிறிய பாறைக் கல்வெட்டுக்களும் (Minor Rock Edicts) சில கிடைத்துள்ளன. டெல்லி, மீரட் போன்ற இடங்களில் இருந்து தூண் கல்வெட்டுக்கள் (Pillar Edicts) கிடைத்துள்ளன. *அசோகரைப் பற்றி* நாம் தெளிவாக அறிந்து கொள்ள மேற்கூறிய கல்வெட்டுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. அசோகரது தர்மம், சமயச் சகிப்புத்தன்மை, அவர் புத்த மதத்தை பரப்ப எடுத்துக்கொண்ட முயற்சிகள், அவர் வெளிநாட்டினரோடு கொண்டிருந்த உறவு ஆகியவற்றை அறிய இக்கல்வெட்டுக்கள் துணை புரிகின்றன.

**வரலாற்று நூற்கள்:**

அசோகரைப் பற்றி வின்ஸெண்ட்ஸ்மித், த.ஓ. முகர்ஜி, ரொமிலா தாபர் (Romia Thapar) என்ற புத்தகத்தை தமிழில் எழுதியுள்ளார். டாக்டர் ஓ.த. கோவிந்தசாமி அவர்கள் 'அசோகரும் அவரது காலமும்' என்ற தலைப்பில் தமிழில் ஒரு நூல் எழுதியுள்ளார். இந்நூற்கள் மௌரிய வரலாற்றை அறிய நமக்கு பெரிதும் உதவி புரிகின்றன.

**சந்திரகுப்த மௌரியர்**
**(கி.மு. 324 - கி.மு.300)**

**இளமைப்பருவம்:**

சந்திரகுப்த மௌரிர் எங்கு, எவருக்குப் பிறந்தார் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு இவர் ஒரு கிராமத்தில் இடையர் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தார். அப்போது கௌடில்யர் என்ற தட்சசீலத்தைச் சேர்ந்த அந்தணர் சந்திர குப்த மௌரியரைப் பார்த்தார். சந்திர குப்த மௌரியரிடம் மன்னருக்கு உரிய இலக்கணங்கள் இருப்பதைக் கண்டு இவரை கௌடில்யர் இடையர்களிடமிருந்து விலைக்கு

வாங்கினார். இவருக்கு போர்ப்பயிற்சி கொடுத்து இவரைத் தமது பகைவராகிய நந்த மன்னர் தனநந்தருக்கு எதிராகப் போர் செய்ய வைத்தார்.

### நந்தர்களை வென்று மன்னராதல்:

நந்த அரசை கவிழ்க்க சந்திர குப்த மௌரியர் அலெக்சாந்தரின் உதவியை நாடினார். ஆனால் அலெக்சாந்தர் அவருக்கு உதவு செய்ய மறுத்து விட்டார். அதன் பின் கௌடில்யரின் உதவியோடு ஒரு பெரும் படையைத் திரட்டினார். அப்படையில் திருடர்கள், கொள்ளைக்காரர்கள், சுயேச்சை குடியரசில் வாழ்ந்த வீரர் ஆகியோர் சேர்ந்தனர்.

இந்திய நாட்டை அன்னியர்களாகிய கிரேக்கர்கள் பிடியிலிருந்தும், கொடுங்கோல் ஆட்சி செய்து கொண்டிருந்த தன நந்தரின் பிடியிலிருந்தும் மீட்க வேண்டியது மிக மிகத் தேவை என சந்திர குப்த மௌரியர் கருதினார். ஆகவே இவர் முதன் முதலில் நந்தப் பேரரசின் தலை நகரான பாடலிபுத்திரத்தைத் தாக்கினார். ஆனால் அதனை அவரால் கைப்பற்ற இயலவில்லை. பின்னர் இவர் பேரரசின் எல்லையோரத்தில் இருந்து ஒவ்வொரு பகுதியாகக் கைப்பற்றிக் கொண்டே முன்னேறிச் சென்ற பாடலிபுத்திரத்தைத் தாக்கினார். இந்த இரண்டாவது முறையும் இவரால் பாடலிபுத்திரத்தைக் கைப்பற்ற இயலவில்லை. ஏனெனில் ஏற்கனவே கைப்பற்றிய பகுதிகளில் தமது படையை இவர் வைக்கத் தவறிவிட்டார். எனவே அப்பகுதிகள் சுயேச்சை அடைந்து அவை தம் படையைத் திரட்டி பாடலிபுத்திரத்திற்கு அனுப்பி அங்கு பாடலிபுத்திரத்தை கைப்பற்ற முயற்சி செய்து கொண்டிருந்த சந்திர குப்த மௌரியரின் படையைத் தோற்கடித்தன. போர் செய்த முறையில் தாம் செய்த பிழையை உணர்ந்து கொண்ட சந்திர குப்த மௌரியர் பின்னர் மீண்டும் நந்த அரசின் மீது படையெடுத்து வந்தார். தற்போது இவர் வென்ற பகுதிகளில் தமது படை வீரர்கள் சிலரை வைத்து அந்தப் பகுதிகள் தனக்கு எதிராக செயல்படாதவாறு பார்த்துக் கொண்டார். பின்னர் இவர் பேரரசின் தலை நகரைத் தாக்கினார். நந்த அரசின் மக்கள் அப்போது இருந்த நந்த அரசர் தன நந்தர் அதிக வரி விதித்துக் கொடுமைப் படுத்தியமையால் அவருக்கு எதிராகச் செயல்பட்டனர். அவர்கள் மறைமுகமாக சந்திர குப்த மௌரியர் பாடலிபுத்திரத்தைப் பிடிக்க உதவி செய்தனர். 'வெல் போர் நந்தா' என சங்க தமிழ் இலக்கியங்களில் புகழ்ந்து கூறப்பட்ட நந்தர்களையே வென்று விட்டார் சந்திர குப்த மௌரியர். என்னே அவரது போர்த்திறமை! இறுதி நந்த அரசர் தன நந்தர் சந்திர குப்த மௌரியரிடம் தோற்றுப் போனார். தோற்ற அவர் தமது இரு மனைவியரோடும் ஒரு மகளோடும் பாடலிபுத்திரத்தில் இருந்து தப்பி ஓடி விட்டார். அதன் பின் கி.மு. 324ல் சந்திர குப்தர் தம்மை மன்னர் என முடி சூட்டிக் கொண்டார்.

### அன்னியரை விரட்டி பேரரசர் ஆதல்:

அலெக்சாந்தர் கி.மு.323ல் இறந்தார். அவர் இறப்புக்குப் பின் அவரது இந்தியப் பேரரசு அவரது படைத்தலைவர்களுக்குள் பங்கிட்டு கொள்ளப்பட்டது. அப்படைத் தலைவர்களை இந்தியாவிலிருந்து விரட்டி விட்டு கி.மு. 317 ஆம் ஆண்டளவில் வட இந்தியா அனைத்திற்கும் சந்திர குப்த மௌரியர் பேரரசரானார்.

### தென்னாட்டுப் படையெடுப்பு:

தென்னாட்டுப் பகுதிகளை சந்திர குப்த மௌரியர் வென்றார் என்று ஒரு சிலரும் அவற்றை *இவரது மகன் பிந்து சாரரே வென்றார் என்று வேறு சிலரும் கூறுவர்.* அசோகர் கலிங்கத்தைத் தவிர வேறு எந்த நாட்டையும் வெல்லவில்லை. அவர் செய்த முதல் போரும் இறுதிப் போரும் கலிங்கப்போரே ஆகும். எனினும் இவரது பேரரசில் தென்னாட்டின் பெரும் பகுதி அடங்கி இருந்தது. அதை வென்றவர் யார்? சந்திர குப்த மௌரியரே என்பதற்கு மூலங்கள் இருக்கின்றன. மைசூரில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சில சாசனங்களில் சந்திர குப்த மௌரியரின் பெயர் காணப்படுகிறது. தமது இறுதிக் காலத்தில் மைசூரில் உள்ள சரவணபெல்கோலா என்ற இடத்திற்கு வந்து சந்திரகுப்த மௌரியர் தவம் செய்ததாக நாம் அறிகிறோம். தமக்கு சொந்தமில்லாத நாட்டில் அவர் நீண்ட காலம் தங்கி இருக்க முடியாது ஆகவே மைசூர் பகுதி இவரின் ஆட்சியில் இருந்தது என்று கொள்வதே சரியாகும்.

கிரேக்க ஆசிரியர்கள் பிந்துசாரரை ஒரு சிற்றின்பப் பிரியராக சித்தரித்துள்ளார்கள். சிரியா அரசர் ஆண்டியோகஸிடமிருந்து மது, உலர்ந்த அத்திப் பழங்கள், தத்துவஞானி ஆகிய மூன்றையும் கேட்டாராம் பிந்துசாரர். சிரியா மன்னர் தத்துவஞானியை அனுப்பாமல் மற்ற இரண்டையும் அனுப்பி வைத்தாராம். இதிலிருந்து நாம் பிந்துசாரர் சுகபோகி என்பதை அறிந்து கொள்கிறோம். சுகபோகியாகிய பிந்துசாரர் தென்னாட்டை வென்றார் என்று சொல்வது பொருத்தமாக இல்லை. இவற்றை வைத்துப் பார்க்கும் போது தென்னாட்டை சந்திரகுப்த மௌரியரே வென்று இருக்க வேண்டும் எனலாம்.

**செலுக்கசோடு போர்:**

அலெக்சாந்தரின் தளபதிகளில் ஒருவரான செலுக்கஸ் பாபிலோனியா, பாக்டீரியா போன்ற நாடுகளையெல்லாம் வென்ற பின் இந்தியாவின் மீது படையெடுத்தார். சந்திரகுப்த மௌரியர் இந்த படையெடுப்பை எதிர்பார்த்தார். தமது முழு வலிமையோடு இவரை எதிர்த்து வெற்றி வாகை சூடினார். அதன் பின் அவ்விருவருக்குமிடையே ஒரு உடன் படிக்கை ஏற்பட்டது.

**உடன்படிக்கையின் முக்கிய நன்மைகள்:**

1) கிரீட், காந்தகார், பலுசிஸ்தான், காபூல் ஆகிய நான்கு வடமேற்குப் புற மாநிலங்களை செலுக்கஸ் சந்திரகுப்த மௌரியருக்குக் கொடுத்தார்
2) செலுக்கஸின் மகளை சந்திரகுப்த மௌரியர் மணந்து கொண்டார்.
3) சந்திரகுப்த மௌரியர் 500 யானைகளை செலுக்கஸிற்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்.

**சந்திர குப்த மௌரியரின் பேரரசின் பரப்பு:**

வடமேற்கு ஆப்கானிஸ்தானத்திலிருந்து கிழக்கே வங்கம் வரையிலும், வடக்கே இமய மலையிலிருந்து தெற்கே நர்மதை நதி வரையிலும் அவரது பேரரசு பரவியிருந்தது. பஞ்சாப் உத்திரப்பிரதேசம், பீகார், கத்தியவார் தீபகற்பம் முதலிய பகுதிகள் இவரது பேரரசில் அடங்கியிருந்தன. தென்னிந்தியாவில் இவரது பேரரசு மைசூர் வரை பரவி இருந்தது.

**இறுதிக்காலம்:**

சந்திர குப்த மௌரியரின் இறுதிக் காலம் பற்றிய செய்திகள் சமண சமய இலக்கியங்களில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இவர் தம் வயோதிகக் காலத்தில் முடிதுறந்து பத்ரபாகு என்ற தமது குருவுடன் சரவணபெல்கோலா (மைசூர் மாநிலம்) என்ற இடத்திற்கு வந்து அங்கு தவம் மேற்கொண்டார். இத்தவம் பீகாரில் ஏற்பட்ட ஒரு கடும் பஞ்சத்தை போக்க மேற்கொள்ளப்பட்டது. சரவணபெல்கோலாவிலேயே இவர் பட்டினி கிடந்து உயிர் துறந்தார்.

பண்டைய இந்தியாவின் தலைசிறந்த மன்னர் சந்திர குப்த மௌரியர் ஆவார். இவர் நாட்டுப்பற்றும், ஆட்சித் திறமையும், போர்த்திறமையும் பெற்றுத் திகழ்ந்தார். 'வரலாறு கண்ட மன்னர்களுள் ஒப்பற்ற பெருமையும் வெற்றியும் பெற்றவர் சந்திர குப்த மௌரியரே' என்று வின்சென்ட் ஸ்மித் இவரைப் புகழ்ந்து பேசுவது பொருத்தமுடையதாகும்.

***பிந்துசாரர்***
***(கி.மு.299 கி.மு.247)***

சந்திரகுப்தர் தமது பேரரசை 24 ஆண்டுகள் ஆண்ட பின் கி.மு.300ல் இறந்தார். இவருக்குப் பின் இவரது புதல்வர் பிந்துசாரர் ஆட்சிக்கு வந்தார். இவர் தமது இளமைக் காலத்தில் பாடலிபுத்திர பூங்காக்களில் இருந்த குளங்களில் மீன்பிடித்து இன்பமாகப் பொழுது போக்கினார் என கிரேக்க இலக்கியங்கள் கூறுகின்றன. இவர் தமது ஆட்சிக் காலத்தில் தட்சசீலத்தில் நடைபெற்ற ஒரு கலகத்தை ஒடுக்கினார். இவரது வெற்றிகள் பற்றி தெளிவாக எதுவும் தெரியவில்லை.

இவரது இறுதிக் காலம் துயரம் மிக்கதாய் இருந்தது. இவரது மூத்த மகன் சுசிமன் தட்சசீலத்தில் அரச சார்பாளராக இருந்தார். இவரது இரண்டாவது மகன் அசோகர் அவந்தி நாட்டின் அரச சார்பாளராக இருந்தார். பிந்துசாரரின் இரண்டு குமாரர்களும் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டனர். கி.மு.274ல் பிந்துசாரர் இறந்தார். அவர் இறப்புக்குப்பின்

இச்சகோதரர்கள் இவருக்குமிடையே உள்நாட்டுப்போர் மூண்டது. இப்போரில் அசோகர் வெற்றி பெற்று கி.மு.270இல் முடி சூட்டிக் கொண்டார்.

**அசோகர் (கி.மு. 270 - 232)**

அசோகர் அமைதிக்காக அல்லும் பகலும் பாடுபட்டார். போரின் தீய விளைவுகளை உணர்ந்து கொண்ட இவர் போர் செய்வதையே விட்டுவிட்டார். எம்மதமும் சம்மதம் என்ற சமயப்பொறைக் கொள்கையை அவர் தம் வாழ் நாள் முழுவதும் கடைப்பிடித்தார். ஆகவேதான் நாம் அவரை மாமன்னர் (great) என்று பெருமையாக அழைக்கிறோம். இவ்வுலக மன்னர்களில் தலைசிறந்தவர் அசோகர் என்றால் அது மிகையாகாது. இவரது தர்ம சக்கரம் நமது நாட்டின் கொடியை அலங்கரிக்கிறது. இவரது சாரநாத் தூணின் முகப்பு (Capital) நம் இந்திய அரசின் அலச்சினையாக (Seal) திகழ்கிறது.

**அசோகரின் இளமைப்பருவம்:**

பிந்துசாரரின் இரண்டாவது மகன் அசோகராவார். அசோகரது தாய் சுமத்திராங்கி என பௌத்த இலக்கியங்கள் கூறுகின்றன. அசோகர் எந்த ஆண்டில், எந்த நாளில் பிறந்தார் என்பது சரிவரத் தெரியவில்லை. 18ஆம் வயது நிரம்பிய அசோகரை இவரது தந்தை பிந்துசாரர் அவந்தி நாட்டின் அரசு சார்பாளராக நியமித்தார் அவந்தியின் தலைநகரான உஜ்ஜியினியில் அசோகர் வாழ்ந்து வந்த போது தேவி என்ற பெண் மீது காதல் கொண்டு அவளையே திருமணமும் செய்து கொண்டார். இந்த தேவி என்பவர் வணிகர் ஒருவரின் மகளாவார். அசோகருக்கும் தேவிக்கும் மகேந்திரன், சங்கமித்திரை என்ற இரண்டு குழந்தைகள் பிறந்தன.

அசோகர் உஜ்ஜியினியில் ஆட்சி புரிந்து வந்த பொழுது தட்சசீலத்தில் ஒரு கலகம் ஏற்பட்டது. அதனை அங்கு அரசு சார்பாளராக இருந்த அசோகரின் அண்ணன் சுசிமனால் அடக்க இயலவில்லை. எனவே பிந்துசாரர் அசோகரை அனுப்பி அக்கலகத்தை ஒடுக்கினார் எனத் தெரியவருகிறது.

**அசோகர் ஆட்சிக்கு வருதல்:**

பிந்துசாரர் மரணப் படுக்கையில் கிடந்த போதே அசோகர், ராதாகுப்தர் என்ற அமைச்சரின் உதவியோடு மௌரிய ஆட்சியைப்பிடித்தர். இங்ஙனம் ஆட்சியைக் கைப்பற்றியதை பிந்து சாரர் விரும்பவில்லை. அதன் விளைவாக அசோகருக்கும் அவரது சகோதரர்களுக்கு மிடையே பெரும் போர் ஏற்பட்டது. இப்போரில் அசோகர் திஸ்யா என்ற தனது தம்பியைத் தவிர ஏனைய 99 சகோரதரர்களையும் கொன்று விட்டு தனது அரச பதவியைக் கைப்பற்றிக் கொண்டார். இச்செய்தியை 'வம்சத்த பகாசினி' என்ற சிங்களப் பௌத்த நூல் கூறுகிறது.

**அசோகர் பௌத்தராக மாறுவதற்கு முன்பு:**

அசோகர் பௌத்தராக மாறுவதற்கு முன்பு வாழ்க்கையின் இன்பங்களை நன்கு நுகர்ந்தார். சுவையான உணவுகளை உண்பதில் நாட்டம் உடையவராக இருந்தார். மகளிர் இன்பத்தில் ஈடுபாடு மிக்கவராகத் திகழ்ந்தார். குதிரை சவாரி செய்வதிலும், வேட்டையாடுவதிலும் வேறு சில கேளிக்கைகளிலும் ஈடுபட்டுப் பொழுதைப் போக்கினார். மயில் இறைச்சியையும், மான் இறைச்சியையும் விரும்பி உண்டார். இச்செய்திகள் எல்லாம் நமக்கு பௌத்த நூல்களில் இருந்து கிடைக்கின்றன. பௌத்த சமயத்தை தழுவுவதற்கு முன்னர் அசோகர் மிகக்கொடியவராக இருந்தார் என்பதைக் காட்டவே பௌத்த நூல்கள் இவரைப் பற்றி மேற்கண்டவாறு இழிவுபடுத்திக் கூறுகின்றன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

**கலிங்கப் போர்:**

கலிங்க நாடு கோதாவரி ஆற்றுக்கும் மகா ஆற்றுக்கும் இடையில் அமைந்திருந்தது. அது சுதந்திர நாடகமாகத் திகழ்ந்தது. அதனைத் தனது பேரரசோடு இணைத்துக் கொள்ள நினைத்த அசோகர் அதனைத் தாக்கினார். ஆகவே மௌரியர்களுக்கும் கலிங்கர்களுக்கும் இடையே போர் மூண்டது. அசோகர் வெளியிட்ட 13-ஆம் பாறைக் கல்வெட்டு இப்போரைப்பற்றி விளக்கிச் சொல்கிறது. இப்போரில் இருதரப்பினரிலும் இறந்த வீரர்கள் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சம் ஆகும். சுமார் ஒன்றரை இலட்சம் கலிங்க வீரர்கள் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

ஏராளமான குடிமக்களும் இப்போரில் இறந்தனர். இறுதியில் அசோகர் வெற்றி பெற்றார். வெற்றிப் புன்னகை முகத்தில் தவழ அசோகர் போர்க்களத்தை வலம் வந்தார். தலை இழந்த முண்டங்களையும், உறுப்பு இழந்து துடித்துக் கொண்டிருந்த வீரர்ககளையும், இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்த வீரர்களையும் கண்டார். போரில் ஈடுபட்டமைக்காக மனம் வருந்தினர். இனி எப்போரிலும் ஈடுபடுவதில்லை என்று முடிவு செய்தார். ஆகவே இவரது முதற்போரே இறுதிப்போராக அமைந்தது. இத்தருணத்தில் அன்பையும் அஹிம்சையையும் போதிக்கும் புத்த சமயம் சிறந்த சமயம் என இவருக்கு தோன்றிற்று. ஆகவே இவர் புத்த சமயத்தைத் தழுவினார்.

**அசோகரும் புத்த மதமும்:**

அசோகர் புத்தசமயத்தில் சேருவதற்கு முன்னர் இந்து சமயத்தை சார்ந்தவராக இருந்தார். துவக்கத்தில் அவர் ஒரு சாதாரண இல்லறப் பௌத்தராகவே இருந்தார். புத்த சமயத்தில் சேர்ந்து இரண்டரை ஆண்டுகட்குப் பின்னர் இவர் ஒரு பௌத்த துறவியாக மாறினார். வேட்டையாடுவதை விட்டு விட்டார். உணவுக்காக பிராணிகளையும், பறவைகளையும் கொல்வதை தடுத்தார். வேள்விகளில் உயிர்ப்பலியிடுவதை அறவே ஒழித்தார். கி.மு.259ல் புத்த சமய புனித இடங்களைச் சென்று பார்த்தார். புத்தர் தவம் செய்த இடத்தை கயாவில் கண்டு வணங்கி மகிழ்ந்தார். அதன்பின் புத்த சமயத்தைப் பரப்ப சமயத் தூதர்களை பல நாடுகளுக்கும் அனுப்பி வைத்தார். கி.மு. 256ல் புத்த தருமத்தைப் பரப்ப "தரும மகாமாத்திரர்கள்" என்ற தனிப்பட்ட பாறைகளிலும் தூண்களிலும் பொறிக்கச் செய்தார். கி.மு. 255ல் புத்தர் பிறந்த *இடமான லும்பினி தோட்டத்தைச் சென்று பார்த்தார்.* பின்னர் இவர் தனது மகனையும் மகளையும் இலங்கைக்கு புத்த சமயத்தைப் பரப்ப அனுப்பினார். கி.மு.240ல் மூன்றாவது புத்த சமய மாநாட்டை பாடலிபுத்திரத்தில் கூட்டினார்.

**அசோகரின் இறுதிக்காலம்:**

அசோகர் தமது இறுதிக் காலத்தில் தமது செல்வம் அனைத்தையும் 'குக்குடராமா' என்ற பௌத்த மடத்திற்கு அளித்துவிட்டார். பின்னர் அவர் தட்சசீலத்தில் இறந்தார் என திபேத்திய இலக்கியங்கள் கூறுகின்றன.

**அசோகர் பற்றிய மதிப்பீடு:**

இவரைப் போல் தலை சிறந்த மன்னரை வேறு எந்த நாட்டிலும் காண முடியவில்லை என அசோகருக்கு புகழாரம் சூட்டுகிறார். ஏ.எ.வெல்ஸ், அசோகர் தாம் புத்த சமயத்தை சார்ந்தவராக இருந்த போதிலும் மற்ற மதங்களை மதித்துப் போற்றினார். இவர் பின்பற்றிய சமய சகிப்புத்தன்மை போற்றுதற்குரியது. இவர் மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் கூட மருத்துவ மூலிகைகளை ஆங்காங்கே பயிர் செய்து மருத்துவ வசதிகளை அதிகரித்தார். சாலையின் இருமருங்கிலும் நிழல்தரும் மரங்களை நட்டார். இத்தகைய அறப்பணிகளையும் செய்தமையாலேயே அசோகர் மாமன்னர் என்ற வரிசையில் முதலிடம் பெறுகிறார்.

வரலாற்றாசிரியர்கள் அசோகரை ஏனைய அரசியல், சமயத் தலைவர்களுடன் ஒப்பிட்டு இவரை மதிப்பிடுவதற்கு முயன்றுள்ளனர். அசோகரும் உரோமப்பேரரசர் கான்ஸ்டன்டைன் என்பவரும் அரசபதவியை தாங்கியவர்கள். இருவரும் தங்களது சமயத்தை பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தனர். சமயத்தத்துவத்தை கைக்கொண்டதில் அசோகர் மார்க்கஸ் அரேலியஸ் என்பவரை ஒத்திருக்கின்றார். குடிமக்களது நலனைப்பேணுவதிலும் சமயப்பொறைக் கொள்கையிலும் அசோகர் அக்பரை ஒத்திருக்கின்றார். போர்புரிவதில் அசோகர் *சீசர்*, நெப்போலியன் ஆகியவர்களைப் போன்று சிறந்து விளங்குகின்றார். புனிதபால் என்பவர் கிறித்தவசமயத்தை உலக சமயமாக மாற்றியதைப் போன்று அசோகர் புத்தசமயத்தை உலகசமயமாக மாற்றினார். பாலிமொழி வளம் பெற்றது கலையும் வளர்ந்தது. எனவேதான் இவரை எச்.ஜி.வெல்ஸ் அவர்கள் உலகவரலாற்றில் ஒளியூட்டும் ஓர் ஒப்பற்ற விண்மீனாகக் கருதுகிறார்.